கல்கி

KALKI 3-10-1971 40 காசு





She is the bearer of tradition...
IN
CENTURY SAREES
THE
CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.
Century — For 100% cotton textiles
Adroit/CM/ 43


இப்பெண்ணின் பேரெழிலுக்குக் காரணமென்ன?
Lakmé
VANISHING CREAM
முத்தென
ஒளிரச் செய்யும்
லக்மே வேனிஷிங் க்ரீம்
லக்மே வேனிஷிங் க்ரீம்
Lakmé
ASP/L-86


மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்
ஓ ஓ பி நீலம் உடனடியாக முற்றிலும்
கரைந்துவிடும் வெள்ளைத் துணிகள் ஒரே
சீராக பால்போல் பளிச்சிடுகின்றன.
உங்கள் சட்டைகள், புடவைகள், பெட்ஷீட்டு
கள் மற்ற துணிகள் எதையும் வெள்ளை
வெளேர் என்று ஆக்க மிகவும் சிக்கனமான
வழி இது. நீலப்புள்ளி விழாது, மஞ்சள்
திட்டு தெரியாது.
ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவுத்
தயாரிப்பு இந்தியாவின் மிக நவீன அல்டிராமரைன்
தொழிற்சாலையில் உருவானது
தயாரிப்பாளர்:
அல்டிராமரைன் & பிக்மெண்ட்ஸ்
லிமிடெட், அம்பத்தூர், சென்னை 53
OOB
BLUE
BEST ULTRAMARINE

சரோஜா: சுமதி நேற்று டிராமா எப்படி இருந்தது?

சுமதி: டிராமா மிகவும் நன்றாக இருந்தது. ஆனால் ஒரு ஆச்சரியம் என்னவென்றால் எல்லோரும் நான் உட்கார்ந்திருந்த இடத்தையே திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள். ஏன் பார்க்கிறீர்கள் என்று கேட்டு விட்டேன்.

சரோஜா: ஏன் பார்த்தார்களாம்?

சுமதி: அவர்கள் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு மாமியின் பட்டுப் புடவையைத்தான் பார்த்தார்களாம்.

சரோஜா: அவ்வளவு கவர்ச்சியா அது?

சுமதி: அழகு என்றால் அவ்வளவு அழகு! கவர்ச்சி யென்றால் அவ்வளவு கவர்ச்சி.

சரோஜா: அது எங்கு கிடைக்கிறது என்று விசாரித்தாயா?

சுமதி: நான் எல்லோருக்கும் முன்பே விசாரித்து விட்டேன். அந்தமாதிரி புடவைகள் மயிலாப்பூர் சாஸ்திரியார் கடையில்தான் தயாரிக்கிறார்களாம். அதற்கு "சாஸ்திரியார் ஸ்பெஷல் செக்" என்று பெயராம்.

உயர்ந்த ரக பட்டு ஜவுளிகளுக்கு

சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்

சென்னை: வடக்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை-4 போன்: 71719
கல்கத்தா: 14-A, பார்க் ஸைட் ரோடு - போன்: 46-3976
ஜெம்ஷெட்பூர்: மதுருவி சம்மேளனி, "L" ரோடு, பிஸ்தபூர்



சௌ. பாமா சிரஞ்சீவி: கண்ணன்

2-9-1971 அன்று திருக்கடையூரில் நடந்தேறிய திருமணத்துக்கும் 3-9-1971 அன்று வெளிப்பாளையத்தில் மணமகன் கொடுத்த வரவேற்பிற்கும் நேரில் வருகை தந்தவர்கள், பரிசுகள் வழங்கியவர்கள் மற்றும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

ஜெயலக்ஷ்மி சுப்ரமணியம்
வி. சுப்ரமணிய அய்யர்
நகரமன்ற உறுப்பினர்
நாகப்பட்டினம்

பண்டிட்
டி.கோபாலாசார்லுவின்

அருணா

மாதர்களின் ஆரோக்கிய சௌபாக்கியத்திற்கு

1898 ஆண்டிலிருந்து பிரசித்தி பெற்றது..

ஆயுர்வேதாஸ்ரமம்

பிரைவேட் லிமிடெட்
100, ஜி.என்.ரோட், சென்னை-17

கல்கி பொருளடக்கம்


விரோதிகிருது புரட்டாசி 17 - அக்டோபர் 3, 71




''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


கல்கிக்கு வரும் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றில் பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவை, போதிய தபால் தலைகளுடன் கூடிய முகவரியிட்ட உறையோடு வந்திருந்தால் அவ்வப்போது திருப்பி அனுப்பப்படுகின்றன. போதிய தபால் தலைகளுடன் வராத கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் பற்றி இக்காரியாலயம் பொறுப்பேற்பதற்கில்லை.

அட்டைப்படம்: சரஸ்வதி பூஜை - மணியம் செல்வன்



கோயமுத்தூர் தெலுங்குபாளையம், டாக்டர் V. அர்ஜுனன் (*Bone & Polio Specialist*) அவர்கள் புதல்வி சந்திராவுக்கும், திருச்சி-டாக்டர் **P. சுபாஷ்** M. B. B. S. அவர்களுக்கும் கோவையில் 26-8-71ல் மிக சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. வெளிநாட்டிலிருந்தும் நம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பலர் வந்து கலந்து கொண்டு சிறப்பித்து மணமக்களை வாழ்த்தினர்கள். வாழ்க மணமக்கள்.





காய்ச்சலைக் குறைத்த பனிக்கட்டிப்பை

கல்கி மலர் 31 இதழ் 10

தமிழ்த் திருநாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

ஈ. வே. ரா. பெரியார்

ராஜாஜி

பெரியார் ஈ. வே. ரா. நாயக்கர் பிறந்த வாரம் என்று விழா நடைபெறுகிறது. நாயக்கர் எனக்கு குருவல்ல, நானும் அவருக்கு குருவல்ல, ஆயினும் எங்களிடையே மாறாத அன்பு உண்டு என்பது பலருக்குத் தெரியாது. அது எங்கள் இருவருக்குத்தான் நன்றாகத் தெரியும். பரமாசாரியர் ஆதிசங்கரரை அவர் பிரச்சன்ன பௌத்தர் என்று சில துவைத சம்பிரதாய பிராமணர்கள் சொல்வதுண்டு. அதைப் போல் நான் பெரியார் ஈ. வே. ரா. வை பிரச்சன்ன ஆஸ்திகர் என்று கருதுகிறேன். "பிரச்சன்ன" என்றால் "வெளிப் படுத்தாமல் மறைந்து நிற்கும்" என்று பொருள். கோயில்களில் போற்றும் ஈசுவரனைப் பெரியார் ஒப்புக் கொள்ள மறுக்கிறார். ஆனால் அனைத்தையும் கடந்ததும் புலனுக்கு எட்டாததுமான ஒரு பொருள் உண்டு என்பதே பெரியார் உள்ளத்தில் மறைந்து நிற்கும் கருத்து என்பது என் உறுதி. என்னைப்பற்றி அவர் நினைப்பதும் நான் பகுத்தறிவுப் பிரியன், உண்மையில் ஆஸ்திகன் அல்ல என்றே இருக்கலாம். "ஆஸ்திகன்" என்றால் "ஏமாந்தவன்" என்பது அவர் கருத்து. சாஸ்திரமும் ஆஸ்திகத்தில் கொண்டு போய் விடுகிறது. பகுத்தறிவும் ஆஸ்திகத்தில் கொண்டு போய் விடுகிறது.

"மறை" என்ற சொல்லும் "கடவுள்" என்ற சொல்லும் தமிழ் மொழியில் மட்டுமே உள்ள சிறந்த சொற்கள். "மறைந்து நிற்கும் பொருள்", "அனைத்தையும் கடந்து நிற்கும் பொருள்", இதைச் சொல்லும் நூலுக்குத் தமிழில் பெயர் "மறை". இதற்கு ஈடான சொல் வேறு எந்த பாஷையிலுமில்லை. ஈசனுக்குக் "கடவுள்" என்ற தமிழ்ச் சொல்லைப் போலும் வேறு எந்தப் பாஷையிலும் இல்லை. தமிழில் பெருமை கொண்டால் மட்டும் போதாது. ஆதித் தமிழரின் அறிவைப் பின் பற்றித் தெய்வபக்தர்கள் ஆவோமாக.

காந்தி ஜயந்தி

அக்டோபர் இரண்டாந் தேதி என்றும் உள்ளம் உவகையில் துள்ளிய காலமும் இருந்தது. ஆனால் இந்த ஆண்டோ காந்தி ஜயந்தியை எண்ணும்போதே மகத்தான மனவேதனையும், குற்ற உணர்வும் உண்டாகின்றன. கடந்த பொதுத் தேர்தலில் நடந்த பயங்கர ஊழலுக்குப்பின் காந்தி ஜயந்தி கொண்டாடப் பாரதத்துக்குத் தகுதி இருக்கிறதா என்றே நினைக்கத் தோன்றுகிறது. அதுவும் போதாததற்கு மதுவிலக்குக்கு மங்களம் பாடி, குடியரசைக் குடியர்களின் அரசாக்கி விட்டபின் எப்படி மனமகிழ்ச்சியுடன் மகாத்மாவுக்கு ஜயந்தி விழாக் கொண்டாட முடியும்?

தருமத்தையும் தெய்வத்தையும் மறந்து விட்டவர்களின் ஆட்சியில் மகாத்மாவின் ஆன்மாவுக்கு எப்படி வரவேற்பு அளிப்பது? ஆனாலும், நாம் அப்படித் தயங்க வேண்டாம், மனம் சாம்பிப் போக வேண்டாம். எத்தனையோ கொடுங்கோன்மைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் மனம் தளராமலே அண்ணல் போராடித் தர்மத்துக்கு வெற்றி பெற்றுத் தந்தார். மறுபடியும், 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வி' விட்டது. ஆயினும் கவி சொன்னது போல் 'தருமம் மறுபடி வெல்லும்'. நாம் அண்ணலை அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் அவரது ஆன்மா நம்மை மறவாது. தனது தார்மிக சக்தியை அது நம் திருநாட்டில் தொடர்ந்து பரப்பியே வரும். அந்தச் சக்தி மறுபடியும் வெற்றி காணவும் செய்யும். இந்த நம்பிக்கையில் பிறந்த உற்சாகத்துடன் காந்தி ஜயந்தி கொண்டாடுவோமாக.

ராஜாஜியின் கருத்துக்கள்

எதிர்ப்புக் கடமை

வெற்றியல்ல குறிக்கோள். பழைய காங்கிரஸ் கைவிட்டாலும் மற்றவர்களும் கைவிட்டாலும் நாம் தனியே நின்றாலும் தவறிழைக்கப்படும்போது எதிர்ப்பதே கடமை என்கிற உணர்வுடன் செயலாற்றுவோம். இக்கடமையை நாம் நிறைவேற்ற வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தை, அரசியல் சட்டத்தைக் கிழித்தெறியும் கம்யூனிஸ்ட் — இந்திரா கூட்டுச் சதி நமக்களிக்கிறது. தனியாய் நிற்பினும் அதை எதிர்ப்பது நம் கடமை.

சீன அபாயம் வேறு வகையானது. அமெரிக்காவும் கம்யூனிஸ்ட் சீனமும் வியாபாரக் கூட்டுறவு செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். பீகிங் ஆட்சியுடன் அமெரிக்கா இப்போது நட்புக் கோருகிறது. இது சீன அபாயத்தை இரட்டித்து விட்டது. ஆனபடியால் இந்திய—ருஷிய உடன்படிக்கை சரியான ஏற்பாடாகும். அதை நாம் ஆதரிக்க வேண்டும். அதை எதிர்ப்பது தவறாகும்.

சமீபத்தில் சுதந்திரக் கட்சி பெங்களூரில் கூடிய கூட்டத்தில் இந்தியா — ருஷியா ஒப்பந்தத்தைக் கண்டித்துள்ளது. என் ஆழ்ந்த யோசனைப்படி இந்தக் கண்டனம் தவறு. இந்திய — ருஷிய ஒப்பந்தத்தை எல்லோரும் ஆதரிக்க வேண்டும்.

கள்ளில் கள்ளச் சந்தை

சர்க்காரே லைசென்ஸ் தந்து கள்ளுக் கடைகள் நடக்க அனுமதிப்பது மகத்தான தீமையாகும். இந்தியா இதை விரும்பவே இல்லை. இதனால் ஏழைகளுக்கு ஏற்படும் கஷ்டம் பெரிது. இது ஏழைகளைப் பரம ஏழைகளாக்கும் திட்டம். கள் விற்பனைக்குச் சர்க்காரே லைசென்ஸ் தந்து ஏகபோக வியாபாரமாக்கிக் கொண்டு விட்டால், கள்ளச் சாராயம் காய்ச்சுவது நின்றுவிடும் என்பதாக ஒரு வாதம் செய்கிறார்கள். மதுவிலக்கை அனுஷ்டிக்காத மகாராஷ்டிரத்தில் கள்ளச் சாராயத்துக்கு ஏராளமான உயிர்கள் பலி

தியான மண்டபத் திருப்பணி

அமைதி குன்றி, மனம் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தியானமும், புலனடக்கமும், தெய்வ பக்தியும்தான் வாழ்வைப் பொருள் உள்ளதாகச் செய்யக் கூடியவை ஆகும். ஆகவே பல இடங்களில் தியான மண்டபங்கள் ஏற்பட்டுப் பக்திநெறி தழைக்க வேண்டியது அவசியமாகும்.

இமயமலைப் பகுதிகளில் முப்பது ஆண்டுகளாகத் தவம் புரிந்தவரும், கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாக ஐந்தருவி அருகில் தவம் மேற்கொண்டொழுகி வருபவருமான ஸ்ரீமத் ஸ்வாமி சங்கரானந்தா அவர்கள், தாம் பெற்ற இன்பத்தையும், சாந்தி நிலையையும் மற்றோரும் பெறுமாறு மனம் கனிந்து வழிகாட்டி வருகின்றார்கள். ஆத்மிக நல்வாழ்வினை அன்பர்கள் பலரும் அடைவதற்காக, தியானம் புரிவதற்கான ஓர் அழகிய மண்டபம் அமைத்து வருகின்றார்கள். அந்த மண்டப வேலை நிறைவு பெறுவதற்கு இன்னும் ஓர் இருபத்திஐயாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் திருப்பணியில் அவரவர்களுக்கு இயன்ற பொருளுதவி புரிந்து, எல்லோரும் பங்கு பெற வேணும். பணம் அனுப்புவதற்குரிய முகவரி: ஸ்வாமி சங்கரானந்தா அவர்கள், சங்கராசிரமம், ஐந்தருவி, குற்றாலம் போஸ்ட், திருநெல்வேலி மாவட்டம்.

அளகேசன் மணிவிழா

பண்புக்கும் பெயரெடுத்த ஒரு பெருங் குலத்தில் பிறந்தவர் திரு ஓ. வி. அளகேசன். மெத்தப் படித்தவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி இவற்றில் வல்லுநர். மத்திய சர்க்காரில் ரயில்வே துறை உதவி மந்திரியாகவும், பெட்ரோலியத் துறை ராஜாங்க மந்திரியாகவும், எதியோப்பியாவில் இந்தியத் தூதராகவும் நற்பணி புரிந்தவர். இவரது ஷஷ்டியப்த பூர்த்திவிழா செப்டம்பர் 3ந் தேதி திருப்பதி ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் சந்நிதியில் வெகு விமரிசையாக நடந்தது. செப்டம்பர் 13ந் தேதி சென்னை கலைவாணர் அரங்கில் ஸ்ரீ வி. ஆர். பட்டாபிராமன் தலைமையில் நடந்த பாராட்டு விழாவில் பல கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், பல துறைப் பிரமுகர்களும் ஸ்ரீ அளகேசன் அவர்களுக்கு நல்வாழ்த்துக் கூறினர். இதோ நாமும் அவர்களோடு சேர்ந்து கொள்கிறோம். இந்தச் சுப நிகழ்ச்சியை யொட்டி ஸ்ரீ ஓ. வி. அளகேசன் மணி விழா அறக்கட்டளை ஒன்றும் நிறுவப் பட்டுள்ளது. இதில் சேரும் தொகையாவும் கோவில் திருப்பணிகளுக்குப் பயனுறும் என்றும் தெரிகிறது. வாழ்க அளகேசன், வாழ்க பட்டம்மாள் அளகேசன்!



யாகி இருப்பதிலிருந்து இந்த வாதம் எவ்வளவு தவறானது என்பது நிரூபணமாகிறது. (இதேபோல் ஒரு பயங்கரப் பட்டாளச் சாவு சென்னையிலும் நேர்ந்துவிட்டது). கள்ளில் கள்ள மார்க்கெட் தோன்றியதற்குக் காரணம் சட்டப்படி மது சப்ளை செய்ய முடியவில்லை என்பது அல்ல; கள்ள மார்க்கெட்டில் கொள்ளை லாபம் உண்டு என்பதற்காகவே சட்டத்தை மீறி வியாபாரம் நடத்தப் படுகிறது.

அதிசயிக்க ஏதுமில்லை

ருஷிய தூதர் ஸ்ரீ ட்ஸாராப்கினின் தில்லி விஜயத்தை அதிசய சம்பவமாகப் பத்திரிகை நிருபர்கள் வர்ணித்திருக்கிறார்கள். எனக்கு இதில் அதிசயம் ஏதுமேயில்லை. ருஷிய தூதர் வந்ததையும், ஸ்ரீமதி இந்திரா ருஷியாவுக்குப் போவதையும் குறித்து நான் ஆச்சரியம் கொள்ளவில்லை. இந்திய – ருஷிய உடன்படிக்கையைப் பற்றி இந்தியாவின் சரியான கருத்து என்ன என்று அறிய ருஷியா விரும்புகிறது. இது இயற்கையே. இந்திய சர்க்கார் இதனை ஓர் உண்மையான உடன்படிக்கையாக மதித்து நடக்குமா, அல்லது ராஜரீக மாளிகையில் ஒரு சாளரத்தை அலங்கரிக்கும் தந்திர ஜோடனையாகவே கருதுமா என்று ருஷியா அறிய விரும்புவது நியாயமே.

பெர்மிட் - லைசென்ஸ் - மது


மது என்பது தீமை எனில், தொழில் துறையில் இப்போது நிலவும் பெர்மிட் – லைசென்ஸ் முறை அதற்குச் சமமான மற்றொரு தீமையாகும். இந்த முறையால் தொழில் வளர்ச்சி ஒடுக்கப்படுகிறது; ஏக போக்கியங்கள் ஏற்படுகின்றன; இதை யெல்லாம்விட மோசமானது யாதெனில், பெர்மிட் – லைசென்ஸ் பெறுகிறவர்கள் தரும் பணத்தைக் கொண்டே ஒரு கட்சி தன்னைப் பதவியில் நிலைநாட்டிக் கொள்வதற்குப் பலம் பெறுகிறது.

பல முறை சொன்ன இவ்விஷயத்தை நான் ஏன் மீண்டும் சொல்கிறேன்? இந்தப் பெர்மிட் முறையை அகற்றுவது மிகவும் எளிதாக இருந்தும்கூட, அவ்வாறு செய்வதற்கு உண்மையான முயற்சி ஏதும் எடுக்காததால்தான் மறுபடியும் சொல்கிறேன். பெர்மிட் – லைசென்ஸ் முறையை நீடிப்பது ஒரு குற்றம்; கௌரவம் வாய்ந்த எந்தக் கட்சியும், கட்சித் தலைவர்களும் அவமானம் கொள்ள வேண்டிய குற்றம். சர்க்காருக்குப் பணம் வேண்டும் என்பதற்காக மதுக் கடைகளைத் திறப்பது போல், கட்சிக்குப் பணம் வேண்டும் என்பதற்காக பெர்மிட் – லைசென்ஸ் முறை அமல் நடத்தப்படுகிறது. ஆனால் ஒரு வித்தியாசம், கட்சிக்குக் கிடைக்கும் பணம் வெளியில் தெரியாது.


வைஷ்ணவ
ஜனதோ



அஹிம்சை



ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சங்கராசாரிய ஸ்வாமிகள்

எல்லா மக்களுக்கும் பொதுவான, சாமான்ய தர்மங்களில் அஹிம்சை ஒன்று என மனு தர்ம சாஸ்திரம் விதிக்கிறது. மனத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளும் யோகத்துக்கு ஓர் அங்கமாகவும் அஹிம்சை கருதப்படுகிறது. அஹிம்சையின் பெருமை அப்படிப்பட்டது.

சரீரத்தால் ஹிம்சை செய்யக் கூடாது என்பதுமட்டும் அஹிம்சையல்ல; யாருக்கும் எவ்விதக் கஷ்டமும் ஏற்பட வேண்டுமென்று மனத்தாலும் நாம் எண்ணக் கூடாது. வாயால் பிறருக்குக் கஷ்டம் தருகிற பேச்சைப் பேசக் கூடாது.

ஸ்வபாவத்தில் நம்மில் யாருக்கும் பிறரை ஹிம்சித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசை இல்லை; ஆனாலும் பிறர் ஏதாவது குற்றம் செய்வதாக நமக்குத் தோன்றினால் அவர்களுக்குப் பல விதத்தில் ஹிம்சை தர எண்ணுகிறோம். நம்முடைய சின்னஞ் சிறு குழந்தை தெரியாத்தனத்தால் நம் வீட்டில் நெருப்பு வைத்து விட்டால் குழந்தையை ஹிம்சிக்கிறோமா? அப்படிச் செய்ய மாட்டோம். நெருப்பை அணைக்கவே முற்படுவோம். மறுநாள் முதல் அந்தக் குழந்தை நெருப்பண்டை போகாமல் ரக்ஷிப்போம். நமக்குத் துன்பம் தருவதாகத் தோன்றுகிற எவரையும் அந்தக் குழந்தையாகவே பாவிக்க வேண்டும். அவர் மறுபடியும் தவறு செய்யாமல் அவரை அன்புடன் காக்க வேண்டும். அவர்மீது துவேஷம் பாராட்டி, பதிலுக்கு ஹிம்சை தரக் கூடாது. இதுதான் உண்மையான அஹிம்சை.

இது நம் மனத்தை வசப்படுத்திக்கொள்ளும் யோகத்துக்கு மிகவும் பிரயோசனமாகிறது. மனம் பூதம் போன்றது. ஆனால் பூதத்தை - வேதாளத்தை - விக்கிரமாதித்தன் வசப்படுத்திய பின் அது அவனுக்காக எவ்வளவு காரியம் செய்தது! அப்படியே வசப்பட்ட மனம் எவ்வளவோ நல்லதைச் செய்யும்.

யானை கட்டுப்படா விட்டால் உலகுக்கு உபத்திரவம்தான். ஆனால் கட்டுப்பட்டு விட்டால் எத்தனை நல்ல காரியங்களை அதன் மூலம் சாதிக்க முடிகிறது! யானைபலம் கொண்ட மனத்தைக் கட்டுப்படுத்தினாலும் எத்தனையோ நல்லதைச் செய்யலாம். ஆஞ்சநேய ஸ்வாமி மனோஜயம் செய்ததால்தான் அவ்வளவு சக்தி பெற்றிருந்து அத்தனை சத்காரியங்களைச் செய்தார். மனத்தின் சக்தி அபரிமிதமானது. இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் மாயை என்கிற ஒரு மனம் தான் ஸ்ருஷ்டித்திருக்கிறது. இந்தச் ஸ்ருஷ்டியில் இருக்கிற ஒரு சிறிய எறும்பின் சின்ன மனம் இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் பாய்ந்தோடுகிறது!

'அஹிம்சையை அநுசரித்தேன், மனம் வசப்பட்டது' என்று எத்தனை மகான்களும், யோகிகளும் சொல்லியிருக்கிறார்கள்!

அஹிம்சையின் முக்கிய பிரயோஜனம் சித்தம் அடங்குவதே. ஆனால் அஹிம்சையை அப்பியசிப்பதால், நாம் உத்தேசிக்காமலே வேறொரு பலனும் ஏற்படும். இதற்கு அவாந்தரப் பிரயோஜனம் என்று பெயர். நீங்கள் எல்லோரும் இந்த மடத்துக்குப் பூஜை பார்ப்பதற்காகத்தான் வந்தீர்கள். அதுதான் உங்கள் உத்தேசம். அதோடு கூட மேளம் கேட்பீர்கள்; ரொம்ப நாளாகப் பார்க்காத பலரை இங்கு பார்த்தீர்கள்; இப்போது உபந்யாசம் கேட்கிறீர்கள் — இதெல்லாம் உத்தேசிக்காமலே கிடைக்கும் அவாந்தரப் பிரயோஜனம்.

இவ்வாறே ஒருவன் மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களாலும் அஹிம்சையைப் பூரணமாகச் சாதித்து விட்டால் அவனுடைய சங்கற்பமின்றியே, அவனுடைய சந்நிதானத்துக்கு வருகிற எல்லாப் பிராணிகளும் தாமாகவே அஹிம்சா மயமாகி விடும்.

"அஹிம்ஸா ப்ரதிஷ்டாயாம்
தத்ஸந்நிதௌ வைரத்யாக:"

- யோக சூத்திரம்

அஹிம்சையை முற்றிலும் அநுஷ்டித்தவன் இருக்குமிடத்தில் குரூரமானவர் மனத்திலும் சாந்தம் உண்டாகும். எனவே, தான் அன்போடு இருப்பதே இவனது சங்கற்பமானாலும், மற்றவர்களையும் அன்பாக ஆக்கும் அவாந்தரப் பிரயோஜனமும் கிடைக்கிறது.

சந்நியாசி பூரண அஹிம்சையை அநுஷ்டிக்க வேண்டும். அவன் இலையைக் கூடக் கிள்ளக் கூடாது. சமைத்துத் தாவரங்களை ஹிம்சிக்கக் கூடாது. அஹிம்சை காரணமாகத்தான் அவனுக்கு அக்னி காரியமே விதிக்கப்படவில்லை. ஹோமம், யாகம் எதுவும் அவனுக்கு இல்லை. அவன் அக்னி காரியம் செய்யாததால் அவனுக்கும் கடைசியில் தகனம் என்ற அக்னி காரியம் இல்லை. அவனுடைய சரீரத்தை பூமியில் அடக்கம் செய்கிறார்கள். 'சகல பிராணிகளுக்கும் என்னால் பயம் இல்லாமற் போகட்டும்' என்று சந்நியாசம் வாங்கிக்கொள்பவன் பிரதிக்ஞை செய்கிறான்.



மகுடபதி

அமரர் கல்கி

இருபத்தாறும் அத்தியாயம்
காணமற்போன குழந்தை

"என் அருமைத் தோழி பங்கஜத்துக்கு, உன் அன்பும் ஆறுதலும் நிறைந்த கடிதம் கிடைத்தது. ஆமாம்; என் வாழ்க்கையில் மகா அதிசயமான சம்பவங்கள் எல்லாம் நடந்திருந்தன. நீ கற்பனை செய்து எழுதிய எந்த நாவலிலும் இம்மாதிரி அற்புத சம்பவங்கள் நடந்திருக்க முடியாது. கடிதத்தில் விரிவாக எழுதுவதற்கில்லை. நேரில் பார்க்கும் போது எல்லாம் சொல்லுகிறேன். என்னுடைய காதலருக்கு நீ அன்று இரவு செய்த ஒத்தாசையைப் பற்றிச் சொன்னார். ரொம்ப ரொம்ப வந்தனம். மற்றவை நேரில்.

இப்படிக்கு, செந்திரு''

மேற்படி கடிதத்தை பங்கஜம் கையில் வைத்துக் கொண்டு அதைத் திரும்பத் திரும்பப் படிப்பதும், எழுந்து அறைக்குள் நடமாடுவதும், ஜன்னல் வழியாய் எட்டிப் பார்ப்பதுமாய் இருந்தாள். ''இன்னும் அப்பா வரக் காணுமே?'' என்று அதிருப்தியுடன் முணுமுணுத்துக்கொண்டாள்.

கடைசியில் வாசலில் வண்டி வந்து நின்றது. ஐயாசாமி முதலியார் வண்டியிலிருந்து இறங்கி உள்ளே வந்தார். பங்கஜம் ஓடி வரவேற்று அவரைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து ஈஸிசேரில் உட்கார வைத்தாள்.

''சொல்லுங்கள்; உடனே சொல்லுங்கள். ஒன்று விடாமல் சொல்ல வேணும்!'' என்றாள்.

''மூச்சு விடுவதற்குக் கொஞ்சம் அவகாசம் கொடேன்!''என்றார் முதலியார்.

''அதெல்லாம் முடியாது. உடனே சொல்ல வேண்டும். என்ன, ஆச்சரியம் அப்பா! மகுடபதி கள்ளிப்பட்டிக் கவுண்டருடைய சொந்தப் பிள்ளையாமே? நிஜந்தானா?'' என்று பங்கஜம் துடித்தாள்


''நிஜந்தான், அம்மா, நிஜந்தான். இன்னும் எவ்வளவோ அதிசயம். கேட்டாயானால், நீ கதை எழுதுவதையே விட்டுவிடுவாய்!'' என்றார்.

பிறகு, முதலியார் நீட்டி முழக்கி வளர்த்திக் கூறிய வரலாற்றின் சாராம்சம் பின்வருமாறு:

மகுடபதியின் தாயார் கள்ளிப்பட்டிக் கவுண்டருடைய இரண்டாவது மனைவி. மகுடபதிக்கு நாலு வயதாயிருந்த போது அவள் அடுத்த பிரசவத்துக்காகச் சேவல்பாளையத்திலிருந்த தன் தாயார் வீட்டுக்குப் போனாள். மகுடபதியையும் பின்னோடு அழைத்துப் போயிருந்தாள்.

கவுண்டருடைய மற்ற மனைவிமாருக்கும் ஆண் குழந்தைகள் இல்லை. ஆகையால் அவர்களுக்கெல்லாம் மருடபதியின் தாயிடம் ரொம்பவும் வயிற்றெரிச்சல். இரண்டாவது கர்ப்பத்தின்போது அவர்கள் சாப்பாட்டில் விஷபதார்த்தம் கலந்து தனக்குக் கொடுத்துவிட்டதாக அவள் சந்தேகம் கொண்டிருந்தாள். அதற்குத் தகுந்தாற்போல் இரண்டாவது குழந்தை செத்துப் பிறந்தது. தானும் பிழைப்பது துர்லபம் என்று அவளுக்குத் தெரிந்து போகவே அவனிடம் அந்தரங்க விசுவாசம் வைத்திருந்த பெரியண்ணனைக் கூப்பிட்டு, ''மாமா! இந்தக் குழந்தையை நீதான் காப்பாற்ற வேண்டும். கன்னிப்பட்டியிலிருந்தால் கட்டாயம் என் சக்களத்திமார்கள் கொன்றுவிடுவார்கள். எங்கேயாவது கண் காணாத சீமைக்குக் கொண்டு போய்விடு. வயதான பிறகு அழைத்துக் கொண்டு வந்து இவனுடைய அப்பனிடம் ஒப்புவி. அடையாளத்துக்கு இதைக் காட்டு!'' என்று சொல்லி, குழந்தையின் இடது காதுக்குப் பின்னால் முக்கோணம் போல் இருந்த மூன்று மச்சங்களையும் காட்டினாள். தான் இரகசியமாகச் சேர்த்து வைத்திருந்தபணத்தையும் தன் நகைகளையும் கூடப் பெரியண்ணனிடமே கொடுத்து, தான் சொன்னபடி செய்வதாக அவனிடம் சத்தியமும் வாங்கிக் கொண்டாள். இதெல்லாம் அவளுடைய பிறந்த வீட்டில்கூட யாருக்குமே தெரியாது.

பெரியண்ணன் அன்றிரவே குழந்தையை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான். ரயிலில் ஏறினால் தெரிந்து போய்விடுமென்று கால்நடையாகவே சிலநாள் பிரயாணம் செய்து கொண்டு போனான். குழந்தைக்குப் பெரியண்ணனிடம் ஆசை உண்டு என்றாலும், தாயார், பாட்டி முதலியவர்களைப் பிரிந்ததனாலும், ஊர் ஊராய்ப் போனதாலும் ரொம்பவும் அழுது தவித்துக் கொண்டிருந்தது. பெரியண்ணன் பழனிக்குப் போனபோது, அங்கே கிருத்திகை உற்சவம் பலமாக நடந்து கொண்டிருந்தது. ஏகக் கூட்டம். பெரியண்ணன் எவ்வளவோ நல்லவன்தான்; ஆனால் மதுபானப் பழக்கம் உள்ளவன். ஒரு கள்ளுக் கடைக்குப் பக்கத்தில் குழந்தையை விட்டு விட்டுக் கடைக்குள் போனான். திரும்பி வந்து பார்த்தால் குழந்தையைக் காணோம். அலறிப் புடைத்துக் கொண்டு அந்த உற்சவக் கூட்டத்தில் தேடு தேடு என்று தேடினான். பிரயோசனப் படவில்லை. உற்சவம் முடிந்த பிறகும் ஒரு மாதம் வரையில் பழனியில் தங்கித் தெருத் தெருவாய்ப் பைத்தியக்காரன் போல் சுற்றி



அலைந்து கொண்டிருந்தான். பிரயோசனப்படவில்லை. ஊருக்குத் திரும்பிப் போகவும் மனம் வரவில்லை. ஆகவே, கண்டிக்குப் போய்விட்டான். பல வருஷங்கள் கழித்துத் திரும்பி வந்து கோயமுத்தூர் ஜில்லாவிலேயே பெரியகுடிகாரன் என்று பெயர் வாங்கினான். இப்படிப்பட்ட சமயத்திலேதான் அவன், காங்கிரஸ் தொண்டு செய்து வந்த மகுடபதியைச் சந்தித்தான். முதலில் பரம விரோதியாயிருந்து, கேஸில் தனக்குச் சாதகமாகப் பேசி விடுதலை செய்தபிறகு அவனுக்கு ரொம்ப வேண்டியவனாகி மதுவிலக்குப் பிரசாரமும் செய்து வந்தான். மகுடபதி ஒரு நாள் தனக்குத் தாய் தகப்பன் இல்லையென்றும், தன்னுடைய வளர்ப்புப் பெற்றோர்கள் பழநி உற்சவக் கூட்டத்தில் தன்னைக் கண்டெடுத்தார்கள் என்றும் சொன்ன போது பெரியண்ணனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மகுடபதி நன்றாய்த் தூங்கும் சமயத்தில் அவனுடைய இடது காதை மடித்துப் பார்த்து அடையாளமிருப்பதைத் தெரிந்து கொண்டான். அதைத் தக்க சமயத்தில் வெளியிட வேண்டுமென்று காத்திருந்தான்.

கூனூர் மடத்திலிருந்து மகுடபதி கிளம்பிய போது பெரியண்ணனுக்கு மனம் சமாதானம் ஏற்படவில்லை. கொஞ்ச தூரம் பின்னாலேயே அவனைத் தொடர்ந்து போனான். தக்க சமயத்தில் பங்களாவுக்குள் தோட்டக்காரனை மீறிக் கொண்டு நுழைந்து உண்மையை வெளியிட்டு, மகுடபதியின் உயிரைக் காப்பாற்றியதுடன், கள்ளிப்பட்டிக் கவுண்டரையும் புத்திர ஹத்தி பாவத்திலிருந்து காப்பாற்றினான்.

* * *

எல்லாம் கேட்ட பிறகு, ''சரி, அப்பா! இப்போது எப்படி இருக்கிறார்கள் எல்லாரும்? சந்தோஷமாயிருக்கிறார்களா?'' என்று பங்கஜம் கேட்டாள்.



''சந்தோஷத்துக்கு என்ன குறைவு? கார்க்கோடக் கவுண்டர் மட்டும்தான் படுத்த படுக்கையாகி விட்டார். ஏற்கனவே, அவருக்குக் கொஞ்சம் பட்ச வாதரோகம் உண்டாம். இந்த அதிர்ச்சியினல் அது முற்றிவிட்டது. கைகால் கூட அசைக்க முடியாமல் கிடக்கிருர். ஆனலும் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து விட்டார். சொத்தையெல்லாம் மருடபதிக்கே 'உயில்' எழுதி வைத்திருக்கிருர். பையன் இருக்கிருனே, உத்தமமான குணம். உயர்ந்த நோக்கம். பூர்வீகமான சொத்தை மட்டும் தான் வைத்துக் கொண்டு கள்ளுக் கடையில் வந்த பணத்தையெல்லாம் தர்மத்துக்குக் கொடுத்து விடுகிருனும். கூனூர் சச்சிதானந்த மடத்துக்கு நல்ல வேட்டை. நமது சைவ சித்தாந்தக் கழகத்துக்குக் கூட நன்கொடை கேட்டிருக்கிறேன்... இருக்கட்டும், பங்கஜம்! அந்தப் பையன் நம்ம வீட்டிலே வந்து ஒரு நாள் சமையல் பண்ணினனும். நீதான் அவனுக்குப் பணம் கொடுத்துக் கூனூருக்கு அனுப்பினயாமே?'' என்ருர்.

''ஆமாம், அப்பா!''

''பலே கைகாரி நீ! உன் தோழிக்கு உன்னை உடனே பார்க்க வேணுமாம். இன்னும் எத்தனையோ அந்தரங்கம் உன்னிடம் சொல்ல வேண்டியிருக்கிறதாம். நாளைக்கே புறப்பட்டு வரச் சொல்லியிருக்கிருள்.''

''நாளைக்கா, அப்பா! இன்றைக்கே புறப்படக் கூடாதா?'' என்ருள் பங்கஜம். (தொடரும்)

சமூகநலப் பணி



ஏ. எம். எம். தரும ஸ்தாபனத்தினல் அம்பத்தூரில் நடத்தப்பட்டுவரும் ஸர் ஐவன் ஸ்டெடிபோர்டு மருத்துவமனையில் புதிய எக்ஸ்-ரே கருவியைச் சுகாதார அமைச்சர் திரு அன்பழகன் சமீபத்தில் இயக்கி வைத்தார்.

50 நோயாளிகளுக்கு மருத்துவ மனையில் உள்ளிருப்பு சிகிச்சையும், சுமார் 300 பேர்களுக்குத் தினசரி வைத்திய உதவியும் இங்கே அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வட்டாரத்தில் சுமார் பத்துப் பதினைந்து மைல் சுற்றுப்புறக் கிராம மக்களுக்கு இந்த மருத்துவ மனை உயர்ந்த சேவை செய்து வருகிறது. ஏ. எம். எம். தரும ஸ்தாபனத்தின் சமூக நலப் பணியின் சிறப்பைப் பற்றி, எக்ஸ்-ரே கருவியை இயக்கி வைத்துப் புதிய இ. என். டி. பகுதியையும் குழந்தைப் பகுதியையும் தொடங்கி வைத்த தமிழகச் சுகாதார அமைச்சர் திரு க. அன்பழகன் பாராட்டிப் பேசினர்.



திடீர் தேநீர்

திடீர் பையை லிப்டன் தேயிலை ஸ்தாபனத்தார் அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். இந்தத் திடீர் பையில் வடிகட்டும் சிரமமில்லை. கோப்பையில் இந்தத் தேயிலைப் பையைப் போட்டுக் கொதிக்கும் நீரை விடவேண்டும். தேயிலைப் பையில் இணைக்கப்பட்டுள்ள நூலைப் பிடித்துக்கொண்டு தேயிலைப் பையைக் குலுக்கினல் தேநீர் தயாராகிவிடுகிறது. இந்தியாவில் இந்த விதத் தேயிலைப் பையை முதன் முறையாக உபயோகத்துக்குக் கொண்டு வந்துள்ளனர் லிப்டன் ஸ்தாபனத்தார். இந்தத் திடீர் பையைச் சமீபத்தில் தமிழக சுற்றுலா அமைச்சர் திரு ராஜாராம் அவர்களைக் கொண்டு அறிமுகப்படுத்தி வைத்தனர். பதினைந்து வருஷங்களாக லிப்டன் டீ அருந்தி வரும் தாசப்பிரகாஷ் ஹோட்டல் மானேஜர் திரு ஆனந்தராவ் இந்த வைபவத்துக்குத் தலைமை தாங்கினர்.

அம்மா

ரா.கணபதி



ஸமுன்மீலத் ஸம்வித் கமல மகரந்தைக ரஸிகம்
பஜே ஹம்ஸ த்வந்த்வம் கிமபி மஹதாம்
மானஸ சரம் !
யதாலாபாத் அஷ்டாதசகுணித வித்யா பரிணதி:
யதாதத்தே தோஷாத் குணமகிலம் அத்ப்ய:
பய இவ !!

• • •

அற்புத ஹம்ஸத் தம்பதியாம் !
அறிவுக்கமல மது அருந்துவராம்!
அருளுடை மனப்பொழில் நீந்துவராம் !
அருங்கலை அனைத்தும் அளிப்பவராம்!
அற்பர்தம் குற்றமாம் அப்பினை நீக்கி
சொற்பமே காணும் குணப்பால்
கொள்ளும்
அன்ன வடிவான அன்னையை அண்ணலை
அன்புடன் உன்னி இன்புறுவோமே!

ஆதிசங்கரர் அருளிய ஸௌந்தர்ய லஹரி
(ச்லோ.38)

சாந்தாம் சாரத பார்வணேந்து வதனாம்
பத்மாஸனே ஸம்ஸ்திதாம்

பக்தானாம் பாவன ராமக்ருஷ்ண
சரணம்போஜாம் ஹ்ருத்தீம் ஸிவாம் !

ஸம்ஸாரானல தக்த பக்த ஹ்ருதயே
ச்வைத் க்ருபா வர்ஷிணீம்


அம்பாம் நிஸ்துல கீர்த்தனீய சரிதாம்
ஸ்ரீ சாரதாம் பாவயே ||

(தேவி சாரதாமணி தியானம்)

• • •

சாந்தை, சரத்கால சந்திர முகத்தினள்,
சாற்றரும் பதுமாசனத்தினில் வீற்றவள்
பாவனர் ராமகிருஷ்ணரின் பதமலர்
பக்தியுடன் பணி பரமசிவை அவள்,
அனலென பவத்தீ அல்லல்செய் உள்ளத்தில்
அனவரதம் அருள் மழையினைப்
பொழிபவள்,
நிகரிலா இவளது வாழ்வெனப் போற்றிப்
பகரும் சரிதைகொள் சாரதை
அம்பிகை,
நினைவினை நெஞ்சினுள்
நிறைத்திடு வோமே !





படித்துறையிலே...

புண்ணிய தீர்த்தத்தின் படித்துறையில் நிற்கிறோம். அலை எழாத தெளிந்த திருக்குளம் அது. தடாகத்தைப் பார்க்கும்போதே ரம்மியமாக இருக்கிறது. ஆனாலும் குளத்தில் அமிழ்ந்திக் குளித்துப் பழகாதவருக்கு உரிய கூச்சமும் உண்டாகிறது. புண்ணிய தீர்த்தத்தில் காலை வைத்துப் பிரவேசிப்பதா, தெளிந்த தடாகத்தில் துளைந்து கலக்கலாமா என்று மனக் கலக்கம் உண்டாகிறது. சாரதையின் சரிதை மகத்தான புண்ணிய தீர்த்தம்.

> சொல்லினுக்(கு) எளிதாகவும் நின்றிடான்
> சொல்லை வேறிடம் செல்ல வழிவிடான்

என்று கவி பாடியது போல, வார்த்தையில் வடிக்க முடியாத சரிதத்தை எழுதச் செய்து விட்டாள். ''வேதாந்திகளுக்குப் பிரம்மசூத்திரம் — உபநிஷதம் — கீதை ஆகியவை 'பிரஸ்தான த்ரயம்' என்ற முப்பெரும் பிரமாண நூல்களாவது போல், ராமகிருஷ்ண பக்தர்களுக்கு குருமகராஜ்— தூய அன்னை —விவேகாநந்தர் ஆகிய மூவர் சரிதங்கள் பிரஸ்தான த்ரயமாகும். இவற்றில் இரண்டினை எழுதியதால் மூன்றாவதையும் எழுதி நிறைவு செய்ய வேண்டும்'' என்று மயிலை ராமகிருஷ்ண மடத்துப் பிரம்மசாரி நயாள் வலியுறுத்தியதை மறுக்க இயலவில்லை. அசட்டுத் துணிச்சலுடன் தடாகக் கரைக்கு வந்தாகிவிட்டது!

அவளது சரிதைக்கு நிகரில்லை (நிஸ்துல சரிதாம்) என்கிறது, சாரதாமணி தேவியின் தியான சுலோகம். இது உபசார வார்த்தை அல்ல. மெய்யாகவே, மற்ற பல மகாபுருஷர்களின் வரலாறுகளிலிருந்து மாறுபட்டு, தனித் தன்மையுடன் நிற்பது சாரதையின் சரிதை. 'மகா' புருஷர்கள் என்னும் போதே, அதில் சாமானிய மக்களுக்கு அப்பாற்பட்ட மகிமையின் பேரொளி வீசுகிறது. ஆனால் சாரதையின் வாழ்வில் இப்படிப்பட்ட ஜாஜ்வல்லியம் இல்லை. அற்புதங்கள் இயற்றிய மகான்களிடையே, அற்புதங்களை எல்லாம் அள்ளி விழுங்கிவிட்டு, இவளா விழுங்கியவள் என்றுகூடத் தெரியாதபடி, எளிமையிலும் எளிமையாக வாழ்ந்தாள் சாரதா தேவி. மகிமையின் பேரொளியைவிட எளிமையின் சாந்த ஒளியும், அன்பின் தண் ஒளியுமே அவள் வாழ்வில் அதிகம்.

உலக மினுமினுப்பை விட்டு மற்ற மகா புருஷர்களின் வரலாறுகளில் நாம் பிரவேசிக்கும்போது, மின்விளக்கு அலங்காரம் கொண்ட உல்லாசப் பூங்காவிலிருந்து, அடுக்கடுக்காக லட்ச தீபம் ஏற்றிய ஆலய சந்நிதிகளுக்குள் போகிற உணர்வு உண்டாகும்எனலாம். நெருக்கமான அந்தத் தீப வரிசைகளைக் கண்டபின், காற்றோட்டமான வெளிப் பிராகாரத்துக்கு வரும்போது, நம்மை அறியாமலே தலை தூக்கி வானத்தைப் பார்க்க, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில்லென்று நட்சத்திரங்கள் தென்படும்போது எப்படிப் பட்ட நிம்மதி கிடைக்கும்? அந்த நிம்மதி சாரதையின் சரிதையில் கிடைக்கிறது. பரிபூரண எளிமைதான் அதற்குக் காரணம்.

எளிமை என்பதால் குண விசேஷங்களில் குறைந்தது என்று அர்த்தம் அல்ல. குண விசேஷங்கள் அடர்ந்து செறிந்த போதிலும் எளிமையாக இருக்கும் அதிசயம் அவ்வாழ்க்கை. அதை வார்த்தையில் சொல்லப் புகுந்தால் அடர்த்தி நீர்த்துப் போய்விடும். தண்ணீரைக் காட்டிலும் ஓர் அணு அதிகமாகப் பிராணவாயு அடர்ந்திருப்பது ஹைட்ரஜன்–பெர்–ஆக்ஸைட். சீசாவுக்குள் அதைப் பார்த்தால் தண்ணீரைப் போலவே தெளிவாக, எளிமையான பண்டமாகத்தான் தோன்றும். உண்மையிலோ நீரைவிட அதன் சக்தி பெரிது. அழுக்குகளை நொடியில் கரைத்து அகற்றிவிடும். சீசாவில் அதைப் பத்திரமாக மூடியிட்டுக் காப்பாற்றியாகவேண்டும். கொஞ்சம் திறந்து வைத்தாலும் அதிகப்படி பிராணவாயு ஓடியே போய்விடும். சாரதா சரிதத்தை மனத்துள் பத்திரமாகப் பொதிந்து வைத்துக் கொண்டால் சித்தத்தின் அழுக்கெல்லாம் போகும். வாக்கில் வெளிக்கொண்டு வந்தாலோ அதன் எளிமை அடர்த்தி போய்விடும்.

இங்கே எழுத்தில் விரிய இருக்கும் கதை வாசகர்களுக்கு அற்புதமாக, அதிசயமாக, வியப்பாக, விநோதமாக இருக்கலாம். இந்த அம்சங்களில் 'உண்மை சாரதை'யைவிடக் 'கதை

சாரதை'க்கு அடர்த்தி அதிகம். பெரிய சாந்த சமுத்திரமாக, பிரேமைக் கடலாக அடிமட்டத்தில் இருந்தவள் மேற்பரப்பிலே எழுப்பிய அதிசய அலைகளைத்தான் நாம் எழுத்தில் அதிகம் பார்ப்போம். அடிமட்டத்துக்குச் செல்லவோ, சென்றாலும் அதை வர்ணிக்கவோ வார்த்தைக்குத் திராணி இல்லை. அடியில் இருப்பது அநுபவம், மேலே தெரிவது சம்பவம். சம்பவங்களை ஊடுருவி அநுபவத்தைப் பக்தியுடன் தியானித்து, இச்சரிதையை வாசகர்கள் பூர்த்தி செய்து கொள்ள வேணும்.

எளிமையால் மட்டும் சாரதையின் சரிதை தனித்து நிற்கவில்லை. வேறு பல விதங்களிலும் அது 'நிஸ்துல'மானது. அதிலே பல புதுமைகள். அவள் இல்லறம் நடத்தியவள்; ஆனால் அதில் உலகோர் நடத்தும் 'தாம்பத்தியம்' கிடையாது. பதிதேவர் மறைந்த பின்பும் அவள் கைம்பெண் கோலம் போடவில்லை; கைவளையலைக் கழற்றாத சுமங்கலியாகவே இருந்தாள். சுமங்கலியான போதிலும் அவள் சந்நியாசினி. அவ்வாறெனில், சந்நியாச தீக்ஷை பெற்றாளா? இல்லை. காவி உடுத்தாளா? இல்லை. ஆனால் விவேகாநந்தர், பிரம்மாநந்தர் போன்ற சந்நியாச சிம்மங்கள் அவள் எதிரிலே வரவே கூசும் அளவுக்குத் துறவிலே கொழுந்து விட்டெரிந்தாள். அவளது அநுமதியுடன் துறவு பூண்ட சீடர்கள் பலர் பரம ஞானிகளாயினர். 'சீடர்கள்' என்றால் அவள் குரு ஸ்தானம் வகித்தவளா? வகித்தாள். ஆனால் அதிலும் புதுமை. 'இதோ உபதேசம்' என்று அவள் புத்தகம் எதுவும் எழுதியதில்லை; மேடையில் ஏறி ஒரு பிரசங்கம் செய்ததில்லை; அறிக்கை விட்டதில்லை. அவளே உபதேசமாக வாழ்ந்தாள். மற்ற குருமார்களுக்காகச் சீடர்கள் மெய் வருத்தம் பாராமல் சேவை செய்வர். இவளோ சீடர்கள் செய்யாமல் விட்ட மந்திர ஜபத்தைத் தானே இரவு பகல் பாராமல், உடற்பிணியைப் பாராமல், மரணப் படுக்கையில்கூட லட்ச லட்சமாக ஜபித்தாள். ஏன்? சீடர்கள் என்பதற்கு மேல் அவர்கள் இவளது குழந்தைகள்; குரு என்பதற்குமேல் இவள் அவர்களுக்கு அம்மா. தாம்பத்தியம் புரியாத சாரதை மலடிதான். ஆனால் அவளைப்போல் அன்றும், இன்றும், இனியும் எண்ணற்றவர்களுக்கு அம்மாவாக இருந்தது, இருப்பது, இருக்கப் போவது யாருண்டு?

அதிசய சுமங்கலி, அதிசய சந்நியாசினி, அதிசய குரு. அதிசயங்களை விழுங்கி விட்டு, அதிசயமில்லாத சாமானிய அம்மாவாக 'தெய்வமே' என்று இருந்தாள். ஆனாலும் அவளை தெய்வம் எனக் கொண்டு அவளை முறைப்படி வழிபட்டவர்களும் உண்டு. அவர்களுக்கு அதிசய தெய்வமாக இருந்தாள். சாரதாமணி அஷ்டோத்தர சத நாமாவளியில் ''பக்த கிங்கரி'' என்பது ஒரு பெயர். பக்தர்கள்தாம் தெய்வத்துக்குக் கைங்கரியம் செய்வது வழக்கம். இந்த அதிசய தெய்வமோ தனது அடியாருக்கே அடியாளாக இருந்தாள். அவர்கள் அவளைச் சம்பிரதாயப்படி பூஜிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யும்போது, அவளோ அவர்களுக்காக அடுப்படியில் சப்பாத்தி இட்டுக்கொண்டிருப்பாள். அவளை அலங்கார பீடத்தில் வைத்துப் பூஜை செய்வார்கள். பூஜை முடிந்தவுடனேயே அவள் அவர்களுக்கு இலை போடுவாள்; வயிறு முட்டப் பரிமாறுவாள்; அவர்கள் உண்ட எச்சில் இலைகளையும் எடுப்பாள். போதாக் குறைக்கு, கிணற்றடியில் சமையல் பாத்திரங்களையும், அவளுக்கே பூஜை செய்ய உபயோகித்த பாத்திரங்களையும் 'தெற தெற' என்று தேய்க்கத் தொடங்கிவிடுவாள். 'கைவருந்தி **உழைப்பவர்** தெய்வம்' என்று சரஸ்வதி தேவியைப் பாடினார் பாரதி. இதுவோ 'கைவருந்தி **உழைத்த** தெய்வ'மாக இருந்தது. இவளையும் சரஸ்வதி தேவி என்றே ராமகிருஷ்ணர் கூறினார். அதிலும் அதிசய சரஸ்வதி! இந்த சரஸ்வதிக்குக் கடைசி வரையில் கையொப்பமிடக் கூடத் தெரியாது.

எப்படியானாலும், சரஸ்வதி என்று சாட்சாத் பரமஹம்ஸரே சொன்னபின் அவள் அவதார வியக்திதான், சந்தேகமில்லை. நம்மைப் போல் கரும கதிக்கு ஆளாகிப் பிறந்து பிறந்து மறையும் ஜீவனா அவள்? நாஸ்திகர்கள்கூட அப்படிச் சொல்லத் தயங்குவார்கள். பக்குவம் பெற்ற ஒருசில பக்தர்களுக்கு அவளே தன் தெய்வத் தன்மையை ஆணி அடித்தது போல் வியக்தமாக வெளிப்படுத்தியதுமுண்டு.

தர்ம ஸம்ஸ்தாபனம் என்ற பொதுக் காரியத்துக்காகவே அவதார புருஷர்கள் உதிப்பார்கள். பொதுவான தர்மத்தில்

குறிப்பாகச் சில அம்சங்களை ஒவ்வோர் அவதாரமும் வலியுறுத்தும். ராகவன் தர்மத்தை வலியுறுத்தினான், கோவிந்தன் பிரேமையை வலியுறுத்தினான், ஆதி சங்கரர் ஞானத்தை வலியுறுத்தினார், மாருதி சேவையை வலியுறுத்தினான். ஆதி சங்கரரும் மாருதியும் தனியே வந்து போனார்கள். ராகவன் ஜானகியுடன் வந்தான். கோவிந்தனுடன் கோபியர், ருக்மிணி, பாமை எல்லோரும் வந்தனர். ராமகிருஷ்ணருடன் சாரதை வந்தாள். ஆனால் அவர் ஆதிசங்கரரைப் போல் சந்நியாசியாகவும், மாருதியைப் போல் நைஷ்டிகப் பிரம்மசாரியாகவும் வாழ்ந்தார். சாரதை மனமொப்பி அநுமதித்ததால்தான் அவர் அப்படி வாழ முடிந்தது. எனவே, ராமகிருஷ்ணரை ராமகிருஷ்ணராகவே விட்டு வைத்திருந்த பெருமை அவளுடையது. மனம் மாசுபடாமலே மண வாழ்வு நடத்த முடியும் என்ற உன்னத உண்மையை விளக்குவதற்காகவே இப்படி இருவராக வர நேர்ந்தது. இந்த உண்மையை இரட்டை — அவதாரத்தால் நிரூபித்ததோடு, அவர்கள் தனித் தனியாகவும் சில குறிப்பிட்ட அவதார காரியங்களைச் செய்தனர். உலகாயதம் பரவிய உலகில் ஆத்மிகத்தையும், சமயச் சழக்கு நிறைந்த சூழலில் சர்வ மதங்களின் சத்தியத்தையும் வாழ்ந்து காட்ட பரமஹம்ஸ ராமகிருஷ்ணரின் அவதாரம் ஏற்பட்டது. சாரதை எளிமையை வாழ்ந்து காட்டவே வந்தாள். அதோடு பெண்கள் பெண்களாகவே இருக்க வேண்டும் என்பதையும் வாழ்ந்து காட்டினாள்.

இப்போது கல்வி, பதவி, சமூக இயல் முதலியவற்றில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வந்திருப்பதற்கு சாரதையின் அவதாரமே வழி வகுத்தது என்று பலர் — மதிப்புக்குரிய பெரியோர்களும்கூட — பேசியும் எழுதியும் இருக்கிறார்கள். இவர்களுடன் பணிவுடன் பிணங்க முற்படுகிறேன். ஆண்களோடு பெண்கள் லௌகிக விஷயங்களில் போட்டியிட வேண்டுமென அவள் கடுகளவும் விரும்பியதாகச் சான்று இல்லை. ஒரேயடியாக மூடநம்பிக்கைகளைப் பிடித்துக் கொண்டும், ஊர் வம்பை உழக்கால் அளந்து கொண்டும் இருட்டில் தள்ளப்பட்டிருந்த அக்காலப் பெண்களுக்கு சாரதை ஓர் அழுத்தமான எதிர்வெட்டு என்பதில் ஐயமில்லை. ராமகிருஷ்ணருக்குச் சரிநிகர் சமானமாக அவள் உயர்ந்ததும் வாஸ்தவம். ஆனாலும் அப்படி உயர வேண்டும் என அவள் லவலேசமும் சங்கற்பம் செய்து போட்டியிடவில்லை. அந்த ஞான நிலையில் போட்டி என்ற வார்த்தையே அசம்பாவிதம். இப்போது பெரிதாகப் பேசப்படும் பெண்கள் முன்னேற்றம் ஞானத் துறையில் ஏற்பட்டதல்ல. லௌகிகத்தில்தான் போட்டி. இந்தப் போட்டியில் ஈடுபடுவதைவிடப் பெண்ணானவள் பெண்ணாகவே இருப்பதுதான் அவளுக்கும் அழகு, உலகுக்கும் க்ஷேமம் என்பதே சாரதா சரிதத்தில் நான் காண்கிற உண்மை. இந்தச் சரிதை முடிந்தபின் நீங்களே இவ்விஷயத்தில் முடிவு கட்டலாம். ஆதரிச மகளாக, ஆதரிச மனையாளாக, ஆதரிச சோதரியாக, ஆதரிச அன்னையாக, எந்த லௌகிகப் போட்டியும் இன்றி அமரிக்கையாக வாழ்வு நடத்தினாள் தேவி. உலக வாழ்வு ஒரு மாயம் என்பதை உள்ளத்தின் அடியில் உணர்ந்தவள் அவள். எனினும் விவகாரத்தில் உலக வாழ்வைப் புறக்கணிக்காமல், பரம எளிமையுடன் மற்றவர்களுக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினாள். எனவே, லௌகிகமாகப் 'போட்டி'யிடுவதில் அவளுக்கு இடமேயில்லை. ஞானத் துறையில் வேதகால பிரம்மவாதினிகளைப்போல ராமகிருஷ்ணருடனும், மற்ற பக்தர்களுடனும் அத்யாத்ம விஷயங்களை விசாரம் செய்தாள். அப்போதும் தொன்றுதொட்டு ஸ்திரீ லட்சணமாகக் கூறப்படும் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகியவற்றை அவள் விட்டாளில்லை. 'லஜ்ஜா படாவ்ருதே' என்று அவளைத் துதிக்கிறார் அபேதாநந்தர். 'நாணத்தினால் முக்காடிட்டவளே' என்பது இதன் பொருள். அவளது முகத்தையே முதுமையில்தான் ஆண் மக்கள் பார்த்திருக்கிறார்கள். அவள் அப்படி அடங்கி வாழவேண்டும் என்றுதான் ராமகிருஷ்ணரும் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்.

அறிவிலிகளாகவும், கட்டுப்பெட்டிகளாகவும் இல்லாமலே பண்டைய பாரத மகளிர் பெண்மைப் பண்புகளைக் காத்தனர். இடைக்காலத்தில் பாரத ஸ்திரீ குலத்துக்கு ஏற்பட்டிருந்த இருட்டடிப்பு சாரதை தோன்றிய பின்னர் மறைந்தது. இருட்டு போச்சு என்பதால், ஒரேயடியாக விளக்கை மேலே திருப்பிவிட்



மழையினை
வெல்லுங்கள்
ஃபாஸ்ஃபோமின்®
அருந்துங்கள்.



சிறு தூறலானாலும் சரி, அடை மழையானாலும் சரி ஃபாஸ்ஃபோமின் அருந்துவது வாழ்க்கைக்கே இன்பம் தரும். ஃபாஸ்ஃபோமின் வலுவூட்டுகிறது. களைப்பை நீக்குகிறது. பசியைத் தூண்டுகிறது. உடலுக்கு எதையும் தாங்கும் வலிமையை அளிக்கிறது. ஃபாஸ்ஃபோமின் வாங்குங்கள். இந்தப் பச்சை நிற பழரச டானிக்கில் வைட்டமின் பி. காம்ப்ளெக்ஸும், மல்டிபிள் க்ளிஸரோஃபாஸ்பேட்ஸும் அடங்கியுள்ளன. உங்கள் குடும்பத்தினருக்கு ஒவ்வொரு நாளும் ஃபாஸ்ஃபோமின் கொடுங்கள். அது எல்லா பருவங்களுக்கும் ஏற்ற வைட்டமின் டானிக்.

SQUIBB   SARABHAI CHEMICALS

® இந்தச் சின்னம் ஈ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் என்ற ஸ்தாபனத்தின் ரிஜிஸ்டர் செய்யப் பெற்ற ட்ரேட் மார்க் ஆகும். கே.பி.பி.எல். அதை உபயோகிக்கும் லைசன்ஸ் பெற்றவர்கள்.

ஃபாஸ்ஃபோமினில் குடும்பத்தினர் அனைவருக்கும் வேண்டிய சக்தி நிறைந்துள்ளது.

Shilpi HPMA 14A/71 Tam.

டுக் கொள்வதற்கு அவள் முன்னோடி என்று ஆகாது. கும்மிருட்டின் புழுக் கத்தைவிடப் பெரிய வெளிச்சத்தின் சூடு அதிகக் கொடுமையானது.

ஆதிகால அவதாரங்கள் மிக்க சக்தியுடன் செயலாற்றின. அப்போதெல்லாம் மக்களில் ஒரு பகுதியினரே அதர்மத்தில் ஈடுபட்டனர். மற்றவர்கள் அந்த அதர்மம் நீங்குவதற்காக அவதாரம் நிகழ வேண்டுமென மனமுருகிப் பிரார்த்திப்பார்கள். அவதாரமும் நிகழும். தர்மம் அடியோடு நலியாத அந்தச் சூழலில் அவதாரத்தின் சக்தி நன்கு பொலிந்தது. அவதார வியக்தி தர்மத்தை நிலைநிறுத்தியபின் நீண்ட நாள் தர்ம வாழ்வு நீடித்தது. சமீப காலத்தில் அதர்மம் சர்வ வியாபகமாகிவிட்டதால் அவதாரத்தின் சக்தி கொந்தளித்துப் பொலிவதில்லை. மூளையின் சிறப்புக்குப் பெயரெடுத்த இந்தக் காலத்தில், பராசக்தி நம்மைக் கேலி செய்வதேபோல் தன்னை ஒடுக்கிக் கொண்டு அவதரிக்கிறாள். நம்முடைய நுண்ணிய மூளை அவளது நுண்ணிய அவதாரத்தைப் பெருமளவு புரிந்து கொள்ளவே தவறிவிடுகிறது. தர்மங்கள் அடியோடு போய்விடாமல் ஓரளவு காத்து, அதன் நினைவையாவது மீண்டும் ஏற்படுத்திய திருப்தியுடன் அவதார வியக்தியும் மறைந்து போகிறது. சாரதை மறைந்து அரை நூற்றாண்டு தான் ஆகிறது. அதற்குள் இன்னொரு சாரதை அவதரிக்க அவசியம் ஏற்பட்டு விட்டது! இந்தச் சமயத்தில் அந்தப் பழைய சாரதையின் சரிதத்தையாவது நினைவுக்குத் தந்து கொள்வோமே!

இப்போதுதான் பழமைக்கும் பழைய சாரதையான சரஸ்வதிக்கு நவராத்திரியில் பூஜை செய்தோம். மது, கைடபன், மகிஷாசுரன், சண்டன், முண்டன், சும்பன், நிசும்பன் ஆகிய அசுரரை வதம் செய்து தர்மத்தை நிலை நாட்ட சாக்ஷாத் அம்பிகை பல உருவங்களில் அவதரித்ததை நவராத்திரி நினைவு படுத்துகிறது. இந்தத் தீய சக்திகளை வதைத்ததுமட்டுமல்ல. ''இனியும் தீமை ஓங்குகிறபோதெல்லாம் தோன்றி அதைக் களைவேன்'' என்று அம்பாள் அமிருத வாக்குத் தந்தாள்:

இத்தம் யதா யதா பாதா தானவோத்தா பவிஷ்யதி ।
ததா ததாவதீர்யாஹம் கரிஷ்யாம்யரி ஸம்க்ஷயம் ॥

சரத் காலத்தில் நிகழும் இந்த நவராத்திரிக்கே சாரத நவராத்திரி எனப் பெயர். சரத் கால சந்திரனாக வாழ்ந்தாள் அவளினள் ஸ்ரீ சாரதாமணி. 'அதுவும் போதாது. அந்தச் சந்திரனில் உள்ள களங்கமும் என்னிடம் இருக்கக்கூடாது' என்று பிரார்த்தித்தாள். களங்கமே இல்லாததால்தான் அவளை ''தூய அன்னை'' (Holy Mother) என்றே சொல்கிறோம்.

தூய்மையை விஞ்சியது அவளது தாய்மை. தூய்மையால் பதிவிரதைகளின் திலகமானாள். அந்தப் பதிவிரதத்தைவிடப் பெரிதாக 'புத்திர விரதம்' என்ற ஓர் அதிசயத்தையும் அநுஷ்டித்துக் காட்டினாள். பெறாமலே பெற்ற புத்திரர்களிடம் அன்பு செய்யும் விரதத்தில் பதியின் ஆணையைக்கூடப் பணிவுடன் புறக்கணித்தாள். இந்த அம்சத்தில் ராமகிருஷ்ணரினும் சிறந்து நின்றாள் அவள். அவரால் பாவியரின் ஸ்பரிசத்தையும் தாங்க முடியாது. அவளுக்கோ பாவி — புண்ணியசாலி என்ற பேதமேயில்லை. குற்ற நீரைக் களைந்து குணப் பாலைக் கொள்வதில் சாரதா ஹம்ஸம் பரமஹம்ஸத்தைவிடப் பெரியது. காரணம் தன்னை அம்மாவாக்கிக் கொண்டதுதான்.

இந்தத் தாயன்பு காரணமாகத்தான் அவளைப் பைத்தியக்காரி ஸுரபாலாவும் பிடிவாதக்காரி ராதுவும் பாடாய்ப் படுத்திப் பம்பரமாய்ச் சுழற்ற முடிந்தது. பிரஸன்ன குமாரும், காளிகுமாரும் அவளை இம்சித்ததற்கெல்லாம் இடம் தந்தது இந்த அன்புதான். தாயன்பினாலேயே இந்தச் சரிதையில் சோதனைகளும் சோகங்களும் ஏற்பட்டன. தாயன்பினாலேயே அவள் சோதனையைச் சாதனையாகவும், சோகத்தைச் சுகமாகவும் ஆக்கிக் கொண்டாள். சோதனையும் சோகமும் அன்பெனும் சாந்தத் தடாகத்தில் சிறு அலைகளாகவே எழும்பி, அடுத்த விநாடி இடம் தெரியாமல் மடங்கி விழுந்து மறைந்தன.

தடாகத்தில் இறங்காமல் இன்னமும் உங்களைப் படித்துறையில் காக்க வைப்பது தவறுதான். வாருங்கள், ''குள்ளக் குளிரக் குடைந்து நீராடுவோம்!''

(தொடரும்)

கண்ணைப் போற்றுவோம்!

கண்ணிருந்தும் காணாதோரை அன்றாடம் பார்க்கிறோம். ஆயின், உங்களுக்குத் தெரியுமா? காடராக்ட் என்ற கண் நோயினால் பாதிக்கப்பட்டு நூறு இந்தியர்களில் இருவர் கண் பார்வை இழக்கின்றனர்! வேறு பல நோய்களினால் குருடானவர்களையும் சேர்த்துக் கொண்டால் இந்தச் சதவீதம் மேலும் அதிகரிக்கும்.

போஷாக்கான உணவு பற்றிய அறிவின்மையாலும், தொத்துநோய்களாலும் சிறுவர் சிறுமியருக்குக் கண்கள் பாதிக்கப்படுகின்றன.' குறைந்த செலவிலேயே சத்துள்ள ஆகாரம் பெற முடியும். ஆயின் இதுபற்றிய விஷயஞானம் நம் மக்களிடம் இருப்பதில்லை— பரிதாபம்.

காடராக்ட் என்ற நோயினால் மட்டுமே பார்வை இழந்துள்ள நாலு லட்சம் தமிழர்களில் ஐம்பதாயிரம் பேர்களே ஆபரேஷன் செய்து கொண்டு மீண்டும் கண் பார்வை பெறுகின்றனர். இருக்கிற ஒருசில கண் ஆஸ்பத்திரிகள் கண் நோய் உள்ளவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப் போதவே போதாது என்பது ஒருபுறமிருக்க, பெரிய நகரங்களில் உள்ள இந்த மருத்துவ மனைகளுக்குக் கிராம மக்கள் எங்கே வரப்போகிறார்கள்? பணவசதி ஏது? மேலும் காடராக்ட் நோயினை சஸ்திர சிகிச்சையினால் குணப்படுத்திக் கொண்டு பார்வையை மீண்டும் பெறலாம் என்ற விவரமே இக் கிராம மக்களுக்குத் தெரியாதே!

இந்நிலையில் அவர்கள் வருவதற்காகக் காத்திராமல் கண் ஆஸ்பத்திரிகளே அவர்களிடம் போனால்தான் பலன் ஏற்படும்.

இதை மனத்தில் கொண்டுதான் கண் சிகிச்சை முகாம்கள் 1961 முதல் இயங்கி வருகின்றன. அவ்வாண்டில் இரண்டு நடமாடும் கண் ஆஸ்பத்திரிகளுக்கு அரசு அனுமதி வழங்கியது. இவை சென்னை, மதுரை மாவட்டங்களில் இயங்க உத்தரவாகியது.


ஸ்ட்ரெச்சரில் உள்ள நோயாளியைத் தூக்கிச் செல்ல இந்தியா சிமெண்ட்ஸ் மானேஜிங் டைரக்டர் திரு நாராயணனும் உதவுகிறார்.

தமிழக அரசு மட்டுமின்றி இதற்கும் பிரிட்டிஷ் அரசும் பண உதவி செய்தது. மேலும் பிரிட்டன் ஒரு நடமாடும் மருத்துவ மனையையும் அதற்குரிய உபகரணங்களையும் நன்கொடையாக வழங்கியது.

கண் சிகிச்சையில் நிபுணரும், மதுரை எர்ஸ்கைன் ஆஸ்பத்திரியில் பணியாற்றுபவருமான டாக்டர் ஜி. வேங்கடசாமி இதுவரை ஐம்பத்திரண்டு கண் சிகிச்சை முகாம்களை நடத்தி ஆயிரமாயிரம் மக்களின் நன்றிக்குப் பாத்திரமாகி யிருக்கிறார்.

அண்மையில் இவர் நடத்திய முகாம் கல்லிடைக்குறிச்சியிலும் அதன் சுற்று வட்டாரத்திலுமாகும். இதற்கு அவர் திரு எஸ். என். என். சங்கரலிங்க அய்யரின் முழு ஒத்துழைப்பையும் பெற்றது அவ்வட்டாரத்தின் மக்கள் செய்த பாக்கியமேயாகும்.

இந்தியா சிமெண்ட்ஸ் கம்பெனி தயாரிக்கும் சங்கர் பிராண்ட் சிமெண்ட் பலருக்கும் தெரிந்ததே. அந்தக் கம்பெனியின் டைரக்டர் சங்கரலிங்க அய்யர். இவரைத் தலைவராகக் கொண்டு ''சங்கர் தர்ம ஸ்தாபனம்'' என்ற பெயரில் ஓர் அறக் கட்டளை நீண்ட நாட்களாகவே நடந்து வருகிறது. இலவச மருத்துவ மனைகள், பிரசவ விடுதிகள், அங்கஈனர்களுக்கான அனாதை இல்லங்கள் போன்றவற்றை நிறுவுவது அந்த அறக் கட்டளையின் குறிக்கோள்.


தற்போது கல்லிடைக்குறிச்சியில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாமுக்கு இந்தியா சிமெண்ட்ஸாரின் மானேஜிங் டைரக்டர் நாராயணன் முதல் கடைநிலை ஊழியர் மகாதேவன் வரை பலப் பலரும் தங்கள் ஒத்துழைப்பை நல்கினர். திலக் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் உபாத்தியாயர்களும் உதவி புரியக் காத்திருந்தனர். அருகில் உள்ள ஆஸ்பத்திரிகள், சுகாதார நிலையங்கள் ஆகியவையும் தோள் கொடுக்கத் தயாராயிருந்தன. போலீசார் தொண்டாற்றத் திரண்டனர். கல்லிடைக்குறிச்சி, களக்காடு, ஆழ்வார்குறிச்சி, முக்கூடல், சேரன்மாதேவி ஆகிய ஊர்களில் பத்து நாட்களுக்குள்ளாக ஆறாயிரத்து ஐந்நூற்று இருபத்திரண்டு நோயாளிகள் பரிசோதனைக்குள்ளாயினர். இவர்களில் ஆபரேஷன் தேவைப்பட்டவர்கள் கல்லிடைக்குறிச்சிக்குத் தருவிக்கப்பட்டனர். அங்கு ஒரே நாளில் எண்ணூற்று ஒன்பது காடராக்ட் ஆபரேஷன்கள் நடந்தன! — வெற்றிகரமாக! இதர நோய்களுக்கான ஆபரேஷன்கள் நூற்றி


திரு சங்கரலிங்க அய்யர் டாக்டர் வேங்கடசாமியுடனும் டாக்டர் ராம அய்யருடனும் அளவளாவுகிறார்.


றும்பது நடைபெற்றன. மற்றவர்கள் வேறு பலவித கண் நோய்களுக்குச் சிகிச்சை பெற்றனர்.

டாக்டர் வேங்கடசாமி நன்றியோடு சொல்கிறார்: "கண் ஆபரேஷன் ஆன பிறகு நோயாளிகளை அசுங்காமல் நலுங்காமல் ஜாக்கிரதையாக மாற்றிடத்துக்குக் கொண்டு செல்வது, அவர்கள் தேவைகளைக் கவனிப்பது போன்ற காரியங்களைக் கச்சிதமாகச் செய்து முடிக்க ஆட்கள் இருந்தமையால் டாக்டர்கள் ஆபரேஷன்களைச் செய்வதிலேயே முழுமையாகக் கருத்துச் செலுத்த முடிந்தது."

இந்தியா சிமெண்ட்ஸ் நிர்வாகிகள் இந்தக் கண் சிகிச்சை முகாமை நிர்வாகம் பண்ணும் பொறுப்பை ஏற்று மிகத் திறம்படச் செயலாற்றி எல்லோருடைய ஒருமித்த பாராட்டுதலுக்கும் உள்ளாயினர்.



கண் பரிசோதனை.



சஸ்திர சிகிச்சை.

நாலு வாரங்கள் முன்னதாகவே, கண் சிகிச்சை முகாம் நடக்கவிருப்பது பற்றிய பிரசாரம் ஆரம்பமாகி விட்டது. சிகிச்சை பெற்றவருக்கு டாக்டர்களின் ஆலோசனைப் படி ஆரோக்கியமான உணவு இலவசமாய் வழங்கப்பட்டது. வீடு திரும்பிய பிறகும் தொடர்ந்து கண்ணைச் சில நாட்களுக்கு எப்படிக் கட்டிக் காக்க வேண்டும் என்பதற்கு அச்சடித்த தாள்கள் விநியோகிக்கப்பட்டன.

மூக்குக் கண்ணாடிகள் இலவசமாய்க் கொடுக்கப்பட்டன. இலக் உயர்நிலைப் பள்ளி சில நாட்களுக்குப் பெரிய ஆஸ்பத்திரியாக மாறி விட்டிருந்தது.

டாக்டர் வேங்கடசாமி நன்றி தெரிவித்தது ஒருபுறமிருக்க, கண் சிகிச்சை பெற்ற நோயாளிகள் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் உழைத்த உயர்ந்த மனிதர்களைப் பற்றி என்ன சொல்கிறார்கள் பாருங்கள்:

திரு டி. பி. கணபதி: "எனக்கு அஞ்சு பசங்களும், ஒரு பொண்ணும் இருக்குதுங்க. சம்பாதிக்கிற பணம் சாப்பாட்டுக்கே போதலே. இதிலே கண்ணும் அவிஞ்சு கஷ்டப்பட்டேனுங்க. இந்த மாதிரி நல்ல ஆபரேஷன் செஞ்சு, நல்ல சாப்பாடு, இருக்க வசதி, எல்லாம் கொடுக்கிறது ரொம்பப் பெரிய தர்மங்க. ஏழைகளுக்கு இந்த மாதிரி உதவி ரொம்பத் தேவை..."

ஸ்ரீமதி மாரியம்மா: "....ஒண்ணும் கேட்காமயே எல்லாம் குறையில்லாமே செஞ்சு குடுத்தாங்க. இங்கே எங்களுக்கு ஒருவிதமான கஷ்டமும் இல்லையாது..."

பார்வையற்றோருக்குப் பார்வை அளிப்பது போன்ற உயர்ந்த தர்மம் வேறு என்ன இருக்க முடியும்? இத்துறையில் ஈடுபட்டுப் பெரும் பணி புரிந்தவரை நல்லிதயங்கள் கண்ணெனப் போற்றும் அல்லவா?

— குட்டி கிருஷ்ணன்

ஆசிரியருக்கு அர்ச்சனை!

மாணவர்கள் ஆசிரியரிடம் பக்தி கொண்டிருப்பது புதிதல்ல. வேத காலம் முதல் குருபக்தி வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது. விதிவிலக்கெனச் சிலர் இருப்பினும் மாணவர்கள் தங்கள் மனக் கோவிலில் ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் இடமே தனி. இதற்கு எடுத்துக்காட்டாகக் கும்பகோணம் கல்விக் கழகத்தின் ஆதரவில் சென்ற 8-9-71 அன்று தொழிலதிபர் திரு ஆர். டி. அரசு அவர்கள் தலைமையில் கும்பகோணம் பாணாதுறை உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவினைக் குறிப்பிடலாம். அன்று அங்கு குழுமியிருந்த பல பள்ளி ஆசிரியர்களைப் பாராட்டித் தமிழில் ஒலிபெருக்கி மூலம் அருச்சனையை ஒருவர் படிக்க, பல வண்ண மலர்கள் கொண்டு மாணவர்கள் மிக்க மரியாதையுடனும் பக்தியுடனும் அருச்சனை செய்தார்கள். ஆசிரியப் பெரியோர்கள் பிரமித்து ஆனந்தக் கடலில் மூழ்கிக் குழந்தைகளின் அன்புப் பிடியில் அகப்பட்டு மனப்பூர்வமான ஆசியினை வழங்கினர். இந்நிகழ்ச்சிகள் உலகில் ஒரு புதுமையன்றோ!

நேரில் கண்டு எழுதியவர்: சந்திரசேகரன்





பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் அறுபத்தொன்று

நிச்சயதார்த்தம்

வெளியில் காலடிச் சத்தம் கேட்டதும் பூங்குழலி அச்சிறு குடிலின் வாசற் கதவை நோக்கிப் போனாள்.

அவள் தன்னை விட்டு விட்டு அடியோடு போய்விடப் போகிறாள் என்று சேந்தன் அமுதன் எண்ணிப் பெருமூச்சு விட்டான். அவள் அவ்வாசற்படி வழியாக வெளியேறும் போது தன் உயிரும் தன் உடலை விட்டு வெளியேறிவிடும் என்று கருதினான்.

பூங்குழலி கதவைச் சற்றுத் திறந்து வெளியே பார்த்துவிட்டு மறுபடியும் கதவை அடைத்துத் தாளிட்டதைச் சேந்தன் அமுதன் பார்த்தான். இது என்ன விந்தை? தாளிட்டது மட்டுமல்லாமல் திரும்பவும் தன்னை நோக்கி வருகிறாளே?

அவளுடைய உள்ளம் சிறிது இளகி விட்டதோ! இளகினால்தான் என்ன? மறுபடியும் தன்னை விராகை வேண்டும் என்றும், இராஜ்யத்தைப் பிடிக்க வேண்டும் என்றும், சிங்காதனம் ஏறி அரசாள வேண்டும் என்றும், — இவ்வாறு போதனை செய்து கொண்டுதான் இருப்பாள். உலக ஆசைகள் என்னும் புயற் காற்றினால் அலை வீசிக் கொந்தளிக்கும் கடல் அவளுடைய உள்ளம். சிவபெருமானுடைய பக்தியில் திளைத்து அமைதியுற்றிருக்கும் இனிய புனல் வாவியை ஒத்தது தன் மனம். அதில் எழுந்த சிறிய கொந்தளிப்பு இவளால் நேர்ந்ததுதான். பூங்குழலிக்கும் தனக்கும் ஒரு நாளும் ஒத்து வரப் போவதில்லை. அதைப் பற்றி வீண் மனோராஜ்யம் செய்வதில் என்ன பயன்?

பூங்குழலி அவன் அருகில் வந்ததும் அவனைத் தன் குவளை மலர்க் கண்களால் உற்றுப் பார்த்தாள். சேந்தன் அமுதனின் நெஞ்சம் தத்தளித்தது.

"கதவை ஏன் சாத்தினாய்? யார் வந்தனர்? ஒருவேளை அம்மாதானோ. என்னமோ?" என்றான் அமுதன்.

"யாராயிருந்தாலும் சிறிது நேரம் காத்திருக்கட்டும். நம்முடைய பேச்சு முடியும் வரையில் வெளியில் இருக்கட்டும். ராஜாவும் ராணியும் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கே வந்து யாரும் தடை செய்யக் கூடாது அல்லவா?" என்றாள்.

"ராஜா—ராணி! யார் ராஜா? யார் ராணி?" என்று தடுமாறினான் அமுதன்.

"நீ ராஜா; நான் ராணி! இத்தனை நேரம் சொன்னதெல்லாம் உன் மனத்தில் ஏறவே யில்லையா?"

"இல்லை, பூங்குழலி! எனக்கு நீ போதனை செய்வதில் சிறிதும் பயனில்லை என்றுதான் சொன்னேனே? உன் உள்ளப் போக்கும் என் உள்ளப் போக்கும் முற்றும் மாறானவை. அவை ஒத்துவர மாட்டா!" என்றான் அமுதன்.

"ஒத்து வரும்படி நாம்தான் செய்ய வேண்டும்" என்றாள் பூங்குழலி.

"அது முடியாத காரியம்!"

"உன்னால் முடியாவிட்டால், என்னால் முடியும், அமுதா! நான் தீர்மானம் செய்து விட்டேன். அரச குமாரனைக் கலியாணம் செய்து கொண்டு அரியாசனம் ஏறும் எண்ணத்தை விட்டுவிட்டேன். அரண்மனை வாழ்க்கையும் அரச போகத்தையும் காட்டிலும் உன்னுடைய அன்பு கோடி மடங்கு எனக்குப் பெரிது. நீ என் வழிக்கு வர மறுப்பதால், நான் உன்னுடைய வழிக்கு வருவேன். உன்னையே நான் மணந்து கொள்வேன்......."

சேந்தன் அமுதன் பரவச நிலையை அடைந்தான். "பூங்குழலி! பூங்குழலி!



எனக்கு இப்போது ஜுரம் அடிக்க வில்லையே? நான் கனவு காணவில்லையே? இப்போது நீ சொன்ன வார்த்தைகள் என் காதில் தவறாக விழவில்லையே? நான் தவறாகப் பொருள் கொள்ளவில்லையே?'' என்றான்.

''இன்னொரு தடவை சொல்கிறேன், கேள்! நீ என் வழிக்கு வர மறுப்பதால் நான் உன்னுடைய வழிக்கு வரத் தீர்மானித்துவிட்டேன். உன்னையே நான் மணந்து கொள்வேன். என் பெரிய அத்தையின் வாழ்க்கையைப் பற்றி நான் அறிந்து கொண்டிருந்த விவரங்கள் என் உள்ளத்தில் வீண் ஆசைகளை உண்டாக்கியிருந்தன. நியாயமாக அவள் சிங்காதனத்தில் வீற்றிருக்க வேண்டியவள் என்று அடிக்கடி எண்ணியதால், நானும் ஏன் சிங்காதனம் ஏறக் கூடாது என்ற ஆத்திரம் எனக்கும் உண்டாகி விட்டது. என் அத்தை கொலைகாரனுடைய

வேலினால் மரணமடைந்த போது, என்னுடைய ஆசையும் மடிந்து விட்டது. அரண்மனையில் வாழ்கிற வர்கள் படும் அவதிகளையும் வேதனைகளையும் அறிந்து கொண்டேன். அலைகடலில் படகு ஓட்டிக் கொண்டு ஆனந்தமாகக் கழிக்கும் வாழ்க்கைக்கு அரண்மனை வாழ்வு ஒரு நாளும் இணையாகாது என்று அறிந்தேன். அமுதா! உனக்கு உடம்பு சரியானதும் இருவரும் கோடிக்கரை செல்வோம். அங்கே காட்டுக்கு நடுவில் உள்ள கோயிலில் குழகர் தன்னந் தனியாகத் துணை எவருமின்றி இருக்கிறார். நாம் இருவரும் கோடிக்கரைக் குழகருக்குப் புஷ்பத் திருப்பணி செய்வோம். சில சமயம் படகில் ஏறிக் கடலில் செல்வோம். ஈழ நாட்டின் ஓரத்தில் இனிய தீவுகள் எத்தனையோ இருக்கின்றன. அந்தத் தீவுகளில் ஒன்றில் சில சமயம் இறங்குவோம். அங்கே நீ ராஜாவாகவும் நான் ராணியாகவும் இருப்போம். அந்த ராஜ்யத்துக்கு யாரும் போட்டிக்கு வரமாட்டார்கள். அமுதா ! இதற்கெல்லாம் உனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லையே ?''

''ஒரே ஆட்சேபந்தான், பூங்குழலி ! இவ்வளவு பெரிய பாக்யெத்துக்கு நான் அருகதை உள்ளவனா என்னும் ஆட்சேபந்தான். இதை யெல்லாம் நீ உண்மையாகத்தானே சொல்லுகிறாய் ? பிறகு பெரிய ஏமாற்றத்துக்கு என்னை உள்ளாக்குவதற்காகச் சொல்ல வில்லையே ? இல்லை, இல்லை ! நீ உண்மையாகத்தான் சொல்கிறாய். எப்போது கோடிக்கரைக்குப் புறப்படலாம்?''

''உனக்கு உடம்பு நேரான உடனே புறப்படலாம்.''

''எனக்கு உடம்பு நேராகி விட்டது, பூங்குழலி! நான் வேணுமானால் இப்போது எழுந்து நடக்கிறேன், பார்க்கிறாயா?'' என்று கூறி விட்டுச் சேந்தன் அமுதன் எழுந்திருக்க முயன்றான்.

பூங்குழலி அவன் கையைப் பிடித்து எழுந்திருக்காமல் தடுத்து, '' வேண்டாம்; இன்று ஒரு நாள் மட்டும் பொறுத்துக் கொள்!'' என்றாள்.

வாசற் கதவை யாரோ இலேசாகத் தட்டும் சத்தம் கேட்டது.

'' அம்மா கதவைத் தட்டுகிறாள். திறந்து விடு ! அம்மாவிடம் இந்தச் சந்தோஷ சமாசாரத்தைச் சொல்வோம்'' என்றான் அமுதன்.

பூங்குழலி போய்க் கதவைத் திறந்தாள். வாசலில் கண்ட காட்சி அவளைச் சிறிது வியப்புறச் செய்தது.

அவள் எதிர்பார்த்தபடி கதவைத் தட்டியவள் வாணி அம்மை அல்ல.

அரண்மனைச் சேவகன் ஒருவன் கதவைத் தட்டியிருக்க வேண்டும் என்று தோன்றியது. கதவு திறந்ததும் சேவகன் ஒதுங்கி நின்றான்.

அப்பால், செம்பியன் மாதேவியும் இளவரசர் மதுராந்தகரும் நின்றார்கள்.

இன்னும் சிறிது தூரத்துக்கு அப்பால், பல்லக்குகள் இரண்டு இறக்கி வைக்கப்பட்டிருந்தன. சிவிகை தூக்கிகளும் காவலர்களும் மரத்தடியில் நின்றார்கள். அவர்களில் ஒருவன் பிடித்துக் கொண்டிருந்த தீவர்த்தி வெளிச்சத்தில் இவ்வளவு காட்சியையும் கண்ட பூங்குழலி செம்பியன்மாதேவியின் முன்னால் தலை வணங்கிக் கும்பிட்டு, ''தாயே! வர வேண்டும் !'' என்றாள்.

''உன் அத்தை மகனுக்கு உடம்பு எப்படியிருக்கிறது, பூங்குழலி! வாணி அம்மை எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே மழவரையன் மாமகளாகிய முதிய எம்பெருமாட்டி அந்தக் குடிசைக்குள்ளே பிரவேசித்தாள்.

மதுராந்தகன் வெளியிலேயே நின்றான். ஆனால் அவனுடைய குரோதம் ததும்பிய கண்கள் ஆர்வத்துடன் குடிசைக்கு உள்ளே நோக்கின.

வருகிறவர் சிவபக்த சிரோமணியும் தங்களுக்கு மானியம் அளித்துக் காப்பாற்றி வருகிறவருமான செம்பியன் மாதேவி என்று அறிந்ததும் சேந்தன் அமுதனும் எழுந்தான்.

'' தாயே ! நல்ல சமயத்தில் வந்தீர்கள். முதன் முதல் சந்தோஷமான செய்தியைத் தங்களிடம் தெரிவித்து ஆசி பெறும் பாக்யெம் எங்களுக்குக் கிட்டியிருக்கிறது. சிவபெருமானுடைய திருவருளாலேயே இது நடந்திருக்க வேண்டும். இன்னும் என் அன்னையிடம்கூடச் சொல்லவில்லை. அன்னையே! இத்தனை காலங் கழித்துப் பூங்குழலி மனமிரங்கி என்னை மணம் புரிந்து கொள்ள இசைந்திருக்கிறாள். தாங்கள் தான் கூட இருந்து எங்கள் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும். நாங்கள் திருமணம் செய்து கொண்ட பிறகு கோடிக்கரைக் குழகர் கோயிலுக்குப் போய் அங்கே பூமாலைக் கைங்கரியம் செய்ய எண்ணியிருக்கிறோம் !'' என்றான்.

செம்பியன்மாதேவியின் முகத் தோற்றம் இச்செய்தியினால் அந்த மாதரசி மகிழ்ச்சி அடைந்தாளா, கலக்கமடைந்தாளா என்பதைத் தெரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. அவருடைய இதழ்களில் மகிழ்ச்சிப் புன்னகை தோன்றியது. ஆனால் கண்களிலோ கண்ணீர் ததும்பி நின்றது.

அமுதனும் பூங்குழலியும் அவர் முன் னல் வணங்கிய போது, மாதரசி தழு தழுத்த குரலில், ''குழந்தைகளே! இறை வன் அருளால் உங்கள் இல்வாழ்க்கை இன்ப மயமாக இருக்கட்டும்!'' என்று ஆசி கூறினர்.

அந்தச் சமயம் வாணி அம்மை அங்கு வந்து சேர்ந்தாள். அவளிடம் செம்பி யன்மாதேவி சமிக்ஞையினல் அமுத னுடைய உடம்பைப் பற்றித் தெரிந்து கொள்ள வந்ததாகக் கூறினர். வந்த இடத்தில் அவர்களுக்குத் திருமணம் நடக்கப் போகிற செய்தியை அறிந்து மகிழ்ச்சியடைந்ததாகவும்தெரிவித்தார்.

அச்சமயம் வாணி அம்மையின் முக பாவமும் கலக்கத்தையும் களிப்பையும் ஒருங்கே காட்டுவதாக இருந்தது.

மேலும் சிறிது நேரம் சேந்தன் அமுதனுடனும் பூங்குழலியுடனும் பேசிக் கொண்டிருந்த பிறகு செம்பியன்மா தேவி வெளிக் கிளம்பினர்.

அவரும் மதுராந்தகனும் பல்லக்குகள் இரண்டும் இறக்கி வைத்திருந்த இடம் நோக்கிச் சென்ருர்கள்.

வழியில் ஒரு மரத்தடியில் முதிய பிராட்டியார் நின்று, சுற்று முற்றும் பார்த்தார். அருகில் ஒருவரும் இல்லை என்பதைக் கண்ட பிறகு மதுராந் தகனை நோக்கி, ''பார்த்தாயா, மதுராந் தகா! என் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த மகன் அதோ அக் குடிசையில் வாழும் சேந்தன் அமு தன். அவனுக்கு ஐந்து வயதான போதே எனக்கு இச் செய்தி தெரிந்து விட்டது. அவன் எட்டு நாள் குழந்தை யாக இருந்தபோது மூச்சுப் பேச்சற் றுக் கிடந்ததைப் பார்த்து இறந்து விட்டதாக எண்ணினேன். பின்னைப் பாசத்தினல் உன்னை என் குழந்தையாக ஏற்றுக் கொண்டு இவனைக் கொண்டு போய்ப் புதைத்துவிடச் சொன்னேன். இவனை எடுத்துப் போன வாணி வெகு காலம் திரும்பி வரவேயில்லை. ஐந்து ஆண்டு கழித்த பிறகு இவளையும் இப்பிள்ளையையும் பார்த்ததும் உண்மை தெரிந்து கொண்டேன். ஆயினும், உன்னை நான் கைவிடவில்லை. அவன் என் வயிற்றில் பிறந்த மகன் என்பதற் காக அவனை அரண்மனைக்கு அழைத் துக்கொள்ளவுமில்லை. எல்லாம் இறை வன் திருவிளையாடல் என்று எண்ணி உன்னை என் வயிற்றில் பிறந்த மகனைக் காட்டிலும் பதின் மடங்கு அருமையாக வளர்த்து வந்தேன். அதற்காகவெல் லாம் எனக்கு இப்போது இந்த வரத்தை நீ கொடு! சோழ சிங்காதனம் வேண்டா



மென்று சொல்லிவிடு! நீ சிங்காதனம் ஏறுவதற்குக்கூட நான் ஆட்சேபிக்க மாட்டேன். ஆனால் உன் வம்சத்தில் பிறக்கும் பிள்ளைகள் ஊமைகளாக இருந்து விட்டால் என்ன செய்கிறது என்றுதான் அஞ்சுகிறேன்!'' என்றார்.

இவ்விதம் செம்பியன்மாதேவி கூறி வந்தபோது மதுராந்தகனுடைய முகம் பேயடித்த முகமாகக் காணப்பட்டது.

அவன் மணம் செய்து கொண்டிருந்த சின்னப் பழுவேட்டரையரின் மகளுக்கு ஒரு பெண் மகவு பிறந்திருந்தது. அதற்கு இரண்டு பிராயம் ஆகியும் இன்னும் பேசத் தொடங்கவில்லை என்பது அவனுடைய நினைவுக்கு வந்தது.

பிரமை பிடித்து மரத்தோடு மரமாக நின்ற மதுராந்தகனைப் பார்த்து அவனை வளர்த்த அன்னையாகிய மாதரசி ''குழந்தாய்! ஏன் அப்படியே நின்றுவிட்டாய்? வா, போகலாம். அரண்மனைக்குப் போய் நன்றாக யோசித்து நாளைக்குப் பதில் சொல்லு!'' என்றாள்.

மதுராந்தகன் தட்டுத் தடுமாறி, ''தாயே! யோசிப்பதற்கு இனி என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. தாங்கள் போங்கள். என்னுடைய இடத்தில் அரண்மனையில் வளர்ந்திருக்கவேண்டிய தங்கள் குமாரனிடம் சிறிது பேசி விட்டுப் பிறகு வருகிறேன்'' என்றான்.

''அப்படியே செய்! வரும்போது பல்லக்கின் திரைகளை நன்றாக மூடிக் கொண்டு வா! கொடும்பாளூர் வீரர்கள் உன்னைப் பார்த்து விட்டால் ஏதேனும் கூச்சல் போட்டாலும் போடுவார்கள்!'' என்று சொல்லி விட்டு அம்மாதரசி மேலே பல்லக்கை நோக்கி நடந்தார்.

மதுராந்தகனுடைய முகம் முன்னைவிடக் குரோதமும் மாற்சரியமும் நிறைந்த பயங்கர மாறுதலை அடைந்ததை அப்பெருமாட்டி கவனியாமலே அங்கிருந்து சென்று விட்டார்.

அத்தியாயம் அறுபத்திரண்டு

ஈட்டி பாய்ந்தது!

சற்று நேரம் நின்ற இடத்திலேயே நின்றான் மதுராந்தகன். குடிசைக்குப் போகலாமா, கோட்டைக்குப் போகலாமா என்று அவன் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்தது போலத் தோன்றியது. பின்னர் அவன் தன்னைச் சுமந்து வந்த பல்லக்கின் அருகில் சென்று, சிவிகைதூக்கிகளிடமும், காவலர்களிடமும் ஏதோ சொன்னான். சிவிகைக்கு உள்ளேயிருந்து ஏதோ ஒரு பொருளையும் எடுத்துக் கொண்டான். சிவிகையைத் தூக்கிக் கொண்டு ஆட்கள் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுடன் தீவர்த்தி வெளிச்சமும் சென்றது.

மதுராந்தகன் திரும்பக் குடிசையை நோக்கி வந்தபோது, அவனும் மாதேவடிகளும் எந்த மரத்தின் ஓரமாக நின்று பேசிக் கொண்டிருந்தார்களோ, அதே மரத்தின் பின்புறத்திலிருந்து திடீரென்று ஒரு மனிதன் வெளிப்பட்டு வந்ததைக் கண்டு மதுராந்தகன் ஒரு கணம் திடுக்கிட்டான்.

அவன் வேறு யாருமில்லை. பாதாளச் சிறையிலிருந்து தப்பித்து வந்தியத்தேவனோடு வந்திருந்த 'பைத்தியக்காரன்' கருத்திருமன்தான்.

இன்னமும் அவன் பார்ப்பதற்குப் பைத்தியக்காரனைப் போலவே இருந்தான். அவனுடைய தோற்றமும் அவன் திடீரென்று அந்த இடத்தில் வெளிப்பட்டதும் மதுராந்தகனுக்குத் திகில் உண்டாக்கியதில் வியப்பில்லைதானே?

அடுத்த கணம் மதுராந்தகன் சிவிகையிலிருந்து எடுத்து வந்த கூரிய குத்துவாளை ஓங்கினான்.

கருத்திருமன் அவனைக் கையமர்த்தி, ''ஐயா! நில்லுங்கள்! நான் தங்கள் விரோதியல்ல!'' என்றான்.

''விரோதி அல்லவென்றால் பின்னை நீ யார்? என் நண்பனா?'' என்று மதுராந்தகன் கேட்டான்.

''ஆம், ஐயா! நண்பன்தான்!''


மதுராந்தகன் குரோதமும் துயரமும் ததும்பிய குரலில் மெல்லிய சிரிப்புச் சிரித்துவிட்டு, ''நல்ல நண்பன் கிடைத்தாய்! உலகமே என்னை விட்டு நழுவிச் செல்லும்போது, நீயாவது கிடைத்தாயே?'' என்றான்.

''ஆம், ஐயா! உலகத்தில் யாரும் தங்களுக்குச் செய்ய முடியாத உதவியைத் தங்களுக்கு நான் செய்ய முடியும்!'' என்றான் கருத்திருமன்.

''அது என்ன, சொல்லு பார்க்கலாம்? நேரமாகி விட்டது. சொல்லுவதைச் சீக்கிரம் சொல்லு!''

''எதற்கு நேரம் ஆகி விட்டது?'' என்று கருத்திருமன் கேட்டு விட்டு, மதுராந்தகனை உற்று நோக்கினான்.

''அரண்மனைக்குப் போவதற்குத்தான். வேறு எதற்கு?''


Enjoy Coke
காலமெதுவாயினும்
கோலாகலம் தரும் கோகா-கோலா!


பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதிவேலையைத்தான் செய்யும்
*
இன்க்ரிமின் பெறுவீர்..
உண்ணும் மிகையான உணவை
ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
*
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வாழுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச்சத்து அடங்கிய இன்க்ரிமின் சிரப் — 175 மி.லி & 57 மி.லி. இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் — 10 மி.லி.
* இன்க்ரிமின்
டானிக்
* அமெரிக்கன் சையனமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு ட்ரேடு மார்க்.
Syrup
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
லின்டாஸ்-INC. 21-140 TM

''தங்களுக்கு உரிமை இல்லாத அரண்மனைக்குத் தாங்கள் திரும்பிப் போகப் போகிறீர்களா?''

மதுராந்தகன் மறுபடியும் அதிர்ச்சி அடைந்து, ''அடே! என்ன சொல்லுகிறாய்? உனக்கு என்ன தெரியும்? எப்படித் தெரியும்? விரைவிலே சொல்லு! இல்லாவிடில்...'' என்று கையிலிருந்த குத்துவாளை ஓங்கினான்.

''ஐயா! வாளை ஓங்க வேண்டாம். தங்கள் பகைவர்கள் எதிர்ப்படும்போது உபயோகிப்பதற்குத் தீட்டி வைத்துக் கொள்ளுங்கள். சற்று முன் தாங்களும் தங்களை வளர்த்த பெரிய மகாராணியும் இந்த மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருந்தீர்கள். நான் மரத்தின் பின்னால் நின்றதை நீங்கள் இருவரும் கவனிக்கவில்லை...''

''ஆகா! ஒட்டுக் கேட்டு இரகசியத்தை அறிந்து கொண்டாயா? அந்தத் துணிச்சலுடனேதான் என்னை வழி மறித்து நிறுத்தினாயா?''

''இல்லை, இல்லை. மகாராணி தங்களிடம் சொன்ன செய்தி எனக்கு முன்னமே தெரியும். அதை விட அதிகமாகவும் தெரியும். அந்த மாதரசி தங்களை வயிற்றில் வைத்து வளர்த்த அன்னை அல்லவென்றும், கண்டராதித்தர் தங்கள் தந்தை அல்ல வென்றும் அவர் தங்களிடம் கூறினார். தங்களுடைய அன்னை யார் என்று சொல்லி இருப்பார். ஆனால் தங்கள் தந்தை யாரென்று சொல்லியிருக்க மாட்டார்''

மதுராந்தகன் அவனை வெறித்து நோக்கி, ''உனக்கு அது தெரியுமா?'' என்று கேட்டான்.

''ஆம்; தெரியும்.''

மதுராந்தகன் அந்தப் பைத்தியக்காரத் தோற்றமுடையவன்தான் அவன் தந்தை என்று உரிமை கொண்டாடப் போகிறானோ என்று பீதியடைந்தான். அருவருப்பும் ஆத்திரமும் நிறைந்த குரலில், ''உனக்கு எப்படித் தெரியும்? நீ யார்?'' என்று கேட்டான்.

''நான் தங்கள் தந்தையின் ஊழியன்'' என்று கருத்திருமன் கூறியதும், மதுராந்தகன் முகம் தெளிவு பெற்றது.

கருத்திருமன் சற்று அருகில் நகர்ந்து வந்து, ''ஐயா! தங்கள் தந்தை.....'' என்று மெல்லிய குரலில் கூறினான்.

மதுராந்தகன் காதில் அவன் கூறியது விழுந்தது. மதுராந்தகன் தலை சுற்றியது. கீழே விழப் பார்த்தவன் சமாளித்துக் கொண்டு, கருத்திருமனுடைய புஜங்களை உறுதியாகப் பற்றிக்கொண்டு, ''நீ கூறியது உண்மைதானா? உண்மையாகவே நான் இராஜகுமாரன்தானா?'' என்று கேட்டான்.

''ஆம், ஐயா! இதைத் தங்களிடம் சொல்வதற்காகவே பல வருடங்களுக்கு முன்பு நான் இங்கு வந்தேன். தங்களை அந்தரங்கமாகப் பார்த்துப் பேசுவதற்குச் சமயம் நோக்கிக் கொண்டிருந்தேன். துரதிருஷ்டவசமாகச் சின்னப் பழுவேட்டரையர் என்னை அரண்மனைத் தோட்டத்தில் பார்த்து விட்டார். பிடித்துப் பாதாளச் சிறையில் போட்டுவிட்டார்.''

''எப்போது தப்பினாய்? எப்படி?''

''இன்றைக்குத்தான். வந்தியத்தேவன் என்னும் வாலிபன் ஒருவனுடைய உதவியினால் தப்பித்து வெளியே வந்தேன்....''

''ஆகா! நானும் கேள்விப்பட்டேன். கரிகாலரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டவன் அல்லவா அவன்?''

''ஆம்; ஐயா! ஆனால் உண்மையில் ஆதித்த கரிகாலரைக் கொன்றவன் அந்த வாலிபன் அல்ல!''

''அதைப்பற்றி நமக்கு என்ன கவலை? கொன்றவனாகவேதான் இருக்கட்டுமே? இப்போது எங்கே அவன்?''

''அதோ சற்றுத் தூரத்தில் தெரியும் வேலியின் மறைவில் இருக்கிறான். எனக்கும் அவனுக்கும் இரண்டு குதிரைகளுடன் காத்திருக்கிறான். நான் நேரம் செய்வது பற்றி அவன் இப்போது கோபம் அடைந்திருப்பான். அதைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. எதிர்பாராத விதத்தில் தங்களைச் சந்தித்து விட்டேன்.''

''எப்போது நீங்கள் இங்கே வந்தீர்கள்?'' என்றான் மதுராந்தகன்.

''சற்று முன்னாலேதான் வந்தோம். இந்தக் குடிசைக்கு அருகில் இரண்டு குதிரைகள் இருக்கின்றன வென்று தெரிந்து கொண்டு வந்தோம். குதிரைகளைத் தேடிக் கொண்டிருந்த போது தாங்களும் தங்களை வளர்த்த அன்னையும் தீவர்த்திகளுடன் சாலையில் வந்தீர்கள். அந்த வெளிச்சத்தில் குதிரைகளைக் கண்டு பிடித்தோம். நான் பல வருஷங்களுக்குப் பிறகு வாணியைப் பார்த்தேன். அவளுடன் ஊமைப் பாஷையில் பேசிக் கொண்டிருக்கும் போதே நீங்கள் இந்தக் குடிசைப் பக்கம் திரும்பி வந்தீர்கள். நீங்கள் இந்தக் குடிசைக்குத்தான் வருகிறீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. வந்தியத்தேவன் வேலி மறைவுக்கு ஓடிவிட்டான். நானும் வாணியும் இம்மரத்தின் பின்னால் சிறிது நேரம் நின்றோம். பிறகு அவளும் குடிசைக்குள் போய்விட்டாள். நான்மட்டும் இங்கு நின்று கொண்டிருந்



இது ஆண் பெண் சமத்துவத்தைக் குறிக்கும் ஒரு சின்னம். இந்தச் சின்னத்தை அமெரிக்காவில் இளைஞர்களும் பெண்களும் சட்டை, கார், சைக்கிள் இவற்றின்மீது பொறித்துக் கொள்கிறார்கள். 'டைம்' - முத்து

தேன். அதன் பலனாகத் தங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது...''

''சரி, இனிமேல் நீ என்ன செய்யப் போகிறாய்?''

''தாங்கள் எவ்விதம் சொல்லுகிறீர்களோ, அவ்விதம் செய்கிறேன், ஐயா! தங்கள் பிறப்பைக் குறித்த உண்மையை அறிந்த பிறகும் தஞ்சை அரண்மனைக்குத் திரும்பிப் போகப் போகிறீர்களா? ஒன்று ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் சோழகுலத்து இளவரசர் அல்லவென்பது இன்னும் சிலருக்கும் தெரியும். முதன் மந்திரிக்கும் அவருடைய ஒற்றன் ஆழ்வார்க்கடியான் என்பவனுக்கும் தெரியும். என்றைக்காவது ஒரு நாள்...''

''ஆமாம், ஆமாம்! தஞ்சை அரண்மனைக்குப் போக எனக்கும் விருப்பம் இல்லைதான். நீ என்ன யோசனை சொல்லுகிறாய்?''

''அந்த வேலி மறைவில் இரண்டு குதிரைகள் இருக்கின்றன. தாங்கள் குடிசைக்குள் போவது போல் போய் விட்டு அந்த வேலிப் பக்கம் வாருங்கள். நான் வந்தியத் தேவனுடன் சிறிது பேசிக் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறேன். தங்கள் கையிலுள்ள வாளை அவன் மீது எறிந்து கொன்றுவிடுங்கள். இரண்டு குதிரைகள் மீதும் நாம் இருவரும் ஏறிப் போய்விடுவோம். கோடிக்கரை சென்று இலங்கைக்குப் போவோம்; இலங்கை அரசர் சோழ குலத்தின் பகைவர்; பாண்டிய குலத்துக்குப் பரம்பரை சிநேகிதர். நான் இலங்கை மன்னரை நன்கு அறிவேன். பாண்டிய குலத்தின் மணி மகுடமும், இரத்தின ஹாரமும் இருக்குமிடமும் அறிவேன். என்ன சொல்லுகிறீர்கள்?''

மதுராந்தகன் சிறிது நேரம் யோசனை செய்தான். அவனுடைய உள்ளம் அந்தச் சில விநாடி நேரத்தில் எத்தனையோ கோட்டைகள் கட்டியது.

''ஐயா! நேரம் ஆகிறது. தங்கள் முடிவு என்ன? வந்தியத் தேவன் இனி இங்கேயே வந்து விடுவான்.''

''அவனைக் கொல்ல வேண்டும் என்று சொல்லுகிறாய்?''

''தங்களுக்குத் தயக்கமாயிருந்தால் தங்கள் கையில் உள்ள கத்துவாளை என்னிடம் கொடுங்கள்.''

''வேண்டாம்; இந்த வாளுக்கு வேறு வேலை இருக்கிறது. வந்தியத்தேவனைப் பற்றி எனக்குத் தெரியும். அவன் நல்ல வீரன். அவனையும் நம்முடன் அழைத்துக்கொண்டு போகலாமே?''

''அழைத்துப் போகலாம். ஆனால் இன்னொரு குதிரை?''

''குதிரைக்கு என்ன குறைவு? நான் இன்னமும் பட்டத்து இளவரசன் மதுராந்தகன்தானே!'' என்று கூறிவிட்டுக் கோபச் சிரிப்புச் சிரித்தான்.

பிறகு, ''நீ போ! அவனைச் சற்று நேரம் பொறுமையாக இருக்கச் சொல்! இந்தக் குடிசைக்காரனைப் பார்த்து ஒரு வார்த்தை பேசிவிட்டு விரைவில் வந்து விடுகிறேன்!'' என்றான்.

கருத்திருமன், வந்தியத் தேவன் மறைந்து நின்ற வேலியைத் தேடிக் கொண்டு போனான். நல்ல இருட்டு. தூரத்தில் இராஜபாட்டையில் அவ்வப்போது சிலர் தீவர்த்தி பிடித்துக் கொண்டு போனபோது சிறிது வெளிச்சம் வந்தது. வெகு தூரத்திலிருந்து வந்த அந்த மங்கலான வெளிச்சத்தில் இரண்டு கம்பீரமான புரவிகள் வேலிகளில் கட்டப்பட்டு நிற்பது தெரிந்தது. ஆனால் வந்தியத்தேவனைக் காணவில்லை. மெல்லிய குரலில் கூப்பிட்டும் பார்த்தான். பதிலுக்குக் குரல் கேட்கவில்லை.

'சரி; அவனாகத் தொலைந்துபோனால் நல்லதாகப் போயிற்று' என்று கருத்திருமன் எண்ணிக் கொண்டான்.

* * *

வந்தியத் தேவனும் கருத்திருமனும் முதலில் நந்தவனக் குடிசை யருகில் வந்தபோது அங்கே இருள் சூழ்ந்திருந்தது. குடிசைக்குள் எரிந்த சிறிய விளக்கிலிருந்து சில ஒளிக் கிரணங்கள் வெளியே எட்டிப் பார்த்தன.

தாமரைக் குளத்துக்குத் தண்ணீர் மொள்ளச் சென்ற வாணி அம்மை யாரோ இருவர் இருட்டில் வருவதைக் கண்டு தயங்கி நின்றாள். முதலில் வந்தியத் தேவனுடைய முகம் அவள் பார்வையில் தென்பட்டது. உடனே அவளுடைய முகம் மலர்ந்தது. முன்னொருதடவை சேந்தன் அமுதன் அவனை அழைத்து வந்ததை அவள் மறந்து



ஒவ்வொருவரின்
மேனிக்கும்
பாதுகாப்பு தேவை
CINTHOL
வியர்வை துர்நாற்றத்-
திருந்தும், அதனல்
நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும்,
மற்றவர்களுக்கும் ஏற்படும்
சங்கடத்திலிருந்தும் பாது
காப் பளிக்கிறது.
ஜி-11 (ஹெக்ஸாக்ளோ-
ரோஃபீன்) கலந்த
சிந்தால் டாய்லெட் பவுடர்
இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...
அன்றலர்ந்த மலரின்
நறுமணத்தையும் தருகிறது.
சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே
போக்கிப் பாதுகாப்பளிக்
கும் டாய்லெட் பவுடர்.
Interpub/GP/5 Tam

விடவில்லை. வரவேற்புக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள்.

பின்னால் தொடர்ந்து வந்த கருத்திருமனைக் கண்டதும் பேய் பிசாசைக் கண்டவனைப் போல் பீதியடைந்து செயலற்றுப் பிரமித்து நின்றாள்.

கருத்திருமன் அவளுடன் சமிக்ஞை பாஷையில் பேச முயன்று, அவளுடைய பீதியை ஒருவாறு போக்கினான்.

அவர்கள் இருவரையும் தனியாக விட்டுவிட்டு வந்தியத்தேவன் குடிசையை அணுகினான். வாசற் கதவு அப்போது தான் தாளிடப்பட்டது. பலகணி வழியாக எட்டிப் பார்த்தான். சேந்தன் அமுதன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக முக மலர்ச்சியுடன் பூங்குழலியுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து அவனுக்குச் சிறிது நிம்மதி ஏற்பட்டது.

அவர்களுடைய பேச்சினிடையில் குறுக்கிட்டு விடைபெற்றுக் கொண்டு போக முயல்வது உசிதமா என்று யோசித்துக் கொண்டிருக்கையிலேயே செம்பியன் மாதேவியும் மதுராந்தகனும் அவர்களுடைய பரிவாரங்களும் வந்து விட்டார்கள்.

உடனே அவன் குடிசையை விட்டு நகர்ந்து வேலியைத் தாண்டி அப்பால் குதித்தான். அங்கே கட்டியிருந்த குதிரைகளைக் கண்டதும் ஆழ்வார்க்கடியான் அந்தவரைக்கும் தன்னை ஏமாற்றி மோசம் செய்யவில்லை என்று உறுதி பெற்றான். கருத்திருமன் வரவுக்காக அங்கேயே காத்திருந்தான்.

சிவிகைகள், பரிவாரங்கள், தீவர்த்திகள் எல்லாம் போன பிறகும் கருத்திருமன் வாராதிருக்கவே, வந்தியத்தேவன் பொறுமை இழந்தான்.

மீண்டும் வேலியைத் தாண்டிக் குதித்து வந்தான். மரத்தடியில் மதுராந்தகனும் கருத்திருமனும் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். மதுராந்தகன் கண்ணில் பட அவன் விரும்பவில்லை. கருத்திருமனுக்கும் மதுராந்தகனுக்கும் என்ன அந்தரங்கப் பேச்சு என்ற ஐயமும் அவன் உள்ளத்தில் உதித்தது. அவர்களுடைய பேச்சில் ஒரு பகுதி அவன் காதில் விழுந்தது.

மதுராந்தகன் குடிசையை நோக்கிப் போனபோது, அவனையறியாமல் வந்தியத்தேவனும் பின்தொடர்ந்துபோனான்.

மதுராந்தகன் குடிசை வாசலில் சென்று கதவை இடிக்கலாமா, வேண்டாமா என்று தயங்கி நின்றான். அப்போது உள்ளிருந்து கல கலவென்று சிரிப்புச் சத்தம் கேட்டது. அந்தச் சிரிப்பின் ஒலியினால் மதுராந்தகனுடைய மனம் மாறி விட்டதோ, அல்லது எண்ணி வந்த காரியத்துக்குத் துணிவு வரவில்லையோ, தெரியாது. உடனே திரும்பிக் கருத்திருமன் சென்ற திசையை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

வந்தியத்தேவன் அவன் கண்ணில் படாமல் தப்புவதற்காக அப்பாலிருந்த ஒரு மரத்தின் மறைவுக்குப் பாய்ந்தான். அப்படிப் பாயும்போது அவன் கண்ணில் ஒரு விபரீதமான காட்சி தென்பட்டது. குடிசைக்குப் பின்புறச் சுவரில் ஒரு பலகணி இருந்தது. அதன் வழியாகக் குடிசையில் எரிந்த விளக்கின் ஒளி சிறிது வெளியே வந்து கொண்டிருந்தது. அந்த ஒளியில் ஒரு மனித உருவம் கையில் ஒரு குட்டையான ஈட்டியுடன் பயங்கரமாக நிற்பதைக் கண்டான்.

குடிசையின் பலகணி வழியாக அந்த உருவம் உள்ளே உற்றுப் பார்த்தது.

பின்னர், ஈட்டியைப் பலகணி வழியாக உள்ளே எறியும் நோக்குடன் குறி பார்க்கத் தொடங்கியது. ஆனால் உடனே எறிந்துவிடவில்லை. குறி பார்ப்பதும் மறுபடியும் கீழே தாழ்ப்பதுமாக இருந்தது.

அதே சமயத்தில் குதிரைகள் புறப்படும் காலடிச் சத்தம் கேட்டது.

வந்தியத் தேவன் ஒரு கண நேரம் தத்தளித்தான். குதிரைகள் இரண்டும் போய்விட்டால் அவன் தப்பிச் செல்வது அசாத்தியமாகி விடும்.

குதிரையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போனால் இங்கே இந்தக் கரிய நிழல் உருவம் என்ன கொடிய காரியம் செய்ய எண்ணுகிறதோ, அதைத் தடுக்க முடியாமற் போகும்.

வந்தியத்தேவனுடைய தத்தளிப்பு ஒரு நிமிட நேரத்துக்குமேல் நீடிக்கவில்லை.

குதிரைகள் போனால் போகட்டும்; அவன் கடமை இப்போது இங்கேதான்.

கையில் ஈட்டியுடன் சென்ற கரிய உருவத்தை நோக்கி மெள்ளச் சென்றான்.

குடிசைக்குள்ளிருந்து 'வீல்' என்று ஒரு குரல், — பீதி நிறைந்த பெண் குரல் தெளிவாகக் கேட்டது.

வந்தியத் தேவன் ஜாக்கிரதையை விட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்.

ஈட்டியை உள்ளே எறிய இருந்தவன் வந்தியத் தேவன் ஓடி வரும் சத்தம் கேட்டுத் திரும்பினான்.

திரும்பிய வேகத்துடன் அவன் மீது ஈட்டியை எறிந்தான்.

ஈட்டி வந்தியத் தேவனுடைய விலாவில் பாய்ந்தது. அவன் கீழே விழுந்தான்.

அவன் என்ன ஆனான் என்றுகூடப் பாராமல் ஈட்டியை எறிந்தவன் அங்கிருந்து ஓட்டம் எடுத்தான். **(தொடரும்)**

மூன்று மந்திரவாதிகள்

கதை: வாண்டுமாமா

சித்திரம்: ராஜு

1



அடர்ந்த கானகம். சூரியன் உச்சியில் இருக்கும்போதுதான் அங்கு கொஞ்சம் வெளிச்சம் வரும். மற்ற போதெல்லாம் இருள்தான் ஆட்சி புரியும். அங்கு மனிதர் யாரும் வந்ததில்லை. அந்தப் பயங்கரமான காட்டின் நடுவே ஒரு குன்று. அதில் ஒரு குகை. குகையினுள் இரு கண்ணும் இழந்த ஒருவர் படுத்திருந்தார். தாடி வளர்ந்த முகம். அவருக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். பார்வை இழந்தவரானாலும் பார்ப்பதற்குக் கம்பீரமாக விளங்கினார். பத்மபுரி மன்னர் பரிமளநாதர் பின் எப்படி இருப்பார்?


'அவருக்கா இந்தக் கதி?' என்கிறீர்களா?

வஞ்சனையும் சூழ்ச்சியும் அவரை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டன. தம் முதல் மனைவியின் தம்பி என்று உறவை எண்ணித் தகுதியை மறந்து அவனுக்குச் சேனாபதி பதவியைக் கொடுத்தார். சேனாபதி ரணதீரனை நம்பினார். நம்பிக்கைத் துரோகம் செய்தவன் நாடாள்கிறான். நாட்டைக் காக்க வேண்டியவன் அதைப் பறித்துக் கொண்டான். வஞ்சகனை நண்பனாக மதித்த நல்லவரான மன்னரோ காட்டில் ஒளிந்து உயிர் வாழ்கிறார். அவர் மட்டுமா? இல்லை, இல்லை. அவருடன் அவரது செல்வப் புதல்வர்கள் மூவரும் ஆசைப் புதல்வி ஒருத்தியும் உள்ளனர். மன்னரின் உயிரைக் காத்து அவரை இந்த நிலையிலாவது இங்கு வாழவைத்துக்கொண்டிருக்கும் உத்தம மந்திரி மதிவாணனும், கூட இருக்கிறார். ஆனால் அவர்களெல்லாம் எங்கே? அதோ வருகிறார்களே! அவர்களைச் சந்திக்க இப்பக்கத்தைப் புரட்டுங்கள்....


வில்லேந்தி வீர நடை போட்டு வருகி றானே இவன் தான் விக்கிரமன் பத்மபுரி மன்னரின் மூத்த மைந்தன். மான் வேட்டையாடவா மந்திரி மதி வாணர் இவனுக்கு வில்வித்தை பயிற்றுவித்திருக்கிறார்?
...இல்லை... இருக்கவே முடியாது அம்பெய்வதிலே அதிசூரன். இவன் பகைவர்களுக்குப் பயங்கரமான வகைப் போகும் காலம் விரைவில் வரத்தான் போகிறது.
இதோ வருகிறானே இவன் தான் ஆனந்தன். பரிமள நாதரின் இரண்டாவது மகன். கையிலே வாள், தோளிலே பழக்குலை. பொருத்த மில்லாத காட்சி தான்—இப்போது...
...ஆனால் ஆனந்தனின் வாள் வீச்சு எப்படிப் பட்டதென்று மதிவாணருக்குத் தெரியும். மன்னருக்கு மறுவாழ் வளிக்கும் வல்லமை அந்த வாளுக் கும் அதை ஏந்திய கரங்களுக்கும் உண்டு.
பார்த்திபனுக்கு ஈட்டி ஒன்று ஆயுதமானாலும்...
மற்போரிலும் வல்லவன் அவன். மன்னரின் மூன்றாவது மைந்தனான பார்த்திபன் மதிவாணருக்குச் செல்லமான மாணவன்.


இவர் தான் மதிவாணர். மதிமந்திரி! மன்னரை மறுபடியும் அரியணை ஏற்றிய தீரவன் என்று உறுதியோடு செயல் படுபவர்.
அரசகுமாரர்களோ இனியும் அடக்கி வைக்க முடியாது. குதிரைகள் கூடத் தயாராகி விட்டன.
மன்னருக்கு இரு மனைவியர். மூத்தவள் அளித்த பாக்கியம் தான் இந்தா உக்ரசமாக நீராடிக் கொண்டிருக்கும் இந்துமதி - மூன்று இளவரசர்களுக்கும் மூத்த சகோதரி.
அப்பா! இனியும் எங்களால் இந்தக் காட்டில் அடைந்து கிடக்க முடியாது.
விடை கொடுங்கள் அப்பா. வெற்றி அல்லது வீர மரணம்.
எங்கள் தந்தைக்கு மந்திரி நீங்கள். எங்களுக்குக் குரு. உங்கள் முடிவு தான் என்ன மதி வாணரே?
நீங்கள் இங்கிருந்து வெளிப்பட வேண்டிய காலம் வந்து விட்டது. தந்தையின் அனுமதியும் ஆசியும்...
இழந்த என் பட்டத்தையும் பார்வையையும் மீட்டு வருவார்கள் என் கண் மணிகள் என்று தான் இந்த இருபது வருடங் களாகக் காத்திருக்கி றேன் மதிவாணரே. உமது அனுமதியும் ஆசியுமே அவர்களுக்கு ஆயுதம். அதை அளித்து அனுப்புங்கள்.
இழந்த நாட்டை எப்படி யும் மீட்போம்! தந்தைக் கும் வாழ்வளிப்போம்! இல்லையேல் இங்கு திரும்ப மாட்டோம். வெற்றி அல்லது வீர மரணம்!
அப்போது அங்கு வந்த இந்துமதி...
சகோதரர்களே! சபதத் தில் எனக்கும் பங்குண்டு. ஏனென்றால் வஞ்சகன் ரணதீரன் என் தாயோடு உடன் பிறந்தவன். அந்தக் கறையை நான் துடைத்துக் கொள்ள வேண்டாமா?


பார்த்திபா, மந்திரி எனக்கும் ஒரு குதிரை ஏற்பாடு செய்திருந்தால் உனக்கு இந்தச் சிரமம் இருக்காது.
சிரமம் எனக்கில்லே அக்கா, குதிரைக்குத்தான்!
போகும் வழியில்...
என்னைக் கொல்லாதே...!
ஓநாய் பேசுகிறதே...!
ஆமாம், நல்லவர்களோடு நாங்கள் பேசுவோம். எங்களுக்கு உயிர்ப்பிச்சை அளித்தால் உங்களுக்கு நான் உதவுவேன்.
ஓநாயின் வேண்டுகோளை ஏற்கிறான் விக்ரமன். தாய் ஓநாய் தன் ஒரு குட்டியை அவர்கள் பின்னே அனுப்பி வைக்கிறது.
இன்னும் கொஞ்சதூரம் போனதும், ஒரு நரி...
என்னைக் கொல்லாதிருந்தால் உனக்கு உதவியாக ஒரு குட்டியை அனுப்புவேன்.
அப்படியே ஆகட்டும்.
என்றும் உனக்கு நன்மை உண்டாகும், எங்களை உயிரோடு விட்டால்...
நன்றி மறவாத விலங்குகள் மூன்றும் தங்கள் குட்டிகளில் ஒன்றை இளவரசர்களுக்குத் துணையாக அனுப்புகின்றனர். இவர்கள் பிரயாணம் அவைகளுடன் தொடருகிறது.
தொடரும்



சென்ட்ரல்

ம.வி.ஆர்

அத்தியாயம் 9

ஞாயிற்றுக்கிழமை காலை பிருந்தாவன் எக்ஸ்பிரஸுக்குக் கார்டாகச் சென்ற ரொஸாரியோவுக்கு வருகிற ஏப்ரலில் ஐம்பத்திரண்டு வயது நிறையும். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் மனைவி க்ளாரா ஆறு வயது மேரியையும் மூன்று வயது எட்மண்டையும் அவருடைய தோளின்மேல் சாத்திவிட்டுக் கண்களை மூடினாள். ஓரிரு ஆண்டுகளுக்குக் குழந்தைகளை உறவினர்களிடமும் அக்கம் பக்கத்து வீட்டாரிடமும் 'பார்த்துக் கொள்ள'ச் சொல்லி விட்டு ரொஸாரியோ தம் டியூட்டிக்குப் போய் வந்து கொண்டிருந்தார். அகால வேளைகளில் புறப்படுவதும், திரும்பி வருவதும் அவருடைய வேலையில் சகஜமான நிகழ்ச்சிகள். மேரி பள்ளிக்கூடம் செல்ல, எட்மண்ட் அக்கம் பக்கத்து வீடுகளிலும் உறவினர்களுடைய இல்லங்களிலும், யாருடைய அன்பும் பரிவும் இல்லாமல் திரிந்து கொண்டு வந்தான்.

சுமார் மூன்று வருடங்கள் ரொஸாரியோ பல்லைக் கடித்துக் கொண்டு நாட்களைத் தள்ளினார். முப்பத்து நான்காம் வயதில் மனைவியை இழந்த அவர் இரண்டாம் கலியாணத்தைப் பற்றி முதலிலெல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை. க்ளாராவைக் காதல் மணம் செய்து கொண்டிருந்த அவர், அவளுடைய ஆத்மாவின் திருப்தியையும் நிம்மதியையுமே வேண்டினார்.

ஆனால் நாள் செல்லச் செல்ல, வீட்டின் அவலம் கண்ணில் அறைய அறைய அவருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. கூடப் பிறந்த தம்பியின் குடும்பத்தில் குழந்தைகளை விட்டு விடலாமா என்று ஓரிரு மாதங்கள் யோசித்தார். ஆனால் தம்பி வடக்கே கோரக்பூரில் ரயில்வேயில் கார்டாக இருந்தான். அவனுக்கே ஐந்தாறு குழந்தைகள். அவர்களுடன் இவர்களையும் சேர்த்தால் தம்பியின் மனைவி பாரத்தைத் தாளமுடியாமல் ஒடிந்து போவாள். மேலும் அவருடைய குழந்தைகளை அடிக்கடி பார்க்கக்கூட இயலாது. மனைவியைப் பறிகொடுத்த துக்கத்தோடு, குழந்தைகளைப் பிரிந்து வாழவேண்டிய துர்ப்பாக்கியமும் அதனால் ஏற்படக் கூடிய வேதனையும் அவரை அரிக்க ஆரம்பிக்கும்.

ஒரு நாள் டிவிஷனல் டிராஃபிக் சூபரின்டென்டின் பிறந்த நாளுக்குச் சென்ற ரொஸாரியோ, அந்த அதிகாரியின் மைத்துனன் பெண் லூஸியைச் சந்திக்க நேர்ந்தது. லூஸிக்கு இருபத்தாறு வயது. கணவனை ஒரு விபத்தில் இழந்தவள். குழந்தைகள் இல்லாதவள்.

விருந்தில் சந்தித்த இருவரும் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்த டி.டி.எஸ். மறுநாள் இருவரையும் தனித்தனியே கூப்பிட்டு அனுப்பிப் பேசினார். எடுத்த எடுப்பிலேயே லூஸி தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். ரொஸாரியோ மூன்று மாதங்கள் அவகாசம் கேட்டார். இந்த மூன்று மாதங்களுக்குள் தன் மனம் சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வரும் என்று அவர் நம்பினார். ஆனால் அந்தக் குறுகிய காலத்தில் லூஸி நாலைந்து தடவைகள் அவருடைய வீட்டுக்கு வந்தாகிவிட்டது.



எட்மண்டுக்கு ஆறு வயது ஆயினும் அவனைத் தூக்கி எடுத்துக் கொஞ்சினாள். மேரிக்குக் கணக்கும் பூகோளமும் சொல்லிக் கொடுத்தாள். ஜானி பரிபூரணமாகத் தன் குழந்தைகள் மீது அன்பும் பாசமும் காட்டுகிறாள் என்று ரொஸாரியோ நம்பினார். அவருடைய உள்ளம் கறை படியாத உள்ளம். ஜானிக்கு ஆதரவு காட்ட இந்த உலகத்தில் யாரும் இல்லை என்றே, பணக்காரச் சொந்தக்காரர்கள் அவ்வப்போது அவளுடைய நச்சரிப்பால் உந்தப்பட்டு அளிக்கும் உதவிகளைக் கொண்டு வாழ்கிறவள் அவள் என்றே அவருக்குத் தெரியாது. டி. டி. எஸ். ஸின் மைத்துனன் பெண், மைத்துனன் இறந்து போயாகிவிட்டது, பெண்ணும் கணவனை இழந்தவள் என்ற சமாசாரங்கள்தான் தெரியும்.

மூன்று மாத அவகாசம் கேட்டவர் இரண்டே மாதங்களில் தம் சம்மதத்தைத் தெரிவித்தார். எளிய முறையில் கலியாணம் நடந்தது. அக்கம் பக்கத்தில் குழந்தைகளை விட்டு விட்டுத் தம்பதியர் கோடைக்கானல் சென்றனர். முதல் மனைவி க்ளாரா, குழந்தைகளின் க்ஷேமத்துக்காக இரண்டாம் கலியாணம் செய்து கொண்ட அவரை, கல்லறையில் இருந்துகொண்டே வாழ்த்துவாள் என்று ரொஸாரியோ மனப்பூர்வமாக நம்பினார்.

ஏழெட்டு மாதங்களுக்கு வண்டி சரியாகத்தான் ஓடியது. அதன் பின்தான் கோளாறு மெள்ள மெள்ளத் தெரியலாயிற்று. முணுமுணுக்க ஆரம்பித்த ஜானி நாளடைவில் இரையலானாள். பத்து வயது மேரி படிப்பையும் பார்த்துக்கொண்டு வீட்டு வேலைகளையும் கவனிக்கவேண்டியதாயிற்று. எத்தனையோ நாட்கள் பகலில் மட்டும் வீட்டில் இருக்காத ஜானி நாள் செல்லச் செல்ல இரவுகளிலும் நேரம் கழித்து வரலானாள். ரயில்வே கார்டின் வேலை நேர முறைகள் அவளுடைய பொழுதுபோக்குகளுக்குச் சாதகமாக அமைந்தன. ஆங்கிலோ—இந்தியன் அஸோஸியேஷனில் அவள் கமிட்டி அங்கத்தினரிலிருந்து, உதவிக் காரியதரிசி பதவிக்கு உயர்ந்தாள். குழந்தைகளைப் பெறாததால் உடற்கட்டு கலையாமல் யௌவனத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது. அழகை விட அவளிடம் கவர்ச்சிதான் அதிகம். அஸோஸியேஷன் விருந்துகளிலும்,

தேநீர் விருந்துகளிலும் அவள் பளிச்சென்று நின்ருள். அவளுடன் நடனம் ஆடுவதில் பலர் பெருமையடைந்தார்கள். சிலர் தம் வீட்டில் விருந்துக்கு அழைத்தார்கள். அங்கே விருந்துக்கு முன்னுல் இசை, நடனம், மது வகைகள் எல்லாம் விளையாடின...

அநாதையாக இருந்த கைம்பெண்ணுக்கு அடைக்கலம் வேண்டியிருந்தது. அப்பாவி ரொஸாரியோ கிடைத்தார். அதன்பின் அவளுடைய சுபாவம் வெளியே வந்தது. இதைப் புரிந்துகொள்ள ரொஸாரியோவுக்கு ஓரிரு வருடங்கள் ஆகின. அப்போது அவர் நாற்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தார். கர்த்தரின் மேல் பாரத்தைப் போட்டு விட்டு, பச்சைக் கொடியும், சிவப்புக் கொடியுமாக அவர் நாட்களைத் தள்ளலானுர்.

தந்தையால் குழந்தைகள் மீது முழுக் கவனத்தையும் காட்ட முடியவில்லை. சித்திக்கு மூத்தாள் குழந்தைகளின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்ற எண்ணமே பிறக்கவில்லை.

மேரியின் பிஞ்சு உள்ளத்தில் அப்பாவின் வேதனை முள்ளாகக் குத்தியது. ஆனுல் அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் அவளுடைய சௌகரியங்களிலும் தன் படிப்பிலும் முனைந்து நின்ருள். அம்மாவையே உரித்து வைத்திருந்த அவளைப் பார்க்கும்



போதெல்லாம் ரொஸாரியோவின் கண்கள் ரத்தத்தை வடிக்கும். தாம் இருந்தும் தம் பெண் அநாதை என்று மனம் விம்மும்.

எப்படியோ காலம் ஓடியது. மேரிக்குப் பதினாறு வயது ஆகியது. தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் படித்தாள். டெலிபோன் ஆபரேட்டர் பயிற்சிக்குச் சென்றாள். ஞாயிறு தவறாமல் மாதா கோவிலுக்குச் சென்றாள். இளம் வயதிலேயே அடிபட்ட உள்ளம் வயது வந்தபோது ஆத்திரத்தில் கத்தவில்லை. அப்பாவையும் அதன் பின் கர்த்தரையும் திருப்திப்படுத்துவதுதான் தன் வாழ்க்கையின் லட்சியம் என்று கருதினாள்.

ரயில்வேயிலேயே டெலிபோன் ஆபரேட்டர் வேலை கிடைத்தது. சென்ட்ரல் ஸ்டேஷனில் போட்டார்கள். ஆங்கிலோ இந்திய பாணியில் ஆடை தரிக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. விலை குறைந்த வாயில் புடவைகளையும் சோளிகளையும் வாங்கினாள்.

மேரியின் நடையே ஒரு தனி அழகு. பேசினால் இசையின் இனிப்பைக் காது உணரும். பிறர் கஷ்டப்படுவதைக் கண்டால் அவள் கண்ணில் நீர் தளும்பும். எட்மண்ட் அப்பாவுடன் எதிர்த்துப் பேசும்போதோ, சித்தி அவரை அலட்சியம் செய்யும்போதோ மேரி துவண்டு போவாள். அப்பா மீது இரக்கமும், பரிவும் பீறிடும். அதே நேரத்தில் சகோதர பாசமும், அம்மா ஸ்தானத்தில் இருக்கிற சித்தி மீது அபிமானமும் பொங்கி எழும். அழுது தீர்த்து மனச் சாந்தி பெற முயல்வாள். எட்மண்டிடம் அவன் ஒழுங்காக இருக்க வேண்டும் என்று கெஞ்சுவாள். ஊதாரித்தனமாகச் செலவு செய்து வீட்டின் பொறுப்பையே உணராத சித்தியிடம், அவளுடைய உதாசீனத்தையும் பொருட்படுத்தாமல், அப்பாவிடம் அன்பும் மரியாதையும் காட்டும்படி கெஞ்சுவாள்.

இந்த மேரிக்கு இப்போது இருபத்திநாலு வயது. இரண்டு வருடங்களுக்கு முன்னால், சற்றுப் பூசினாற்போல் இருந்த அவள் இளைத்துப் போயிருந்தாள். கண்களின் கீழே மன ஆயாசத்தின் முத்திரைகளாகக் கருங் கோடுகள் பிறந்திருந்தன. உதடுகள் புன்முறுவலைக் காட்டினாலும் ஒரு வகை சோகம் முகமெல்லாம் படர்ந்திருப்பதாகத் தோன்றியது. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே மாதா கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தவள் ஒரு வருட காலமாகத் தினந்தோறும் சென்று வருகிறாள். அவள் என்ன பிரார்த்தனை யாருக்காகச் செய்கிறாள் என்பது அந்தக் கர்த்தருக்குத்தான் தெரியும்.

இருபத்திரண்டாவது வயதில், வானத்தில் எரி நட்சத்திரம் திடீரெனப் பூப்பது போல, மேரியின் மனத்தில் காதல் பூத்தது. குழந்தைப் பருவத்தில் சித்தி வந்த நாளிலிருந்து அவளுடைய மனத்தில் அசையாமல் ஆழ்ந்திருந்த வைராக்கியம் என்றென்றும் கன்னியாகவே இருந்துவிட வேண்டும் என்பதுதான். சித்தியின் ஆடம்பர, அலட்சியப் போக்கு, ஊதாரித்தனமான வாழ்க்கை, கணவருக்குச் செய்யும் அநீதி இவற்றையெல்லாம் மேரி ஒரு படிப்பினையாகக் கருதினாள். தானும் ஒரு நாள் ஒருவனுக்கு மனைவியாகி, சித்தியைப் போல் மாறிவிடுவோமோ என்ற பயம், அசம்பாவிதமாய், அர்த்தமில்லாமல், அவளுக்கு எழுந்து, அவளைத் தினம் தினம் உலுக்கியது. பருவம் வந்ததும் முளைக்க ஆரம்பித்த இச்சைகளை அழுக்கு எனப் பாவித்துக் கட்டிப் போட்டாள். நடனம், சினிமா இவையெல்லாம் மனத்தைக் கிளறி, உடலைத் திசை தெரியாமல் அலைய விடும் என்று மிரண்டு, களியாட்டங்களையும் கேளிக்கைகளையும் தவிர்த்தாள்.

ஆனால் இந்த வைராக்கியம் உதவி ஜெனரல் மானேஜருடைய சுருக்கெழுத்தாளர் பலராமனுடன் பழக ஆரம்பித்தபோது தளர ஆரம்பித்தது. பலராமன் மேரியைச் சந்தித்தது அவளுடைய விதியின் கொடுமை. அவன் தன்மீது உயிரையே வைத்திருக்கிறான் என்பதை அவள் அறிவாள். ஆனால் பலராமனுடைய தாயாரும் தகப்பனாரும் பழமையில் ஊறியவர்கள். அவர்களுடைய கோபத்துக்கும் வேதனைக்கும் பலராமனைப் பலியிட மேரி விரும்பவில்லை. என்னதான் அன்புடன் பழகினாலும் அவள் விலகியே நிற்க முயன்றாள். காதலைத் துறக்கவும் தயாராக இருந்தாள். பலராமன் விடவில்லை. உற்றார், உறவினர்களையும், தந்தை வைத்துவிட்டுப் போகக்கூடிய வீட்டையும் தியாகம் செய்யச் சித்தமாயிருந்தான். ரொஸாரியோவையே சந்தித்து, தன் ஆசையையும் முடிவையும் சொன்னான்.

ரொஸாரியோவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அந்தண வகுப்பில் பிறந்த ஓர் இளைஞன் தன் பெண்ணை மணக்க விரும்புவதைக் கண்டு மனம் வெறுக்கவில்லை. ஆனால் ஜாதி வேற்றுமைகள், மண வாழ்க்கையின் தினசரி ஓட்டத்தில் அவ்வப்போது தலைதூக்குமே? அப்போது பெண்ணும் அவனும் எப்படி நடந்து கொள்ளுவார்கள்? காதலிக்கும்போது ஜாதியைப் பற்றி நினையாதவர்கள் தாம்பத்தியத்தின் இளவேனில் கழிந்த பின் எப்படி நடந்து கொள்ளு

வாங்கவோ செலவைப் பற்றி அவர் சிறி தேனும் பயப்படவில்லைதான். ஆனால் பசுபாலன் என்றென்றும் ஓர் மாதிரி யாக இருப்பானு என்று சொல்லியும், வெளி தோற்றுவித்த பயமும் அவருள் எழுந்தது. அவருடைய பயத்துக்கெல் லாம் உறுதிமொழியளவாய் சமாதானம் சொன்னான் பசுபாலன்.

ஒரு வெள்ளிக்கிழமை பதிவுத் திரு மணம் நடத்திக் கொள்ளுவது என்று நிச்சயமாயிற்று. கடைசி வரையில் ரகசியமாகவே இருந்த விஷயம், பின்ன ரின் மாமாவுக்குத் தெரிய வந்தது. ஊரில் இருக்கிற அப்பாவைச் சந்திக்கத் திரும்பினார். அங்கிருந்து அவருக்கு உடல் நலம் சரியில்லை என்று தந்தி பறந்தது. மாமாவே பலவந்தமாய் பசுபாலனைத் தூக்குவது என்பிரவீன் ஏற்றிக் கொண்டு போனார். போனவர் ஒரு மாதத்துக்குப் பசுபாலனை விட வில்லை. கிராமத்தில் ஜாதியார் அவ ளையும் பசுபாலனுடைய ஜாதியைக் குறைப்பிறார்கள். அப்பா "தூக்குக் கயிற் றில் தொங்கி விடுவேன்" என்று பய முறுத்தினார். அம்மா தலையை வீசிக்கும் போட்டுக் கொண்டு கதறினாள்.

சொத்தத்தில் கல்யாணம் நடக்க வில்லை. யார் யார் காலிலோ பிடித்து, மாமாவாரும் பசுபாலனைச் செல்லிகை விருந்து திருச்சிக்கு மாற்றினார்.


அதன் பின் எதிர்ப்பட்சத்திரம் வானி லிருந்து மறைந்தது. பேபி விதியை நொந்து கொண்டாள். பசுபாலன் என்ற பெயரின் வாசனை மட்டும் அவ ளுடைய உள்ளத்தில் நறுமணம் வீசிக் கொண்டே இருந்தது.

• • •

ரோஸ்மேரியின் பின்னே எட் மண்ட் ஜுனாதி வீரன். குழுக்க ஒழுக்க இளம் பருவத்திலிருந்து சுதந்திரமாகவே அமைந்து நின்ற அவன், சிந்தனையிலே அவனுடைய எல்லாக் குணங்களிலும் பின்பற்றினான். படிப்பு ஏறவில்லை. குடிப் பழக்கம் பதினாறும் வயதிலேயே அவனைத் தாவிப் பிடித்துக் கொண்டது. பெற்ற தாய்ப்பாலே அவன் இன்னும் கைநீட்டி அடிக்கவில்லை. மற்றபடி எல் லாம் நடந்து விட்டது.

இந்த எட்மண்டை எப்படியோ, திரு சொந்திருயின் ஒரு தொழிற் கூடத்தில் பிட்டராகப் பயிற்சி பெறச் செய்து, அதே இடத்தில் வேலையும் வாங்கிக் கொடுத்தாள். ஒரு வருஷத்தில் அவன் அங்கே தன் திறமையைக் காட்டினான். போனஸ் தராதில் நிரியாகப் பங்கு கொண்டான். சொர்க்கம் மாடிவேலுள்ள 'பேரோ' சென்னையில் பெரும் பங்கை

அழகும் (G)பாட்டு!



உண்மையே மிகவும் அழகான பாட்டு எனக் கூறுகின்றவர் எவரோ? -

உங்கள் வீட்டுப் பாட்டு எங்கே? அதிலே பிள்ளை இல்லை வேண்டும் புதுமையும் அழகுதான்.

(இசையைப் பற்றிய நூலிலிருந்து...)

ஏற்று. அவர் திடீரென்போது மன்னை விழும் அடித்தாள். வாக் - அவுட்டும் அதன் பின் வெகுநேரமும் நடந்தன.

எட்மண்ட் மீண்டும் தன்னிச்சையில் இறங்க ஆரம்பித்தான். தாய்ப்பாலுக்கும் பணம் தருவது நின்றுதான் அவன் வெற்றியுடன் செய்த காரியம்.

ரோஸ்மேரியோ கர்த்தருக்கின்று பாரத் தைப் போட்டு, நெஞ்சில் வைத்த முள்ளை மறக்க முயன்றாள்.

• • •

பேபி 'எவ்வொலி' கவுண்டரின் எதிரே வந்து நின்றாள்.

"குட்மார்னிங் மங்களா!"

"குட்மார்னிங் பேபி... குட்மார்னிங்."

"ரொம்ப பிஸியா இருக்கியோ...?"

"ஆமாம்... இத்தனை நேரம் பணி தான் 'போன்' அடித்தான்."

"வரும்போது எதிரே பார்த்தேன்... அப்பாவைப் பார்க்க வேண்டும்."

"பாரேன்."

"நீயும் கூட இருக்க வேண்டும்."

"என்ன விஷயம்?" என்று கேட் டாள் மங்களா.

"எட்மண்ட் விஷயமாய்!"

"உன் தம்பிக்கு என்ன? நன்றாகத் தானே சிகரெட் குடித்து வரி கற்று கிறான்?"

"இரண்டு நாட்களா வீட்டிலே ஒரே ரகளை. பணம் பணம் என்று பிய்த்து எடுக்கிறான்."

"குதிரைப் பந்தயத்தில் நிறைய விட் டிருப்பான்... அது சரி உங்க வீட்டு ரகளைக்கும் என் அப்பாவை நீ பார்ப் பதற்கும் என்ன சம்பந்தம்?"

"வேண்டாள் ரகசியமேலின், ரகசியமே சொல்லவேண்டியதில் விட்டேன்," சிரித்தாள்.

டர்னர் என்று நிறையப் பேர் எடுக்கப் போகிறார்கள். இப்போதைக்கு டெம்பரரி வேலைதான். எட்மண்டை இண்டர்வ்யூவுக்குக் கூப்பிட்டிருக்கிறார்கள்!''

''என்ன? எட்மண்டுக்கு இண்டர்வ்யூவா? அவன் அப்ளிகேஷன் போட்டானா? இல்லை நீ அவன் கையெழுத்தைப் போட்டு அனுப்பினாயா?''

''பேப்பர்லே விளம்பரத்தைப் பார்த்ததும் அவனிடம் காட்டிக் கெஞ்சினேன்...அதை விட்டுத் தள்ளு. உன் அப்பா உதவி பண்ணினால் போதும்...''

''என் அப்பா இங்கே எஸ். எஸ். மேற்கத்திய ரயில்வேயில் யாரைத் தெரியப் போகிறது?''

சொன்னவள், 'அடுத்த கணமே நிமிர்ந்து உட்கார்ந்தாள். கேதாரம் வெஸ்டர்ன் ரயில்வேயில் டிவிஷனல் என்ஜினியர். அவனையும் அவன் மாமாவையும் அப்பாவுக்குத் தெரியும். அவள் யோசிக்கையிலேயே மேரி ஆயாசத்துடன் கேட்டாள்: ''யாரையும் தெரியாது என்று சொல்லறே?''

''கொஞ்சம் பொறு.''

''சரி.''

''இதோ பார். இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை. நாளை திங்கள். நாளைக்கு மத்தியானம் எனக்கு ஓய்வுதான். அப்பா வீட்டில் இருப்பார். சரியா மூணு மணிக்கு வா. எட்மண்டை அழைத்துக் கொண்டு வராதே.''

''தாங்க்யூ, மங்களா... யாராவது இருக்கிறார்களா?''

''எல்லாம் அப்புறம் சொல்றேன்... ஆனால் ஒண்ணு. வேலை கிடைச்சா எட்மண்ட் ஒழுங்கா இருக்கணும்.''

''நான் எப்படி மங்களா இதற்கு உத்தரவாதம் கொடுக்க முடியும்? நான் அவனுக்காகப் பிரார்த்தனை பண்ணறேன். அதுதான் என்னாலே முடியும்.''

மங்களா சிரித்தாள்.

''கவலைப்படாதே. அப்புறம் இன்னொரு சமாசாரம். எங்க வீட்டிலே இதுவரையில் யாருக்குமே பிறந்தநாள் கொண்டாடியதில்லை. பதினொரு பேர் இருக்கிறோம். எப்படிக் கொண்டாடுகிறது...ஆனால் இந்த வருஷம் சுஜாவின் பிறந்த நாளைக் கொண்டாடுறதுன்னு முடிவு செய்திருக்கிறோம்.''

''குட்... வெரிகுட்... அவளுக்கு என் நல்வாழ்த்துக்கள்.''

''இதை இன்னிக்கே சொல்லாதே. வியாழக்கிழமை அன்னிக்கு, ராத்திரி 'கேக்'கை வெட்டறபோது சொல்லு. உன் அப்பாவையும் அழைக்கப் போகிறோம்.''

''அவருக்கு டியூட்டி இருக்கோ என்னவோ!''

''அதைப் பற்றி அப்புறம் பார்க்கலாம். நீ உன் போக்கிலே, எப்போதும் போல் சாயங்காலத்திலிருந்து ராத்திரி வரை மாதா கோயில்லே போய் ஒண்டிக்காதே... வியாழக்கிழமை நினைவிருக்கட்டும்.''

''தாங்க்ஸ், மங்களா!''

''ஆமாம், உன் மாற்றாந்தாய் எங்கே? இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறாளா?''

''ராத்திரி ஒரு மணிக்குத்தான் வந்தாள். சனிக்கிழமை இரவு...''

''மேரி! அவளுக்கு இப்போ வயசு முப்பத்தைந்து இருக்குமா?''

''அவளுக்கு நாற்பத்தொண்ணு!''

''ஸ்லிம் என்று இருக்காள். உடம்பை இப்படி வைச்சுக்க அவள் என்ன சாப்பிடுகிறாள்?''

''வேறு பேச்சு இருந்தால் பேசு, மங்களா!''

''உன் அப்பா ஒரு அப்பாவி.''

''புதுசா ஏதேனும் சொல்லு.''

மங்களா சிரித்தாள். ''புதுசா சொல்லணுமா? நீ ஒரு முட்டாள்.''

''எனக்குத் தெரிஞ்சதைச் சொல்லாதே!'' மேரி சிரித்தாள்.

''உன் சுபாவத்துக்கும் குணத்துக்கும் நீ கலியாணம் செய்து கொண்டு நிம்மதியா நிறைய குழந்தைகளைப் பெத்துக் கொண்டிருக்கணும், மேரி! நீ உன் வாழ்க்கையைப் பாழடிச்சுண்டிருக்கே!''

''உஸ்... இது என்கொயரி! மாரேஜ் ப்யூரோ இல்லை...''

''நாளைக்கு மூன்று மணிக்கு'' என்றாள் மங்களா.

''ஆகட்டும்!''

மேரி மெதுவாக நடந்து சென்றாள். அவளுடைய ஊதா நிற வாயில் புடவையையும் அதற்கேற்ற சோளியையும் பார்த்துக் கொண்டே மங்களா உட்கார்ந்தாள். அவளுடைய உள்ளத்தில் ஒருவித பரிவும், வேதனையும் எழுந்தன. மனம் அதே சமயத்தில் பலராமனையும் சபித்தது. அவனல்லவா இவளை இப்படி உருத்தெரியாமல் வாழ்வில் ருசி இல்லாமல் அடித்து விட்டான்?

அடுத்த கணம் 'ரீடர்ஸ் டைஜஸ்டில்" பார்வையைச் செலுத்தலானாள். ஆனால் இப்போது திடீரென்று வெஸ்டர்ன் ரயில்வே டிவிஷனல் என்ஜினியரின் நினைவு வந்தது.

எட்மண்டுக்கு ஒரு சிறிய வேலை கூடவா அவரால் வாங்கிக் கொடுக்க முடியாது? முடியாமற் போனால் அவர் என்ன அதிகாரி? எட்மண்டின் வேலையை விட ரோஸாரியோவின் விடுதலையைத் தான் மங்களா பெரிதாக நினைத்தாள்.

(தொடரும்)

இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

அவர்களின் விஜயம்



சந்திக்கும் விலாசங்கள் :

1-ந் தேதி திருநெல்வேலி : நெல்லை லாட்ஜ், காலை 8 மணி முதல் பகல் 2 மணி வரை.

1-ந் தேதி நாகர்கோவில் : உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பவன், மாலை 4 மணி முதல் 6 மணி வரை.

2-ந் தேதி மதுரை : மணீஸ் கபே, காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை.

2-ந் தேதி புதுக்கோட்டை : வஸந்தா லாட்ஜ் மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை.

3-ந் தேதி காரைக்குடி : AVM. PL. ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணி முதல் 11 மணி வரை.

3-ந் தேதி அறந்தாங்கி : கோகுலம் லாட்ஜ் பகல் 12 மணி முதல் 1 மணி வரை.

3-ந் தேதி பட்டுக்கோட்டை : அசோகா லாட்ஜ் பகல் 2 மணி முதல் 5-30 மணி வரை.

3-ந் தேதி மன்னார்குடி : மன்னை லாட்ஜ் மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை.

4-ந் தேதி திருச்சி : ஹோட்டல் அஜந்தா காலை 8 மணி முதல் 2 மணி வரை.

4-ந் தேதி கரூர் : பெரியார் உணவு விடுதி மாலை 3-30 முதல் மாலை 5 மணி வரை.

5-ந் தேதி தஞ்சை : ராஜா ரெஸ்ட் ஹவுஸ் காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.

5-ந் தேதி திருவாரூர் : அபூபக்கர் பில்டிங் மாலை 2 மணி முதல் மாலை 4 மணி வரை.

5-ந் தேதி நாகை : நிலகர விலாஸ், பகல் 5 மணி முதல் 7 மணி வரை.

6-ந் தேதி காரைக்கால் : அசோக் லாட்ஜ் காலை 8 மணி முதல் 10 மணி வரை.

6-ந் தேதி கும்பகோணம் : தாஜ்மஹால் லாட்ஜ், காலை 11 முதல் 2 மணி வரை.

6-ந் தேதி மாயவரம் : காளியாகுடி லாட்ஜ் பகல் 3 மணி முதல் 4-30 மணி வரை.

7-ந் தேதி கடலூர் N. T.: ஹோட்டல் பிருந்தாவனம், இரவு 7 மணி முதல் 8-30 மணி வரை.

7-ந் தேதி பாண்டிச்சேரி : அருணா லாட்ஜ் காலை 8 மணி முதல் 11 மணி வரை.

7-ந் தேதி சிதம்பரம் : ஹோட்டல் பாலேஸ் பகல் 12 மணி முதல் 1 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை

போன்: 316] பழனி [தந்தி: சித்தர்

ஆண்களின் தேவைகளை நிறைவேற்றுகிறது ஒகாஸா



வாழ்விலே வெற்றி காண்பதற்கு வேண்டிய வலிமையை ஆண்களுக்கு அளிக்கிறது ஒகாஸா. வயதுக்கு மிஞ்சிய முதுமையைத் தடுத்து, ஆரோக்கியத்தைக் கூட்டி இளமைத் துடிப்பையும் வலிமையையும் மீட்டுத் தருகிறது ஒகாஸா. உலகெங்கிலும் இலட்சக் கணக்கான வயது வந்தவர்கள் இன்று ஒகாஸா சாப்பிடுகிறார்கள். இழந்த வலிமையை மீட்டுத் தரும் நவீன-டானிக் மாத்திரைகள் அவை.

ஒகாஸா-தோர்மோ-பார்மா லிமிடெடின் லண்டன்-பெர்லின் தயாரிப்பு.

எல்லா பிரபல மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது. அல்லது நேராகவும் பெறலாம்.

OKASA CO. PVT. LTD.
P. O. BOX 396, BOMBAY-1.



அன்னை அழகி!

கன்னங் கருக்கழகி
  கார்மின்னல் பேரழகி
தன்னந் தனி அழகி
  தாயாம் வெண்ணீற்றழகி

ஈன்றொஞ் சகத்தழகி
  ஈக்களிக்கும் வீறழகி
பொன்னாஞ் சிலம்படிகள்
  போற்றி எனில் வெற்றியன்றே!

சாம்ப சிவத்தழகி
  சங்கார மேட்டழகி
ஓம்பு தவத்தழகி
  ஓங்காரப் பாட்டழகி

காம்பு மலரழகி
  காயாம்பூ வானழகி
ஆம் பொன் சிலம்படிகள்
  அஞ்சலிக்க வெற்றியன்றே!

மஞ்சள் நலத்தழகி
  மங்கல வீட்டழகி
வஞ்சப் பகையழகி
  வானுர்ந்த பாழழகி

செஞ்சொற் கவியழகி
  சீற்றம் பலத்தழகி
கொஞ்சம் சிலம்பழகி
  கூப்பி விடின் வெற்றியன்றே!

மாதுளக் கிளையழகி
  மாமாயப் பொன்னழகி
மூலக் கிளையழகி
  மூவாத மூப்பழகி

சூலக் கரத்தழகி
  சுடு காட்டுப் பேயழகி
காலக் கறுப்பழகி
  கால் தொழவும் வெற்றியன்றே!

ஊழி நெருப்பழகி
  ஓங்கு புயல் மூச்சழகி
தோளில் திசையழகி
  தொடுவானக் காட்டழகி

பாழில் பரத்தழகி
  பம்பரக் கூத்தாட்டழகி
காளியம்மை சீரடிகள்
  காட்சிதரின் வெற்றியன்றே!

இரா முருகன்

அத்தியாயம் 29

பொறி தட்டினாற்போல மஞ்சுளாவுக்கு ஏற்பட்டதொரு சந்தேகத்தின் விளைவே உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தன்னை பெருமூச்சுடன் ஈடுபட வைத்தது என்பதைச் சேகர், கோபாலிடம் விளக்கிக் கொண்டிருந்தபோது இவர்களின் உரையாடலில் இன்ஸ்பெக்டரோ துரைசாமியோ கலந்து கொள்ளவில்லை. காரணம் சேகரின் விளக்கங்கள் அத்தனையும் அவர்களுக்கு அதிசயமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தன. எத்தனை உண்மைகள், எத்தகைய சூழ்ச்சிகள்? அப்பப்பா!

சேகர் தொடர்ந்தான்: "இன்னொன்றையும் நீ கவனிக்க வேண்டும் கோபால். வேஷதாரியான வீராசாமியைப்—போலிக் கந்தசாமியைப் — பார்க்க யாரும் அனுமதிக்கப்படவில்லை. டாக்டர் சவரன்கூடப் போலிக் கந்தசாமியைப் பார்க்கவில்லை. புயல் வீசிய இரவுக்குப் பிறகு மறுபடியும் அவர் கந்தசாமியைப் பார்த்தது மஞ்சுளாவின் வேண்டுகோளுக்கிணங்க. அப்போது அது உண்மைக் கந்தசாமியின் உயிரற்ற உடலாக இருந்தது. அப்போதும் ஆள் மாறாட்டம் என்ற சந்தேகம் ஏற்படவில்லை. உண்மை உருவத்தில் ஏதோ ஒரு மாற்றம் என்றுதான் சொல்லப்பட்டது.

"ஆள் மாறாட்டத்தை முதலில் பார்த்தவள் நிர்மலாதான். எங்களை வேப்பமரத்துப் பங்களாவில் சந்திக்க வந்த அன்றிரவு, அவள் கந்தசாமியையும் சந்திப்பதென்ற உறுதியோடு வந்திருந்தாள் என்றேனில்லையா? அதன்படி அவள் பங்களாவின் மாடிக்குப் போய்க் கந்தசாமியின் அறைக்குள் புகுந்து அங்கிருந்தவர்களுக்கு அதிர்ச்சியை அளித்தபோதுதான் அந்த மாறாட்டத்தைக் கண்டாள் நிர்மலா. வீராசாமியின் வேஷத்திலிருந்து அவள் இதைப் புரிந்து கொள்ளவில்லை. மோகனுடன் அந்தப் போலிக் கந்தசாமி பழகிய விதத்திலிருந்தே உணர்ந்து கொண்டாள். எப்படி, ஏன் நிர்மலா கொல்லப்பட்டாள் என்பதை நான் முன்பே விளக்கி விட்டேன். உடனே தர்மலிங்கத்தின் மரணம் நேரிட்டது. திட்டமிட்டபடி காரியங்களைத் தாமதமின்றி நிறைவேற்ற முற்பட்டார்கள் சதிகாரர்கள். இங்கு வந்த பிறகு மஞ்சுளா உயிரோடிருக்கும் தன் அப்பாவாக வீராசாமியைத்தான் பார்த்திருக்கிறாள். உண்மையான தந்தையின் உயிரற்ற உடலைப் பார்க்கும்போது அவளிடம் ஏதாவது விபரீதச் சந்தேகங்கள் தோன்றக் கூடுமோ என்ற பயம் அவர்களுக்கு இல்லாமல் இல்லை. ஆகவேதான் ஒருவர் தர்மலிங்கம் இறந்த உடனேயே கந்தசாமியின் உடலை அவருடைய அறைக்குக் கொண்டு வந்துவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்த நிலையில்தான் நாம் அநேகமாக வீராசாமி



யைத் திராட்சைக் கொடி வீட்டில் கையும் களவுமாகப் பிடிக்கும் நிலையில் இருந்தோம். இதைக் கோவிலா பங்களாவின் மாடியில் உள்ள, தன் அறையிலிருந்து, கண்காணித்துக் கொண்டிருந்திருக்கிறான். நாம் திராட்சைக் கொடி வீட்டினுள் நுழையும் முயற்சியில் ஈடுபடுவதைக் கண்டதும் உள்ளிருக்கும் வீராசாமியை எச்சரிக்கத் தன் அறையிலிருந்து திராட்சைக் கொடி வீட்டுக்கு டெலிபோன் செய்திருக்கிறான். அதன் பிறகு வீராசாமி அங்கிருந்து மின்னல் வேகத்தில் வெளிப்பட்டு மாயமாக மறைந்ததை நாம் அறிவோம். ஆனால் அப்போது அது வீராசாமி என்று நமக்குத் தெரியாது. கொலை சதிச் செய்யும் யாரோ ஒரு மர்ம மனிதன் என்றே எண்ணினோம்.

"கட்டுக்காவலின்றித் தன்னிச்சையாகத் திரியும் கொலைகாரனின் ஒளிவிடத்தைத் தேடிப் பங்களா முழுதும் சல்லடை போட்டுச் சலித்தோம். கிடைக்கவில்லை. அவனுடைய ஒளிவிடத்தை நாம் பார்த்தோம். ஆனால் அப்போது அதை இனம் கண்டு கொள்ள முடியவில்லை. நோயாளி கந்தசாமியின் படுக்கை அறையாக அது காட்சியளித்தது.



''தங்கள் சூழ்ச்சி பூரணமாக, சதிகாரர்கள் நம்மைப் பண்ணையிலிருந்து வெளியேற்றினார்கள். எட்டாத தொலைவுக்கு நாம் போய் விட்டால் கந்தசாமியின் உயிரற்ற உடலைப் பத்திரமாகக் கொண்டு வந்து இடமாற்றம் செய்ய வசதியாக இருக்குமல்லவா ? திராட்சைக் கொடி வீட்டிலிருந்து கந்தசாமியின் உடலை வீராசாமி அப்புறப்படுத்திய போது போலீஸின் பிடியிலிருந்து தப்பத் தலைமறைவாகிவிட்ட காளியப்பன் வேப்ப மரத்துப் பங்களாவில் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்ற ரகசியம் அவனுக்குத் தெரியாது. சந்தேகாஸ்பதமான ஆள் நடமாட்டத்தை திராட்சைக் கொடி வீட்டில் காளியப்பன் பார்த்திருக்கிறான். அது என்ன என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் தன் இருப்பிடத்தை விட்டு வெளி வந்த போது கந்தசாமியின் உடலோடு அங்கிருந்து வெளிப்பட்ட வீராசாமியைச் சந்தித்து அவனைத் திகைப்படையச்செய்திருக்கிறான் காளி. அதன் பலன் காளி தன் உயிரை இழக்க நேர்ந்தது மட்டும் அல்ல. தான் செய்த கொலைகளையெல்லாம் வீராசாமி காளியின் மீது சுமத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பாகவும் அமைந்தது.

''தன் சகோதரன் கந்தசாமியாக வாழ்ந்த அந்தப் போலி நடிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு வெளியேறி விடுவது என்று திட்டமிட்டான் வீராசாமி.

''நேற்றிரவு முல்லைவாசலிலிருந்து டாக்டர் ரகுநாத் வெளியேறிய போது தன்னுடன் வீராசாமியையும் அழைத்து வந்து தன் வீட்டில் வைத்திருந்திருக்கிறார். அங்கு அவன் மோகனாவின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான். இரவு வெகு நாழிகைக்குப் பிறகும், டாக்டரின் வீட்டு மாடியில் விளக்குகள் எரிவதை நீ பார்த்துக் கொண்டிருந்தாயே கோபால், அப்போது நீ டாக்டர் ரகுநாத் தான் தூங்காமல் ஏதோ செய்து கொண்டிருப்பதாக எண்ணினாய் இல்லையா? ஆனால் அங்கு விளக்கை எரிய விட்டபடி இருந்தது டாக்டர் அல்ல; வீராசாமிதான். மோகனாவின் வெளியூர்ப் பயணம் என்பது வீராசாமி வெளியேறுவதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சந்தேகப்படாதவகையில் வீராசாமி வெளியேறுவதற்கான ஒரே வழி மோகனாவுடன் கிளம்புவதுதான். இப்போது உன் குழப்பங்களெல்லாம் தெளிவு பெற்றிருக்கும் என்று நம்புகிறேன். சரி தானே ?'' என்று நண்பனைப் பார்த்துக் கேட்டான் சேகர்.

''எல்லாம் புரிந்து விட்டது. அது சரி, சேகர். கோகிலாவுக்குச் சொத்து வாங்கித் தருவதற்காக வீராசாமி இத்தனை திட்டங்களையும் கொடூரமான செயல்களையும் செய்வானேன் ? இவனுக்கு இதில் அப்படி என்ன?.....'' என்று முடிக்காமல் நிறுத்தினான் கோபால்.

''கோகிலாவுக்குக் கிடைக்கும் பெரும் செல்வத்தில் ஒரு கணிசமான தொகை வீராசாமிக்குப் பங்காகத் தருவதாக ஒப்பந்தம். அந்தப் பணத்துக்காக மட்டும் வீராசாமி இத்தனை காரியங்களையும் செய்யவில்லை. சிறு வயதிலே அவனுக்கு அவன் தகப்பனாரால் கொடுக்கப்பட்ட அந்தத் தண்டனை இருக்கிறதே, அது செய்த விபரீதம்தான் இத்தனையும். தான் செய்யும் ஒரு காரியத்தின் விளைவைப் புரிந்து கொள்ள முடியாத வயதில் செய்த ஒரு சிறு குற்றத்துக்காகத் தன்னை மன்னிக்காமல் — நிராகரித்து, நிராதரவாக விரட்டிய தந்தை தர்மலிங்கத்தின் மீது அவனுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு அவன் வளர்ந்து பெரியவனாகும்போது அதுவும் பூதாகாரமாக வளர்ந்து கொண்டே வந்தது. தன் சகோதரன் சுகபோகங்களில் வாழும் போது தான் பஞ்சையாக, பனாதையாக, வறுமையின் வளர்ப்புப் பிள்ளையாக வாழ்வதை எண்ணி எண்ணி உள்ளம் குமையலானான். அது மட்டுமல்லாமல் தர்மலிங்கத்தின் உயில் பற்றிய செய்தி அவனுக்கு முன்னதாகத் தெரிந்து விட்டது. தர்மலிங்கம் அந்த உயிலில் தனக்கு ஒரே ஒரு ரூபாய் மட்டும் வழங்கி இருப்பது தன்னை அவமானப்படுத்துவதாக எண்ணினான். அவனால் அதைத் தாங்க முடியவில்லை. அந்த ஆத்திரம், வெறுப்பு, கோபம், பழி வாங்கும் துடிப்பு எல்லாமாகச் சேர்ந்து கோகிலாவோடு தொடர்பு கொண்டு, அவளுக்கு உள்ள உரிமையை மிகைப்படக் கூறி, அவளது ஆசையை வளர்த்தான். அவள் உதவியுடன் சொத்தைத் துண்டாடி அதில் தனக்கும் கணிசமானதோர் தொகை வரப் பண்ணிக் கொள்ளத் திட்டமிட்டான். ஆனால் பாவம் முடியவோ ? சொத்துக்களுக்கே ஆசைப்படாத மஞ்சுளாவுக்கே எல்லாம் கிடைக்கும்படி ஆயிற்று'' என்றான் சேகர்.

''இவர்கள் திட்டம் நிறைவேறி இருக்குமானால் வீராசாமி ஒப்பந்தப் பணத்தோடு மட்டும் திருப்தி அடைந்திருக்க மாட்டான். அடிக்கடி கோகிலாவை மிரட்டி, மேலும் மேலும் பணம் வாங்கிக் கொண்டே இருப்பான். எதற்கும் துணிந்தவனாயிற்றே அவன்'' என்றான் கோபால்.

'' அப்படியும் செய்யக் கூடியவன்தான் அவன். மனிதன் திட்டமிட்டான். — ஆண்டவன் முடித்துவிட்டான் முறைப்படி. கிளம்புங்கள். நாம் முல்லைவாசலுக்குப் போகலாம். போலீஸ் ஸ்டேஷனிலேயே கதையை முடிக்க எனக்கு விருப்பமில்லை'' என்று கூறி எழுந்தான் சேகர்.

* * *

மேலே நடந்தவைகளைப் பற்றியெல்லாம் கூறிக் கதையை வளர்த்துவானேன் ? நடக்க வேண்டிய முறைப்படி எல்லாம் நடந்தன. சட்டம் முறைப்படி செய்ய வேண்டியதைச் செய்தது. ஆனால் எதையும் புரிந்து கொள்ளும் நிலையில் கோகிலா இல்லை. அவளுக்குச் சித்தம் பேதலித்து விட்டது. தான் செய்த சதிகள் அம்பலமானதும் தன் அருமைத் தங்கை லலிதாவே தன்னை வெறுத்து ஒதுக்குவதும் எத்தனையோ கம்பீரமாக, கௌரவமாக,— மதிப்பாக வாழ்ந்த தான்; இந்த உண்மைகள் எல்லாம் தெரிந்தபின் பிறர் முன் எப்படித் தலை நிமிர்ந்து நடப்பது என்ற அவமானமும்— எல்லாமாகச் சேரவே அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தியை இழந்தவளானாள் கோகிலா. மனம் பேதலிக்கப் பைத்தியமானாள். நேற்று

100% இயற்கை

பதினெட்டு
அபூர்வ மூலிகைகளைக் கொண்டு
தயாரிக்கப் படுவது
விக்கோ


வஜ்ரதந்தி

பிரபல ஆயுர்வேத பற்பசை மற்றும் பல் பொடியான விக்கோ வஜ்ரதந்தி 18 அரிய மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படு கிறது. இம் மூலிகைகளின் தனிப்பட்ட குணங்கள் யாவரும் நன்கு அறிந்ததே. ஆனல் குறிப்பிட்ட அளவுகளில் இவற்றைக் கலக்கும் போது அவற்றின் குணத் திறன் அதிகமாகிறது. விக்கோ வஜ்ரதந்தியின் தற்போதைய செய்முறை பல் லாண்டு ஆராய்ச்சியின் விளைவாகும்.

தவறாது விக்கோ வஜ்ரதந்தி உபயோகித் தால், பற்சிதைவு, பயோரியா, ஈறுகளி லிருந்து சீழ் மற்றும் இரத்தம் வருதல், மூச்சிலே துர் நாற்றம் முதலியவை தடுக்கப் படுகிறது.

ஒரு முறை உபயோ கித்துப் பாருங்கள்: உண்மை புரியும்.

ஆயுர்வேத
பற்பசை மற்றும்
பற்பொடி.
வாய் ஆரோக்கியத்துக்கு
ஒப்பற்றது.



விக்கோ லாபெரட்டரீஸ்
தாதர், பம்பாய்-14

TML

வரை முல்லைவாசல் பண்ணையின் பட்டமகிஷியாக விளங்கியவள் இன்று பண்ணை பங்களாவின் மாடியறை ஒன்றில் அடைக்கப்பட்டிருந்தாள். தனக்குத் தானே பேசிக் கொள்ளுவதும் சிரிப்பதும் அழுவதுமாகப் பார்க்கப் பரிதாபமான காட்சி அது. கம்பீரமான சகோதரியின் அதிகாரத்திலே அன்பிலே தலை நிமிர்ந்து வாழ்ந்த லலிதா இப்போது தலை குனிந்து நின்றாள். அழுது அழுது அவள் முகம் வீங்கிப் போயிருந்தது. மஞ்சுளாவைக் கண்டதும் அதிசயமாக அவளைக் கட்டிக் கொண்டு விம்மினாள். ''இப்படியொரு அக்காவின் தங்கையாக இருந்ததற்கு நான் வெட்கப்படுகிறேன் மஞ்சுளா'' என்று தேம்பிய லலிதாவின் கண்ணீரைத் துடைத்தாள் மஞ்சுளா.

பண்ணையாட்கள் எல்லாரும் கூடி இருந்தார்கள். எல்லாரது முகத்திலும் வேதனையினூடே ஒரு நிம்மதியும் கலந்திருந்தது. மஞ்சுளா அவர்களிடம் விடைபெற்றுக் கொள்ளவே எல்லாரையும் வரவழைத்திருந்தாள். எப்போதும் போலவே அவர்கள் பண்ணையில் தங்கள் காரியங்களைச் செய்து கொண்டு, பண்ணையைக் காத்து வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள் மஞ்சுளா. ''ஒரு மாதத்துக்கு முன்பு இந்தப் பக்கத்தில் புயல் வீசி மக்களுக்கு வேதனையையும் சேதத்தையும் கொடுத்தது. ஆனால் என் குடும்பத்திலோ அந்தப் புயல் சுழிக்காற்றாகப் புகுந்து பல உயிர்களைச் சூறையாடி அலங்கோலப்படுத்தி விட்டது. அந்தச் சுழிக் காற்று பலரது உள்ளங்களைக் காயப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் சூனியமாகவும் ஆக்கிவிட்டுப் போய் இருக்கிறது. அது விளைவித்த சேதத்திலிருந்து, அடியிலிருந்து விடுபடப் பலகாலமாகும். நான் சீக்கிரமே திரும்பி விடுவேன். கொஞ்ச நாள் எங்காவது போயிருந்தால்தான் எனக்கு மன நிம்மதி ஏற்படும். இங்கேயே இருந்தால் இங்கு நடந்த சம்பவங்களின் நினைவு என்னைக் குலைத்துவிடும். நான் வரும் வரை இவர் இந்தப் பண்ணையையும் உங்களையும் கவனித்துக் கொள்வார்'' என்று கோபாலைக் காட்டினாள் அவர்களுக்கு.

''நானா?'' என்று துள்ளினான் கோபால். ''இந்தப் பண்ணையின் முழு நிர்வாகமும் இனி உங்கள் கையில்தான்'' என்றாள் மஞ்சுளா. ''எனக்காக நீங்கள் இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். மறுக்கக் கூடாது...'' என்றும் கேட்டுக் கொண்டாள்.

''கோபால், உன் உடல் பயிற்சிக் கழகத்துக்கு நான் மூடு விழா பண்ணிவிட்டு வருகிறேன். கவலைப்படாதே!'' என்று கண் சிமிட்டியபடியே, ''மஞ்சுளா...அவனிடம் அந்த இன்னொரு விஷயத்தையும் சொல்லி விடேன். ஸஸ்பென்ஸ் எதற்கு?'' என்றான் சேகர்.

''ஆமாம், கோபால். பண்ணை நிர்வாகத்தில் உங்களுக்கு லலிதா துணையாக இருப்பாள். வாழ்க்கையிலும்தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!'' என்றாள்.

லலிதா வெட்கத்துடன் சிவந்த முகத்தைத் தன் உள்ளங்கைகளில் புதைத்துக் கொண்டாள்.

வியப்பால் விரிந்த விழிகளால் கோபால் அவளையே விழுங்கி விடுபவன் போல்பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு, ''அது சரி, குடும்பத்தில் பெரிய காரியங்கள் நடந்திருக்கின்றன. ஆகவே பண்ணையின் நிர்வாகி என்ற முறையில் இப்போதே எச்சரிக்கிறேன். உங்கள் ஹனிமூனை இப்போது வைத்துக் கொண்டாலும் கலியாணத்தை இந்த வருஷம் நடத்த முடியாது. அடுத்த வருஷம் இங்கு இரட்டைக் கலியாணங்கள் ஜாம் ஜாம் என்று நடக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் தாத்தாவின் ஆத்மா சாந்தி அடையும். ஜோடிகள் யார் என்று சொல்ல வேண்டுமா என்ன?'' என்றான் கோபால். இத்தனை நாட்களாக வாடி இருந்த மஞ்சுளாவின் வதனத்தில் முதன் முறையாக முறுவல் மலர்ந்தது.

சாமுண்டிக் கோட்டை ரயில்வே ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றது. சேகரும் மஞ்சுளாவும் ஏறிக்கொண்டார்கள். ''மஞ்சு, என் நண்பனைத் தவிக்க விட்டு நீபாட்டுக்கு ஏதாவது ஸ்டேஷனில் இறங்கி விடாதே'' என்று கிண்டல் செய்தபடி விடைகொடுத்தான் கோபால். வண்டிக்குள்ளிருந்தபடியே கையசைத்து—முகம் மலர அவர்களும் விடைபெற்றார்கள். ''சீக்கிரம் திரும்பி விடப்பா, சேகர். அங்கு போனதும் ஏதாவது புதிய கொலை வழக்கு, அது இது என்று கிளம்பி விடாதே. இனி அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். இந்த உன் துப்பறியும் தொழிலுக்கே ஒரு தலைமுழுக்கு—'' என்று கோபால் கூறிக் கொண்டிருக்கும் போதே இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் வேகமாக ஸ்டேஷனுக்குள் ஓடி வந்தார். ''அப்படியெல்லாம் செய்து விடாதீர்கள் சேகர். பிறகு என்னைப் போன்றவர்கள் பாடு திண்டாட்டமாகி விடும். உண்மைக் குற்றவாளிகளை விட்டு விட்டு நிரபராதிகளைப் பிடித்துத் தண்டிக்க வேண்டியதாகிவிடும்....!'' என்று கூறிக் கொண்டே சேகரின் கைகளைப் பற்றிக் குலுக்கி விடைகொடுத்தார். ரயில் நகர்ந்தது.

மரகதக் கம்பளத்திலே மரவட்டை நெளிந்து செல்வது போலப் பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகளையும் வாய்க்கால்களையும் மாந்தோப்புகளையும் வாழைத் தோட்டங்களையும் கிழித்துக் கொண்டு அந்த ரயில் விரைந்து கொண்டிருந்தது. ஆம், இப்போது அது விரைந்துதான் போய்க் கொண்டிருந்தது; ஊர்ந்து செல்லவில்லை!



லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்

(பதிவு அலுவலகம்: **693, ஜவஹர் பஜார், கரூர்**)

எத்தனை பெரிய சேமிப்பு என்பதை அறியமாட்டீர்:

6-9-1971 முதல் மாற்றப்பட்ட எங்களது வளரும் சேமிப்புத் திட்டத்தில் சேருங்கள்

மாதா மாதம் செலுத்தும் தொகை	திரும்பப் பெறும் தொகை				
	12 மாதங்களில் (வட்டி 6½% p. a. உள்பட)	24 மாதங்களில் (வட்டி 7% p. a. உள்பட)	36 மாதங்களில் (வட்டி 7% p. a. உள்பட)	48 மாதங்களில் (வட்டி 7½% p. a. உள்பட)	60 மாதங்களில் (வட்டி 7½% p. a. உள்பட)
5	62-15	129-00	200-50	280-00	364-00
10	124-30	258-00	401-00	560-00	728-00
15	186-45	387-00	601-50	840-00	1092-00
25	310-75	645-00	1002-50	1400-00	1820-00
50	621-50	1290-00	2005-00	2800-00	3640-00
100	1243-00	2580-00	4010-00	5600-00	7280-00

தமிழ்நாட்டில் தங்கள் சேவைக்கென 55 கிளைகள்

இதைக் கத்தரித்து வைத்துக் கொள்ளவும்

C. R. K. செட்டி
சேர்மன்





மத்திய ஸ்வீடன் நாட்டிலிருந்து தனது கணவருடன் 1921ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து, புதுக் கோட்டை, பட்டுக் கோட்டை, பாண்டு ஆகிய ஊர்களில் ஸ்விடிஷ் மிஷனரியாகப் பணிபுரிந்தார்கள் எல்லென் சோடெஸ்ட்ரோம் அம்மையார் அவர்கள். 1924ல் அவர்களுக்கு இந்தியாவில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. பின் 1927ல் ஸ்வீடன் சென்றனர். அங்கு கணவரை இழந்தார். 1950 வரை குழந்தையின் கல்விக்காக ஸ்வீடனிலேயே தங்க நேர்ந்தது. தமது பெண், தந்தையின் பணியைச் செய்ய விரும்பியதால் மீண்டும் பெண்ணுடன் இந்தியா திரும்பினார். ஓர் ஆண்டு மொழிப் பயிற்சிக்குப் பின் அந்தப் பெண் தஞ்சை மாவட்டம் பொறையாற்றில் உள்ள மிஷன் மாணவிகள் இல்லப் பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டார்.

1952ம் ஆண்டில் மகளுக்குத் திருமணம் நடைபெற்றது. மருமகன் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தவர். முதல் தாரத்தை இழந்தவர். கோவை மாவட்டம் திருப்பூருக்கு அருகில் உள்ள அருள்புரத்தில் மிஷனரியாகப் பணியாற்றினார். எனவே அம்மையார் அவர்களும் மகளுடனேயே அருள்புரத்துக்கு வந்து சேர்ந்தார். 1954ல் மகளும், மருமகனும் ஸ்வீடனுக்குச் சென்று விட்டார்கள். அப்போது அருள்புரத்தில் மிஷனரியை நிறுத்திவிட அதிகாரிகள் முடிவு செய்தனர். அச்சமயம் அவ்வட்டாரத்தில் ஏழு ஆண்டுகளாக மழை இல்லாமல் தவித்தனர் மக்கள். அம்மக்களின் துயர் போக்க எண்ணி அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுத் தாமே பொறுப்பேற்று அம்மிஷனரியை நிர்வாகம் செய்தார். அப்பணி அருள்புரத்தில் எட்டு ஆண்டுகள் நடைபெற்றது. அங்கு சர்வோதய சங்கத்துடன் தொடர்பு கொண்டு, காந்தி போர்டின் சேவை உதவித் தொகை பெற்று அதை நடத்தினார். 1960ம் ஆண்டு ஸ்வீடனில் இருந்து வந்த மானேஜர் பொறுப்பு ஏற்றபின் இவருக்கு அங்கு வேலை இல்லாமற் போய்விட்டது.

பின்னர் அருள்புரத்திலிருந்து பொள்ளாச்சிக்கு வந்து தங்கினார் அம்மையார். அருள்புரத்துக்கு வந்த மானேஜர் சேவைப் பணியைத் தொடர்ந்து நடத்த மறுத்ததால் வேலை இழந்த மக்கள் அனைவரும் அம்மையாரை அணுகினர். அவர்களது வறுமையை ஒழிக்கவும், துன்பம் துடைக்கவும் எண்ணினார் அம்மையார். ஸ்வீடனில் தமக்கும், மகளுக்கும் இருந்த பாரம்பரியச் சொத்துக்களை விற்று, அத்தொகையைக் கொண்டு 1966ம் ஆண்டு பொள்ளாச்சிக்கு அருகே உள்ள ஊஞ்சவேலாம்பட்டி என்ற ஊரில் ஓர் ஏக்கர் நிலம் வாங்கினார். சில வீடுகளைக் கட்டி அவற்றில் அந்தத் தொழிலாளர்களைக் குடியமர்த்தினார்.

'இலக் ! நகர்' என்ற அமைப்பை நிறுவி, அந்நகரில் 'சென்னை சகோதரர் சங்கம்' என்ற சங்கத்தையும் தோற்றுவித்தார். இங்கு பாய் நெய்யப்படுகிறது. போர்வை, ஜமக்காளம் முதலியவைகளும் நெய்யப்படுகின்றன. அங்கஹீனர்களும், அநாதையரும், ஏழைகளும் தொழில் புரிகின்றனர். இங்கு கோழிப் பண்ணை ஒன்றையும் நடத்துகிறார்கள். ஹரிஜனக் குழந்தைகளுக்காக நர்சரிப் பள்ளி ஒன்றையும் நடத்தி வருகிறார். ஒழுக்கமே குறிக்கோளாகக் கொண்டு நடத்தப்படுகிறது இப்பள்ளி. இங்கு தயாராகும் பொருள்களை விற்பனை செய்யும் கடை ஒன்றும் இங்கு உள்ளது. இந்நகரில் உள்ள மாதாகோயிலில் செவ்வாய்க் கிழமைதோறும் பிரார்த்தனை நடத்தப்படுகிறது.

உடல் நலக் குறைவுடன் அம்மையார் ஸ்வீடனில் மருத்துவ மனையில் இருந்த போது (கால் நடக்க முடியாததற்காக) சக்கர நாற்காலி கொடுத்திருந்தார்கள். உடல் நலம் பெற்று மீண்டும் இந்தியாவுக்கே சென்று பணியாற்ற விரும்பிப் புறப்பட்டபோது ஸ்வீடன் நாட்டு மருத்துவத் துறையினர் அந்தச் சக்கர நாற்காலியை அம்மையாருக்கே அளித்து விட்டனர்.

எண்பத்திரண்டு வயதிலும் தளராது சமூகப் பணி புரியும் அம்மையாரிடம், ''இப் பணிக்கெல்லாம் நிறையப் பொருள் தேவையாயிற்றே! எப்படி?'' என்ற கேள்வியைக் கேட்டதற்கு, அவர் ''எல்லாம் இறைவன் அளிக்கிறான். முயற்சி முறுவல் செய்கிறது. பிரார்த்தனையால் பலம் பெறுகிறேன்'' என்று கூறுகிறார்.

— புலவர் கோ. முருகையா

தமக்கையின் பெட்டியைக் குடைந்து கொண்டிருந்த செல்வம், "இதைப் பார்த்தியாம்மா?" என்று கேட்டவாறு கையில் ஒரு பாஸ் புத்தகத்துடன் வந்தாள். அவள் கேள்விக்குப் பதில் கூறாமல், "சுகன்யாவின் பெட்டியை நீ ஏன் திறந்தே?" என்றாள் தாயார்.

"நான் திறக்கலேம்மா; அக்கா மறந்து போய்ப் பூட்டாமல் போய்விட்டாள். பெட்டியில் எல்லாம் களேபரமாயிருந்தது. ஒழுங்காக அடுக்கி வைக்கப் போனேன். இது கிடைத்தது!" என்று கையிலிருந்த புத்தகத்தைக் காட்டினாள்.

"என்ன இது?"

"பாஸ் புக்! உன் பெண்ணின் பாங்கிக் கணக்குப் புத்தகம்!"

"பாங்கியிலே பணம் போட ஆரம்பிச்சிருக்காளா?..."

"புதுசா ஆரம்பிக்கலேம்மா. ஒரு வருஷத்துக்கு மேலாக அக்கா கணக்கிலே ஐயாயிரம் ரூபாய் இருக்கு!" என்றாள் செல்வம்.

"நிஜம்மாவா?" என்றாள் ஆச்சரியத்துடன் அவள் அம்மா.

"பொய்யா சொல்றேன்? பாஸ் புக்கைப் பாரேன்..." என்று கூறியவாறு புத்தகத்தைப் பிரித்து ஐயாயிரம் ரூபாய் பாங்கியில் கட்டியுள்ளதைக் காண்பித்தாள். பணம் மொத்தமாக ஒரே தவணையில் கட்டப்பட்டுள்ளது. பதினெட்டு மாதங்களுக்கு முன்பு அந்தப் பாங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அம்மாவும் பெண்ணும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தனர்.

"என்னம்மா யோசிக்கிறே?" என்று கேட்டாள் செல்வம்.

"இல்லே... இவ்வளவு பணம் அவளுக்கு ஏதுன்னு..."

"அதிருக்கட்டும் அம்மா. இவ்வளவு பணம் இருந்தும் தன்னால் ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுக்க முடியாது. அதுவும் ஆபீஸில் கடன் வாங்கித் தரணும்னு சாதிக்கிறாளே?" என்றாள் செல்வம். அவள் அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த நிமிஷம் வரை தன் மூத்த பெண் சுகன்யாவைப் பற்றி மிக உயர்வாக எண்ணிக் கொண்டிருந்தாள். அதாவது தனக்கென வாழாது இந்தக் குடும்பத்துக்காகவே உழைத்து ஓடாகிறாள், தங்கையின் நல்வாழ்வுக்காகத் தன் சுகத்தையெல்லாம் தியாகம் செய்கிறாள் என்று நினைத்திருந்தாள். இப்பொழுது சுகன்யா தனக்காகவும் வாழ்கிறாள் என்று புரிந்துகொண்டாள். பெண் சமர்த்தாயிருப்பதில் பெற்றவளுக்கு மகிழ்ச்சிதான். இருந்தாலும் தன்னுடைய கெட்டிக்காரத்தனத்தைப் பெற்றவளிடமே மறைப்பானேன்?...

சுகன்யா மூன்று வருடங்களாக வேலைக்குப் போகிறாள். கிட்டத்தட்ட மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறாள். அந்தப் பணம் குடும்பச் செலவுக்குச் சரியாக இருக்கிறது. குடும்பம் என்பது தாயும் இரண்டு பெண்களும்தான். மூத்தவள் சுகன்யா, இளையவள் செல்வம். சுகன்யா இப்போதைக்குத் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை என்று பிடிவாதமாகக் கூறி விட்டாள். அதனால் செல்வம் தானாவது காலாகாலத்தில் ஒருவனை மணந்து கொண்டு புருஷன் வீடு போய்ச் சேரலாம் என்று நினைத்து ஒருவனைத் தேர்ந்தெடுக்கவும் செய்தாள். சந்துரு என்ற பையனைச் செல்வத்துக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்துருவும் அவளை விரும்புவதாகத்தான் சொன்னான். ஆனால் அவனுடைய பெற்றோர்கள் பத்தாயிரம் ரூபாய்க்குச் சீர் செய்ய வேண்டுமென்று ஒரே பிடிவாதமாயிருந்தார்கள். இரண்டு பெண்களின் திருமணத்துக்காகவும் அவர்களுடைய தந்தை விட்டுச் சென்றிருந்த பணம் ஐயாயிரம்தான் இருந்தது. சுகன்யா தனக்கு எதுவும் வேண்டாமென்றும், அந்தப் பணம் முழுவதையும் செல்வத்துக்கே உபயோகிக்கும்படியும் அம்மாவிடம் கூறினாள். ஆனால் சந்துருவின் பெற்றோர்கள் பத்தாயிரத்திலிருந்து ஒரு ரூபாயைக் கூடக் குறைக்கத் தயாராயில்லை. அந்தச் சம்பந்தம் முறிந்து விடுமோ என்று மனம் நொந்து போனாள் செல்வம். தங்கையின் ஆசையைப் பூர்த்தி செய்ய எண்ணி ஆபீஸில் தெரிந்தவர்களிடமெல்லாம் கடன் கேட்டுப் பார்த்தாள் சுகன்யா. ஒரே ஒருவர் மட்டும் ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னார். அந்தப் பணம் கைக்கு வந்தாலும் ஆறாயிரம் ரூபாய் தான் ஆகும். இன்னும் நாலாயிரம் ரூபாய்க்கு எங்கே போவது? சதா சர்வ காலமும் வாடிய முகத்துடன் தோற்றமளித்தாள் செல்வம்.



அச்சுதன் என்

அவள் தாயார் சில சமயம் ஆறுதல் சொல்லுவாள். சில சமயம் கடிந்து கொள்வாள். இப்படியே நாட்கள் போய்க் கொண்டிருக்கையில்தான் செல்லம் சுகன்யாவின் பாங்கிக் கணக்குப் புத்தகத்தைக் கொண்டு வந்தது.

அவள் அக்காவிடமே ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது!

அப்பா பெண்களுக்காக வைத்து விட்டுச் சென்ற பணம் அம்மாவிடம்தான் இருக்கிறது. சுகன்யா இவ்வளவு பணம் தன் கணக்கில் வைத்துக் கொண்டே ஆபீஸில் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கித் தருவதாகக் கூறுகிறாள்! இவ்வளவு பணம் எப்படிச் சேர்த்தாள்?

அதைப் பற்றிச் செல்லமோ அவளுடைய தாயாரோ கவலைப்படவில்லை. பணம் வைத்திருக்கிறாள் என்பதை மட்டும் அறிந்து கொண்டார்கள். சாயங்காலம்வரை அம்மாவும் பெண்ணும் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

அன்று இரவு ''உன் கணக்கில் ஐயாயிரம் ரூபாய் இருக்கு போலிருக்கே?...'' என்றாள் அவள் தாயார் சுகன்யாவைப் பார்த்து. 'உங்களுக்கு எப்படித் தெரிந்தது?' என்று கேட்பதைப் போல ஒரு நிமிஷம் அம்மாவையும் செல்லத்தையும் மாறி மாறிப் பார்த்தாள் சுகன்யா.

''செல்லத்தின் கல்யாணத்துக்காகக் கடன் வாங்கி வச்சிருக்கியா?'' — அம்மா கேட்ட விதம், 'ஆமாம்' என்று சொல்லி விடேன் என்பதைப் போலிருந்தது.

''யாரம்மா அவ்வளவு பெரிய தொகை கடன் கொடுப்பார்கள்?'' என்றாள் சுகன்யா.

''நீயே சேர்த்ததா?''

''என் சம்பளம் முழுவதையும் உன்னிடம்தான் கொடுத்து விடுகிறேனேம்மா?''

''பின்னே?''

''இது நம்ம பணம் இல்லே.''

''ஒன்னரை வருஷத்துக்கு மேலாக உன் கணக்கிலேயே இருக்காப் போலிருக்கே?''

''ஆமாம்!''

''யார் பணம்னு நான் தெரிஞ்சுக்கலாம்னு...''

''அவசியம் தெரிஞ்சுக்கணுமா?''

''சொல்லலாம்னு சொல்லு'' என்றாள் அவள் தாயார் சிறிது நிஷ்டூரமாக. சுகன்யா சில விநாடிகள் யோசித்தாள். பிறகு ''அந்தப் பணம் அண்ணாவினுடையது!'' என்றாள்.

''அண்ணாவா?'' என்று விழித்தாள் அம்மா.

''ஏன்? எனக்கு ஓர் அண்ணன் இருக்கிறான் என்பதே உனக்கு மறந்து போச்சா? நீ அவனைப் பிள்ளையாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவன் எனக்கு அண்ணன்தானே?'' என்றாள் சுகன்யா. பெற்றவளின் முகம் இருண்டது. பெண்ணின் இந்தத் திடீர்க் கேள்வி அவளைச் சில நிமிஷங்கள் செயலற்றவளாக்கி விட்டது. தன் கணவரின் முதல் தாரத்தின் பிள்ளை அச்சுதனைத்தான் சுகன்யா அண்ணா என்று குறிப்பிட்டாளெனப் புரிந்து கொண்டாள்.

சுகன்யாவின் தந்தை வேணுகோபாலுக்கு இரண்டாம் தாரமாகி அவ்வீட்டுக்கு வருகையில் புவனா வெறும் மனைவியாக மட்டுமல்ல, மூத்த தாரத்தின் இரண்டு



வயதுக் குழந்தை அச்சுதனுக்குத் தாயாகவும் தான் வந்தாள். இன்னொருத்தி பெற்ற குழந்தையானாலும் தன் குழந்தையைப்போல் வளர்க்கலாம் என்றுதான் நினைத்தாள். ஆனால் மூன்று நான்கு மாதங்களுக்குள்ளேயே அலுத்துக்கொள்ள ஆரம்பித்து விட்டாள். அந்தக் குழந்தையிடம் பாசம் செலுத்த முடிய வில்லை. குழந்தை அழுதாலும் சிரித்தாலும் அவளுக்கு எரிச்சலாக வரும். அதட்டுவாள், அடிப்பாள். அது கதறக் கதற அழுதாலும் திரும்பிப் பார்க்காமல் இருப்பாள். தன்னு டைய இந்த வெறுக்கும் சுபாவம் நியாயமான தல்ல, அந்தக் குழந்தையை ஆளாக்குவதற் காகத்தான் இந்த வீட்டுக்கு வந்திருக்கிறோம் என்று தனக்குத் தானே புத்தி சொல்லிக் கொள்வாள். என்றாலும் அவளுடைய இதயத் தில் அன்பு சுரக்கவே யில்லை. இதற்கிடையில் அவள் கர்ப்பவதியானாள். வளைகாப்பு பூச்சூட்டல் என்று அவள் தன்னுடைய பிறந் தகம் போக வேண்டி வந்தது. அப்போது அச்சுதனின் அம்மாவைப் பெற்ற பாட்டி வந்து தன்னுடன் குழந்தையை எடுத்துச் சென்றாள். அதுமுதல் அச்சுதன் பாட்டி வீட்டில்தான் வளர்ந்து வந்தான். புவனாவுக்கு இரண்டு பெண்கள் பிறந்தனர். மூத்த வள் கன்யா, இளையவள் செல்லம். ஏழு வயதில் ஒரு முறை, பன்னிரண்டு வயதில் ஒரு முறை தந்தையின் வீட் டுக்கு வந்து இரண்டு மூன்று மாதங்கள் தங்கினான் அச்சுதன். அந்தக் குறுகிய காலத்துக்குள் புவனா அவனைப் படுத்தியபாடு! அப்பப்பா! வேணுகோபால வின் நெஞ்சில் இரத்தம் வடி யும். ஆனால் வாயைத் திறந்து மனைவியை எதுவும் சொல்ல மாட்டார். எப்படிச் சொல்ல முடியும்? அவள் இளையாளா யிற்றே?



''கண்டல் புதுமையாக, ருசி யாக இருக்கிறதே, எப்படி?''
''ஒன்றுமில்லே. எதிர் வீடு, பக்கத்து வீடு, மற்ற வீடுகளி லிருந்து வாங்கி வந்த கண்ட லே யெல்லாம் கலந்து விட் டேன். அவ்வளவுதான்!''
- கேவியெம்

பன்னிரண்டாவது வயதுக்குப் பிறகு அச்சுதனுக்கு அப்பா வீட்டு ஆசையே விட்டுப் போயிற்று.

அச்சுதனுடைய பாட்டி வீடு இருநூறு மைல்களுக்கப்பால் எங்கோ ஒரு கிராமத்தில் இருந்தது. அங்கிருந்து கொண்டு அச்சுதன் படித்தானா, என்ன படித்தான் என்பதெது வும் வேணுகோபாலுக்குத் தெரியாது. பிள் ளையைப் போய்ப் பார்த்து வரவேண்டுமென்று எப்பொழுதாவது நினைத்துக் கொள்வார். ஆனால் புவனாவிடம் அதைப் பற்றிப் பிரஸ் தாபிக்கப் போதுமான தைரியம் வராது. யாருக்கும் சொல்லாமலே ஆபீஸ் விஷய மாக வெளியூர் போவதாக ஒரு முறை போய்ப் பார்த்து வர எண்ணினார். ஆனால் அது எண்ணத்திலேயே இருந்து விட்டது. அதைச் செயலாக்குவதற்குள் வேலையி லிருந்து ஓய்வு பெற்று விட்டார். மாதம் நூற்றைம்பது ரூபாய் பென்ஷன் வரும். அதை அப்படியே மனைவியிடம் கொடுத்து விடுவார். அவர் வேலையிலிருக்கும்போதே கன்யா ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொண்டான். அவளும் தன் சம்பளத்தை அம்மாவிடம் கொடுத்து விடுவாள்.

இப்பொழுது வேணுகோபால் சாலமாகி ஒரு வருஷத்துக்கு மேலாகிறது.

கன்யாவுக்கு ஒன்பதாவது வயது நடக் கையில் அச்சுதன் ஒரு தடவை வந்து இரண்டு மாதங்களுக்கு மேல் இருந்தான். அப்பொழுது அவன் பன்னிரண்டு வயதுச் சிறுவன். அதற்குப் பிறகு அவனை யாரும் பார்த்ததில்லை. அப்படியிருக்கையில் ஐயா யிரம் ரூபாய் பாங்கிப் பணம் அண்ணா வினுடையது என்கிறாளே?

''அச்சுதனைப் பார்த்தாயா?'' என்று கேட்டாள் புவனா.

''இல்லையே! அண்ணா இருக்கும் இடம் தெரியாமல்தானே பணத்தை வைத்துக் கொண்டு தவிக்கிறேன்!... அந்தக் கிரா மத்தில் இப்பொழுது யாரும் இல்லையாம். அண்ணாவின் தாத்தா, பாட்டி, எல்லாரும் போய்விட்டார்களாம்!''

''அந்தப் பணம்?''

''அப்பாதான் கொடுத்தார். எப்படி யாவது அண்ணாவைக் *கண்டு பிடித்து இந்தப் பணத்தைச் சேர்த்து விடும்படி....''

''நம்ம அப்பாவா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் செல்லம்.

''நம்ம அப்பாதான். அண் ணாவும் அவருடைய பிள்ளை தானே?...''

''உன் அப்பாவின் திருட்டுக் குணத்தைப் பார்த்தியா?'' என் றாள் செல்லத்தைப் பார்த்துப் புவனா.

''இதிலே என்னம்மா திருட் டுக் குணம்? நமக்கெல்லாம் கொடுத்தது போல் பிள்ளைக் கும் வைத்திருக்கிறார்'' என்று தந்தைக்காகப் பரிந்து பேசி னாள் கன்யா.

''அதை ரகசியமா உன்னிடம் கொடுத்து வைப்பானேன்? அம்மாவிடம் கொடுத்து வைத்திருந்தால் துரோகமா செய்து விடு வான்?'' என்று நிஷ்டூரமாகக் கேட்டாள் செல்லம்.

''உங்கப்பாவுக்கு என்னிக்குமே ஓரவஞ் சனை!'' என்று வருத்தத்துடன் கூறினாள் புவனா.

''ஏம்மா இறந்து போனவரைக் குறை சொல்லறே? அவர் வயிற்றிலே பிறந்த பிள்ளையை நீ இங்கே இருக்க விட்டியா? அநாதை போல் எங்கோ வளர்ந்தான். எங்கோ இருக்கிறான். எங்களைப் படிக்க வைத்தாய். எங்களுக்கு ஒரு உடம்பு என்றால் தவியாய்த் தவித்தாய். புதிய புதிய உடைகள் வாங்கிக் கொடுத்தாய். நகைகள் எல்லாம் செய்து போட்டாய். அதையெல் லாம் பார்த்துக் கொண்டிருந்த அப்பாவின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்று துளியாவது நீ கவலைப்பட்டதுண்டா?.... கடைசிக் காலத்தில் தாம் பெற்ற பிள்ளையை ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்று

அப்பா எவ்வளவு ஆசைப்பட்டார், தெரியுமா? பிறகுதான் இந்தப் பணத்தை என்னிடம் கொடுத்து எப்படியாவது அண்ணனிடம் சேர்த்து விடுமாறு சொன்னார்'' என்ற சுகன்யாவின் விழிகளில் நீர் திரையிட்டது.

புவனாவுக்கும் செல்லத்துக்கும் சுகன்யா ஒரு விரோதி போலத் தோற்றமளித்தாள்.

''இந்த வீட்டில் அப்பாவுக்கு மிகவும் நம்பிக்கையான ஜீவன் அக்காதான்!....'' என்றாள் செல்லம்.

''நான்தான் கொடுமைக்காரி. சராசரிப் பெண்ணுக்குடைய துர்க்குணம் என்னிடம் இருந்தது. மூத்தாள் பிள்ளையை வெறுத்தேன். 'என் பிள்ளை இங்குதாண்டி இருப்பான்! அவனிடம் நீ அன்பு செலுத்தத்தான் வேண்டும்!' என்று உன் அப்பா ஆண் பிள்ளையா, லட்சணமா ஏன் நடந்துகொண்டிருக்கக் கூடாது?'' என்று சிறிது ரோசத்துடன் கேட்டாள் புவனா.

''அதிகாரத்தின் மூலம் அன்பை வரவழைக்க முடியாதென்று அப்பா நினைத்திருக்கலாம்! அல்லது எங்கிருந்தாலும் குழந்தை நன்று யிருக்கட்டும் என்று எண்ணியிருக்கலாம்'' என்றாள் சுகன்யா மிகவும் அமைதியான குரலில்.

புவனாவுக்குப் படபடவென்று வார்த்தைகளைக் கொட்ட வேண்டும் போலிருந்தது. ஆனால் நாக்கு அசையவில்லை. வேகமாக எழுந்து போய்விட்டாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குச் சுகன்யாவிடம் சரிவர முகம் கொடுத்துப் பேசவில்லை. அம்மாவும் தங்கையும் ஒரு கட்சி போலவும் தான் ஒரு கட்சி போலவும் உணர்ந்தாள் சுகன்யா. அந்தக் குடும்பம் அவளால் ஓடிக் கொண்டிருந்தது. இல்லாவிட்டால், அவளை உண்டு இல்லை என்று பார்த்திருப்பார்கள்.

ஒரு வாரம் சென்றது.

அம்மா கொஞ்சம் சுமுகமாகப் பேசத் தொடங்கினாள்.

''ஏண்டி, அச்சுதனைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததோ?'' என்று மிகவும் அக்கறையுடன் கேட்டாள்.

''ஒண்ணும் தெரியல்லியேம்மா...''

''எனக்கு ஒன்று தோன்றது சுகன்யா.''

''என்னம்மா?''

''செல்லம் என்னவோ அந்தப் பையனைத்தான் பண்ணிக்குவேன்னு ஒத்தைக்காலில் நிக்கறா. அவாளோ பண விஷயத்தில் கொஞ்சமும் விட்டுக் கொடுக்க மாட்டேங்கறா... அப்பா, அச்சுதனுக்காகக் கொடுத்திருக்கும் பணத்தையும் போட்டு... எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நடத்தி வைத்து விட்டால்...''


''அது முடியாதம்மா! எந்த ஒரு காரணத்துக்காகவும் அந்தப் பணத்தைத் தொட மாட்டேன்! அப்பாவிடம் என்ன சத்தியம் செய்திருக்கேன், தெரியுமா? அண்ணனிடம் அந்தப் பணத்தைச் சேர்க்கும்வரையில் நான் கல்யாணமே செய்துகொள்ள மாட்டேன் என்று கூறியிருக்கிறேன்'' என்று நிதானமாகச் சொன்னாள் சுகன்யா. இவளை அசைக்க முடியாது என்று புரிந்துகொண்ட புவனா அன்று அத்துடன் விட்டுவிட்டாள்.


இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் ஆரம்பித்தாள். சுகன்யாவின் பிடிவாதம் துளியும் தளரவில்லை. அதன் பிறகு இரண்டு மாத காலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் இதே பிரச்னைதான். அன்பாகப் பேசினாலும் அதட்டிப் பேசினாலும் அழுதாலும் கெஞ்சினாலும் சுகன்யாவைச் சரிக்கட்ட முடியவில்லை. அம்மாவின் வாயிலிருந்தும் தங்கையின் வாயிலிருந்தும் வரும் வார்த்தைகள் சொல்லம்புகளாக வரும். சுகன்யா எதையும் பொருட்படுத்தவில்லை. 'எப்படியடா இப் பணத்தை உரியவனிடம் சேர்க்கப் போகிறோம்' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்போது அச்சுதனிடமிருந்தே ஒரு கடிதம் வந்தது! தந்தை உயிருடன் இருப்பதாக எண்ணிக் கொண்டு அவர் பெயருக்கு எழுதியிருந்தான்.



''படம் சுத்த மோசம். பணத்தைத் திருப்பிக் கொடு! எல்லோருடைய பணத்தையும்தான்...!''

''அப்பாவுக்கு, அச்சுதன் செய்யும் நமஸ்காரங்கள். நான் சிறு பையனாக இருக்கையில் உங்களை யெல்லாம் பார்த்தது. சித்தி சௌக்கியமா?.. என் தங்கைகள் சுகன்யாவும் செல்லமும் இப்பொழுது பெரியவர்களாக வளர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஒருவேளை அவர்கள் மணமாகிப் புருஷன் வீடு போயிருந்தாலும் போயிருப்பார்கள். என்னுடைய பதினைந்தாவது வயதில் என் தாத்தா காலமாகி விட்டார். அப்பொழுது உங்களுக்குக் கடிதம் போட்டிருந்தார்களாம். நீங்கள் வரவில்லை. பத்தொன்பதாவது வயதில் என் பாட்டியும் போய்விட்டாள். என் மாமா என்னை பம்பாய்க்கு அழைத்து வந்தார். பிறகு இங்கு பரோடாவில் எனக்கு வேலை கிடைத்தது. எட்டு வருஷங்களாக இங்கு வேலை பார்க்கிறேன். ஒரு முறை வந்து உங்களை யெல்லாம் பார்க்க வேண்டும் என்று நாலு வருஷங்களாக முயற்சி செய்து வருகிறேன். ஒவ்வொரு தடவையும் ஏதா


கோத்ரெஜ்
ஒரு சிறந்த முதலீடு
Godrej



''இதை வாங்கிக் கொள்ளுங்கள். மர்ம நாவலில் மிகவும் புதுமையானது இதுதான். கடைசி அத்தியாயமே இதில் சேர்க்கப்படவில்லை! எவ்வளவு பெரிய மர்மம் பாருங்கள்!''

வது ஒரு காரணத்தால் என் பிரயாணம் தடைப்பட்டு வருகிறது. இப்பொழுது ஒரு முக்கிய காரணமாக இக் கடிதம் எழுத நேர்ந்தது. இங்கு நர்மதா என்று ஒரு பெண் என்னுடன் வேலை பார்க்கிறாள். மிகவும் நல்ல பெண். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவளும் என்னை விரும்புகிறாள். என்றாலும் வேலையில் எனக்கு ஒரு பிரமோஷன் கிடைத்த பிறகு திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறிக் கொண்டிருந்தாள். இப்போது அதிருஷ்டவசமாக ஒரு பிரமோஷன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அந்தத் தேர்வு எனக்குக் கிடைக்க வேண்டுமானால் மூவாயிரம் ரூபாய் டிபாசிட் கட்ட வேண்டும். உங்கள் பிள்ளைக்கு நீங்கள் இந்தப் பணத்தைக் கடனாகக் கொடுத்து உதவினால் வேலையில் பிரமோஷன் கிடைப்பதோடு அநாதை போல் காலம் தள்ளிக் கொண்டிருக்கும் என் வாழ்விலும் ஒரு புது மாற்றம் ஏற்படும். மாதம் நூறு ரூபாயாக அனுப்பி உங்கள் பணத்தைக் கொடுத்து விடுகிறேன். இந்த உதவி செய்ய முடியுமா?'' என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் பார்த்ததும் கன்யாவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. புவனாவும் செல்லமும் ஏதோ பெரிய நஷ்டத்தை அடைந்து விட்டதைப் போல முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டனர். காலப் போக்கில் எப்படியும் கன்யாவைச் சரிக்கட்டி அந்தப் பணத்தை வாங்கிச் செல்லத்தின் திருமணத்தை முடித்து விடலாம் என்ற எண்ணத்தில் இடி விழுந்தாற்போலிருந்தது அந்தக் கடிதம்.

''என்ன செய்யப் போறே?'' என்று கேட்டாள் அம்மா.

''இன்னிக்கே அந்தப் பணத்தை வாங்கி அண்ணாவுக்கு அனுப்பி வைக்கப் போகிறேன்'' என்ற கன்யாவின் குரலில் உறுதி தொனித்தது. சில நிமிஷங்கள் பேசத் தோன்றாமல் உட்கார்ந்திருந்த புவனா, ''அவன் மூவாயிரம் தானேடி கேட்டிருக்கான்? அதை அனுப்பேன். பாக்கி இரண்டாயிரத்தை வைத்துக் கொண்டு எப்படியாவது செல்லத்தின்... அச்சுதன் ஒன்றும் சொல்ல மாட்டான். தங்கையின் கல்யாணத்தை நடத்தி வைக்க வேண்டிய பொறுப்பு அவனுக்கும் உண்டல்லவா?...வேண்டுமானால் பின்னால் அந்த இரண்டாயிரத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டால் போகிறது...'' என்றாள்.

கன்யா எதற்கும் சம்மதிக்கவில்லை. அன்றே பாங்கிலிருந்த ஐயாயிரம் ரூபாயை எடுத்து அச்சுதனுக்கு அனுப்பி வைத்ததுடன், தந்தை காலமானது, அவர் கடைசிக் காலத்தில் அவனைப் பார்க்கத் துடித்தது, பிறகு அந்தப் பணத்தைத் தன்னிடம் கொடுத்து வைத்தது-எல்லாவற்றையும் விவரமாக எழுதினாள். தங்கள் இருவருக்கும் இன்னும் திருமணமாகாத விஷயத்தையும் குறிப்பிட்டாள்.

பாங்கிலிருந்த பணம் பரோடா போய்ச் சேர்ந்த பத்து நாட்களுக்கெல்லாம் அச்சுதனிடமிருந்து மறுபடியும் ஒரு தபால் வந்தது.

''சித்திக்கு, அநேக நமஸ்காரம். நீங்கள் அனுப்பி வைத்த ஐயாயிரம் ரூபாய் கிடைத்தது. இருந்தாலும் அந்தப் பணத்தை நான் டிபாசிட் கட்டுவதற்குள் நான் விரும்பிய நர்மதா என்ற பெண்ணே அந்தப் பணத்தைக் கட்டி விட்டாள். உடனடியாக அவளுக்கு அந்தப் 'பிரமோஷன் கிடைத்துவிட்டது! நாங்கள் இருவர்தான் அந்த வேலைக்குத் தகுதியானவர்களாக இருந்தோம். அவள் முந்திக் கொண்டாள். ஏற்கனவே எனக்கு வேலை உயர்ந்தால் என்னை மணந்து கொள்வதாகச் சொன்னாள். இப்பொழுது அவள் பதவி ஒரு படி உயர்ந்து விட்டது. இனி அவளையும் விட ஒரு படி உயர்ந்த பதவி கிடைக்கும்போதல்லவா அவளைப் பற்றி நான் நினைக்க முடியும்? நீங்கள் அனுப்பி வைத்த பணத்தை உங்கள் பெயருக்கே இத்துடன் டிராப்ட் வாங்கி அனுப்பியுள்ளேன். அந்தப் பணத்தால் என் தங்கைகளின் திருமணமாவது சிறப்பாக நடக்கட்டும்...'' என்றவாறு எழுதியிருந்தான்.

செல்லத்தின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. புவனாவும் நிமிர்ந்து நடந்தாள். அம்மாவும் பெண்ணும் அச்சுதனின் பெருந்தன்மையைக் குறித்து மணிக் கணக்கில் பேசிக் கொண்டிருந்தனர். கன்யா உள்ளூற வேதனைப் பட்டாள்.

''செல்லம் அதிருஷ்டக்காரிடீ. அவள் விரும்பியபடியே நடக்கிறது!'' என்று ஆனந்தப்பட்டாள் புவனா.

''ஆமாம்மா; உலகத்திலே சிலருக்கு ரொம்பவும் அதிருஷ்டம் இருக்கு. சிலருக்கு இருப்பதே யில்லே. அவர்களைப் பற்றி யாரும் கவலைப்படுவதுமில்லே!...'' என்றாள் கன்யா பலவந்தப் புன்னகையுடன். அந்தப் புன்னகைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்த வேதனையைப் புவனாவோ செல்லத்தாலோ புரிந்துகொள்ள முடியவில்லை.

''அச்சுதன் என் பிள்ளை!'' என்றாள் புவனா பெருமையாக.

''நிஜம்மாவாம்மா?'' என்றாள் கன்யா.

''அதில் சந்தேகமென்ன?''

''அப்படியானால் கொஞ்சம் வருத்தப் படும்மா... உன் பிள்ளையின் மனம் இப்போ என்ன வேதனைப்படுகிறதோ?'' என்ற கன்யாவின் விழிகள் கலங்கி விட்டன.


கூடிச்செல்லுங்கள்
கோடி பெற...
கோ-ஆப்டெக்ஸ்
விசேடத்-
தள்ளுபடி
10%
செப்டம்பர் 13முதல் அக்டோபர் 19தேதி
1971வரையில்
Criterion CO 2626









காலகேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

காலகேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் காலகேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. எனினும், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85சதவீதம் வரை, காலகேட் டென்டல் க்ரீம் அகற்றிவிடுகிறது. இத்தகைய நிரூபணத்தைப் பெற்றிருப்பது காலகேட் மட்டுமே! அதன் விசேஷமிக்க பெப்பர்மின்ட் சுவையோ தனி— காலகேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!



தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே... உலகிலேயே அதிகமக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, காலகேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

OCG.42TM



காந்திஜி 'யங் இந்தியா' என்ற ஆங்கில இதழை ஆரம்பித்ததும், அதை ஆங்கிலத்தில் நடத்த வேண்டியதற்குக் காரணம் கூறும்போது, "இப்பத்திரிகையை மதராஸ் மாகாணத்திலுள்ளோர் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்காகத் தான் ஆங்கிலத்தில் நடத்துகிறேன்" என்று விளக்கம் கூறினாராம்.

ஆதாரம்: "லைகவிந்தியா"

தகவல்: முபீன்

யந்திரத்தால் அழிந்தது மந்திரத்தில் கிடைக்குமா?

அமெரிக்க பாங்கு ஒன்றில் இரண்டாயிரம் செக்குகளைத் தவறுதலாகத் துண்டு துண்டாகக் கிழித்துவிட்டார்கள் - யந்திரத்தின் உதவியால். மதிப்பு மூன்று லட்சம் டாலர். பிறகு? ஐம்பது பேர்களை ஒரு வாரம் வேலைக்கு அமர்த்தி அந்தத் துண்டுகளைக் கஷ்டப்பட்டு ஒன்றுசேர்த்தார்கள். இதற்கு யந்திரம் ஒன்றும் செய்ய முடியவில்லை.

- டைம் - முத்து

யானை கட்டித் தீனி போடும் அதிசய மனிதர்!

சென்னை ஆவடியிலுள்ள அப்பாராவ் தோட்டத்தில் ஒரு யானையும் இரண்டு குதிரைகளும் இருக்கின்றன. இந்தத் தோட்டத்தில் அரச மரமும், வேப்ப மரமும் பின்னிப் பிணைந்த நிலையில் ஒரு கோவில் இருக்கிறது. 'நாகபஞ்சமி' அன்று இக்கோவிலுக்கு ஏராளமான பெண்கள் வருகின்றனர். இந்தக் கோவிலுக்குச் சொந்தமானவை தாம் யானையும் குதிரைகளும். இவற்றின் உரிமையாளர் திரு கே. அப்பாராவ் கூறுவதாவது:

"என் பாட்டனார் காலத்திலிருந்து நாங்கள் தரும காரியங்களில் ஈடுபட்டு வருகிறோம். இப்பொழுதும்கூட நாள்தோறும் சுமார் நூறு ஏழை மக்களுக்குக் கஞ்சி ஊற்றி வருகிறோம். இலவசமாக ஜோதி ராமலிங்கம் மருத்துவமனை வைத்துப் பத்து ஆண்டுகளாகச் சேவை செய்து வருகிறோம்.



"இந்தச் சிவா யானையை மூன்று வயதுக் குட்டியாக இருக்கும்போது, தமிழக அரசின் மூலமாக ஆனைமலைக் காட்டிலிருந்து வாங்கினோம். விலை ரூ. 6000. இப்போது இதற்கு வயது ஒன்பது. கோவில் உற்சவங்களுக்கு மட்டும் இந்த யானையை இலவசமாகத் தருகிறோம். மற்ற விழாக்களுக்கு வேண்டுமானால் அதற்காகக் கட்டணம் வசூலிக்கிறோம்.

"இந்த யானைக்கு ஒரு நாளைக்கு ரூ. 20 செலவாகிறது. காலையில் மூன்று படி அரிசி, அரை கிலோ வெல்லம், நெய் உணவாகக் கொடுக்கிறோம். பிற்பகல் கேழ்வரகு, ஐந்து தேங்காய், 50 கிலோ பசுந்தழைகள். இரவில் சில சமயங்களில் உணவு கொடுப்போம்.

"சிவா யானை அதிகாலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து வந்து எங்களுடைய வீட்டு வாசலுக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு தும்பிக்கையைத் தூக்கி, மூன்று தடவை சத்தம் போடும். கோழி கூவினால் பொழுது விடியும் என்பார்களே அதைப் போல் யானை கூவி நாங்கள் எழுந்திருப்போம்.

"இரண்டு குதிரைகளைக் குதிரைப் பந்தயம் நடத்துபவர்களிடமிருந்து வாங்கினோம். ராஜா, லட்சுமணு என்பது இவற்றுக்குப் பெயர். திருமணத்துக்கு மட்டும் இந்தக் குதிரைகளை இலவசமாகத் தருகிறோம்."

பேட்டி: பி.வி.கி.

கண்ணாடிக் கதை

ஒரு பெண் தனது வாழ்நாளில் சுமார் மூன்றாண்டு காலம் கண்ணாடியின் முன்னால் நின்று அழகுபடுத்திக் கொள்வதில் செலவிடுகிறாள். ஆண் இரண்டாண்டு காலம் செலவிடுகிறான்.

முதன் முதலில் வெனிஸ் நகரத்தில், பதினான்காம் நூற்றாண்டில்தான் கண்ணாடி பிறந்தது.

பதினேழாம் நூற்றாண்டில் ரூபாய் நோட்டுகளுக்குப் பதிலாகக் கண்ணாடிகளைக் கொடுத்துப் பண்டங்களை வாங்கும் பண்டமாற்று முறை இருந்து வந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஒருவருடைய அந்தஸ்தை அவர்கள் வீட்டுச் சுவர்களில் தொங்கும் சட்டமிடப்பட்ட கண்ணாடிகளின் அளவைக் கொண்டுதான் மதிப்பிடுவார்கள்.

வெர்சைல்ஸ் மாளிகையின் ஒரு சுவர் முழுவதுமே கண்ணாடியினாலேயே கட்டப்பட்டிருந்ததாம். இதன் நீளம் இருநூற்று முப்பத்தைந்து அடி. உயரம் நாற்பத்து மூன்று அடி.

அமெரிக்காவில் பாட்டரி லைட் பொருத்தப்பட்ட டம்பப் பைக் கண்ணாடி, நாகரிகப் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கி வருகிறது. சினிமாப் பார்க்கும் பெண்களுக்குத் தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டே உதட்டுச் சாயத்தைச் சரிப்படுத்திக் கொண்டு தங்கள் வசீகரம் குறைந்து விடாமல் கவனித்துக் கொள்ள இந்தவினா சாதனம் பேருதவியாக இருக்கிறது.

ஆதாரம்: ஃபெமினா

தகவல்: விஜயம்







Criterion-NC 2601A

சில மனிதர்கள் சில நினைவுகள்

அமெரிக்க ஜனாதிபதி ஆப்பிரஹாம் லிங்கனைச் சந்திக்க ஒரு சமயம் ஒரு தூது கோஷ்டி அவர் மாளிகைக்கு வந்து சேர்ந்தது. அந்தத் தூதுகோஷ்டியின் தலைவர் ஒரு பாதிரியார். தாம் சொல்ல விரும்பிய விஷயங்களுக்கு அழுத்தம் கொடுக்க அவர், ஒரேயடியாக பைபிள் வாக்கியங்களையே மேற்கோள்களாகக் கொடுத்துப் பேசிக் கொண்டிருந்தார்.

லிங்கனின் பொறுமை கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்தது. ஆனாலும் நகைச்



ஆப்ரஹாம் லிங்கன்


சுவையுடன், ''பரமண்டலத்திலிருக்கும் தேவதூதரிடமிருந்து இப்படி ஒரு நேரிடையான தூதுகோஷ்டியை நான் இதுவரையில் சந்திக்கும் அதிருஷ்டம் பெறவில்லை. இன்றுதான் அந்த வாய்ப்புக் கிட்டியது'' என்று சொல்லி எழுந்தார்.

★

விஞ்ஞான மேதை ஐன்ஸ்டைன் தொடர்ந்து சுருட்டுப் பிடிக்கும் பழக்கமுள்ளவர். பருமனான நீண்ட கறுப்புச் சுருட்டுகளின் மீது அவருக்கு அலாதி மோகம்.

ஒரு சமயம் அவர் சுருட்டுப் பிடித்தவாறு தம் நண்பர் ஒருவருடன் நாட்டுப்புறப் புழுதிச் சாலையில் நடந்து கொண்டிருந்தார். பேச்சு சுவாரஸ்யத்தில், சுருட்டு உதட்டிலிருந்து நழுவிக் கீழே மண்ணில் விழுந்துவிட்டது. அந்தப் பாதிச் சுருட்டை அப்படியே தரையோடு தரையாக மிதித்து நெருப்பை அணைக்க ஐன்ஸ்டைன் தம் காலைத் தூக்கினார். ஆனால் அதே கணத்தில் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டு குனிந்து அந்தச் சுருட்டைக் கையில் எடுத்து விரல் நுனியால் சாம்பலைத் தட்டி நெருப்பை அணைத்துவிட்டு, பாதிச் சுருட்டைப் பையில் போட்டுக் கொண்டார்.

''அடடா! இதென்ன? புழுதியெல்லாம் கீழே விழுந்த



ஐன்ஸ்டைன்

சுருட்டில் ஒட்டிக் கொண்டிருக்குமே? அந்தச் சுருட்டை ஏன் எடுத்தீர்கள்?'' என்று கேட்டார் நண்பர்.

''நான் புழுதியைப் பற்றிக் கவலைப்படவில்லை. என் அருமையான சுருட்டைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன். 'அதை என்னால் தியாகம் செய்ய முடியாது'' என்று சொல்லி நடந்தார் ஐன்ஸ்டைன்.

★

கவிதையின் விஷயத்தைப் போலவே, கவிதையின் உருவமும் ரூக்கியம் பெற்றிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த 1945ம் ஆண்டில் எட்டயபுரம் பாரதி விழாவில் ராஜாஜி கீழ்க்கண்டவாறு விளக்கம் கொடுத்தார்:

'' ரோஜாப் புஷ்பத்தின் வாசனையுள்ள திரவத்தை ஒரு புட்டியில் போட்டு விற்கிறார்கள். வாசனை அப்படியே



ராஜாஜி

தான் இருக்கிறது. ஆனால் அது ரோஜாப் பூ ஆகுமா? மலரை நாம் பார்த்து முகர்ந்து அனுபவிக்கிற சந்தோஷம் புட்டியில் அடைத்த திரவத்தினால் ஏற்படுமா? கருத்து மாத்திரம் நன்றாக இருந்தால் அது வெறும் வாசனைத் திரவம் மாதிரி. நல்ல கவிதை உருவம் அமைந்து இருந்தால் ரோஜாப் புஷ்பம் மாதிரி. கவிதையையும் ரோஜாப் புஷ்பம் போல முழுமையாகப் பார்த்து அனுபவிக்க வேண்டும். இதழ் இதழாகப் பிய்த்து நாசம் செய்யக் கூடாது. மற்றும் ரோஜாப் புஷ்பம் உயர்வானதா? மல்லிகைப் புஷ்பம் உயர்வானதா என்பது போன்ற வீண் விவாதங்களும் செய்யக் கூடாது. நமக்கு ரோஜா, மல்லிகை எல்லாம் வேண்டியது தான்.....''

— மேரு

நஞ்சானும் பொல்லாத கள்ளுச்சனி - ஊரை
நாறிக் கெடுக்கிற கள்ளுச்சனி
வஞ்சப் பகாசூரன் கள்ளுச்சனி - கொல்லும்
வாளினும் தீயது கள்ளுச்சனி

ஒழிந்த கள்ளுச் சனி திரும்பி வருகிறது. சனியனை ஒழிக்க நாங்கள் பட்டபாடு...ராம ராம! இராஜாஜியின் சேவையால் ஏழைகளுக்கு விமோசனம் உண்டானது.

காலம் மீண்டும் அலங்கோலமாகிறது. பழைய நினைப் பிற் புகுந்து வழிகாணுவோம் — ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

காந்தியின் கருணையுள்ளம் கதியற்ற ஏழைகளின் கண்ணீரைக் கண்டது. கள்ளை அறவே கடிந்து விலக்கி, ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க காந்தி முன்வந்து எங்களையெல்லாம் ஊக்கினார். ஒருமுறை காந்தி திருச்சிக்கு வந்தபோது அவரைத் தரிசித்தேன். "மது விலக்குப் பாடும்" என்றார். அன்று மாலை கூட்டத்தில் பாடினேன். ரா. கி.யின் இனிக் குரலும் என்னுடன் சேர்ந்தது:

கள்ளுக் கடைப்பக்கம் போகாதே - அண்ணே
காலைப் பிடித்துன்னைக் கெஞ்சுகிறேன்
எல்லை மிகப்பல செல்வமப்பா - நீதி
சத்தி சிதைத்திட வைக்குமப்பா

டாக்டர் சாமிநாத சாஸ்திரியார் என் பாட்டைக் காந்திக்கு மொழிபெயர்த்து வந்தார். பாட்டுடன் ஆட்டமும் கூடியது.

பித்தும் பிடித்து நடுத்தெருவில் - கண்ட
பேரெல்லாம் 'பெப்பெப்பே' என்று சொல்லத்
தத்தித் தடுமாறிச் சாக்கடையில் - வீழத்
தள்ளுமப்பா கெட்ட கள்ளுச்சனி

இப்படிப் பாடும்போது ஒரு நெட்டைப் பேர்வழி தாளம் போட்டுத் தாவிக் குதிக்கத் தொடங்கினார்.



அவரது ஆவேசத்தை அடக்கி வைக்க முடியவில்லை. காந்தி அவர் "ஆடட்டும்" என்று விடுத்தார். அவர் கதை பெரிது.

பச்சை பச்சையாகப்
பேசுமப்பா - வாடை
பட்டாலும் உன்குலம்
நாசமப்பா
பிச்சை யெடுத்திட
வைக்குமப்பா - உன்
பிழைப்பில் மண்ணைக்
குவிக்குமப்பா.

"உண்மை! உண்மை! முற்றும் உண்மை" என்று குதித்தார் நெடுமால்.

கொண்டாட்டம் காட்டிக் குழியினிலே - உன்னைக்
கொண்டு தள்ளிப் பாம்பாக் கொத்துமப்பா
பெண்டாட்டி தாலி பிடுங்குமப்பா - பெற்ற
பிள்ளையைக் கொல்லத் தொடங்குமப்பா!

"ஐயோ! பாவி! அப்படியும் செய்தேன்! காந்தியால் உய்ந்தேன்..." என்று நெடுமால் ஆடினார்.

கள்ளுச் சனி முகம் பாராதே - அப்பா
கவலை துளர்க்கும் வாராதே

தெள்ளத் தெளிந்த நீராகாரத்திலே-
கொஞ்ச
சிரகம் போட்டுப் பருகடப்பா.

"ஆம். அப்படியே செய்தேன்— உய்தேன், உய்தேன்" என்று நெடுமால் குதித்தார்.

தங்கத்தாலி வெள்ளியான கதை!

கவியோகி சுத்தானந்த பாரதியார்



வீடு பசியினால் வாடையிலே - கட்ட
வேட்டியில் லாதுநின்ன டாடையிலே
பாடுபட்டு வந்த கூலிப் பணத்தை - நீ
பாழும் கடையிலே போடுவதோ?

"போட்டேன் போட்டேன். இனி மாட்டேன்! மாட்டேன்!" ஆட்டம் வலுத்தது.

கள்ளும் சனி முகம் பாராதே - நாலு
காசுபணம் கையில் சேருமப்பா
பிள்ளை குட்டிகள் சேருமப்பா - மனம்
பேயும் அடங்கி உழைக்குமப்பா.

நெடுமால் என் காலில் விழுந்தார். என் கையில் ஒரு முடிப்பைத் தந்தார். "மகாத்மாவுக்கு இதை உங்கள் கையால் அர்ப்பணித்து நீங்களே என் கதையைச் சொல்லிவிடுங்கள்" என்று மன்றாடினார். காந்தி மகான் சிறிது பேசிய பிறகு டாக்டர் ராஜன், சாஸ்திரி இருவரும் பேசினர். பிறகு நான் பேசினேன். "இவர் கதையையும் சொல்லும்" என்று காந்தி பணித்தார். எல்லாரும் கேளுங்கள், சொல்லுகிறேன்.

* * *

நெடுமாலின் இயற்பெயர் முனியப்பா. நான் வ. வே. சு. ஐயர் கட்டளைக்கிணங்கிச் சில காலம் மாணவருக்கு விஞ்ஞானம் சொல்லிக் கொடுத்தேன். ஒரு நாள் முனியப்பா என் வகுப்பில் நுழைந்தார். "அவசரம், அவசரம். பத்து ரூபா தாருங்கள்" என்று ஒரு தாலிப் பொட்டை அடகு தந்தார். அது தங்கத் தாலி. எனக்கு மதிப்புத் தெரியாது. எனினும் ஆளை வெளியே இருக்கச் செய்து நான் பாடம் நடத்தினேன். "ஐயோ ராமா! உயிர் துடிக்கிறது. அவசரம் அவசரம் ஐயா, புண்ணியவானே" என்று ஆள் உருகினான். அவன் முகத்தில் குடிகார மூதேவி கூத்தாடியது. அவன் ஒரு செல்வர் மாளிகையில் ஜவானாக வேலை செய்தவன் என்பது மட்டும் எனக்குத் தெரியும். அவனுக்குத் தமிழும் தெலுங்கும் தெரியும். நெற்றியில் பட்டை நாமத்துடன் பார்த்துள்ளேன். இப்போது சூனிய நெற்றியும், சுருங்கிய கன்னமும், சிவந்த கண்களும், அவிந்த மனமும் கண்டேன். சட்டென்று தங்கத் தாலியை மறைவாகப் பாதரசத்தில் தேய்த்து வெள்ளியாக்கினேன். வகுப்பு முடிந்ததும் அவனைத் தோட்டத்துக்கு இட்டுச் சென்றேன். அங்கே இரண்டு இளநீர் வெட்டிப் பருகச் செய்தேன். ஓர் ஏப்பம் விட்டான். முகம் தெளிந்தது. பிறகு பேச்சு.

நான்: முனியப்பா! என்னைப் பார்த்து, உனது நெஞ்சைத் தொட்டுப் பேசு. இது யார் தாலி?

முனியப்பா: உம்! உம்! உம்...வெட்கமாயிருக்கிறது.... என் மனைவிக்கு நானே கட்டின தாலி.

நான்: பத்தினியின் கழுத்தில் கட்டிய மாங்கல்யத்தைப் பறித்து வந்தது ஏன்? வேறு சாமான் இல்லையா? பாத்திரம் பண்டம்?

முனி: எல்லாம் குளோஸ்... சட்டிபானை தான் மிச்சம்.

நான்: நகை நட்டு...?

முனி: எல்லாம் போயின... மூக்கு மூளி... காதில் பனை ஓலை. கழுத்தில் கருகுமணி... கையில் இரண்டு ரப்பர் வளையே மிச்சம்.

நான்: துணி மணி அணி?

முனி: கூரைப் புடவைகூட விற்றாயது. பழைய தோம்புச் சேலை ஒன்றே மிச்சம். அதையும் நனைத்து ஒரு முனை சுற்றி மிச்சம் உலர்த்தி, அதைச் சுற்றிக் கொண்டு இதை உலர்த்தி அணிந்து குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு என்னையும் வணங்குகிறாள்.

நான்: வீடு, நிலம்?

முனி: முன்னே ஓர் ஏக்கரா முதல் கரை நிலம் அயலூரில் இருந்தது. அதை விற்றேன். ஓட்டு வீடு இருந்தது. அதற்கு மேல் கடன்... ஓடுகளும் உடைந்து மழைக்காலம் ஒழுகும்.

நான்: உனக்கு இந்த நிலை வந்ததேன்? நீ ஏதாவது வேலை பார்த்தாயா? உன் படிப்பென்ன?

முனி: பள்ளி இறுதியை எட்டிப் பிடித்தேன். அதற்குள் என் ஒழுக்கமே இறுதி கண்டது. முதலில் தமாஷாகச் சுருட்டுக் குடித்தேன். பிறகு பணக்காரப் பையனுடன் சேர்ந்தேன். அவன் தகப்பனார் சாராயம் குடித்தார்.

விஸ்கி, பிராந்தி, ரம், எல்லாம் அவரது கண்ணாடி பீரோவில் இருந்தன. ''அப்பா குடிக்கிறாரே, நானும் குடிப்பேன்'' என்று எனது நண்பன் கள்ளத்தனமாக பீரோவைத் திறந்து ரம் அடித்தான். நானும் சிறிது சுவைத்தேன். சிறிது சிறிது என்று அவுன்ஸ் அவுன்ஸாகத் திருட்டுச் சாராயம் குடித்து, பெக் பெக்காகி, பாட்டில் பாட்டிலாகக் குடிக்கத் தொடங்கினோம்.

நான்: குடியினால் என்ன பயனைக் கண்டீர்? செல்வப் பிள்ளை உருப்பட்டானா? உன் கதி என்ன? விதி என்ன?

முனி: செல்வப் பிள்ளை ஸ்கூல் ஃபைனலை முடித்து, கல்லூரியில் படித்து பாரிஸ்டருக்குப் படிக்கச் சீமைக்குச் சென்று மடாக் குடியனாகப் புட்டியும் குட்டியுமாக வந்து சேர்ந்தான். அட்டகாசம் பண்ணி, நரம்பு தளர்ந்து, மார்பு மெலிந்து, உடல் நலிந்து எமலோகம் போனான்.

நான்: உனது கதி என்ன? படிப்பு, வேலை?

முனி: நான் ஸ்கூல் ஃபைனலில் தனிக் கோட் அடித்தேன். அப்பா அடிக்க வந்தார். ஓடிப்போனேன். இராணுவத்தில் சேர்ந்தேன். சண்டை முடிந்ததும் உயிரோடு திரும்பினேன். நண்பன் சிபாரிசு செய்து செல்வன் வீட்டில் ஜவானாக வேலை செய்தேன். சம்பளம் கிம்பளம் எல்லாம் சேர்ந்து நூறு வந்தது. கலியாணம் பண்ணிக்கொண்டேன்.

நான்: உனக்கு யார் பெண்ணைக் கொடுத்தார்?

முனி: வெகு நாட்கள் கலியாணமாகாத கன்னிப் பெண், அநாதை, அவளை நானே காதலித்து மணந்தேன். அவள் குணவதி, தூய பத்தினி. நான் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டாள். அவள்குரல் வெளியே கேட்டதில்லை. பொறுமைக்குப் பூதேவி. காரியக் கப்பல், சமையல் நளபாகம்.

நான்: அப்படிப்பட்ட உத்தமியைக் கொடுமை செய்ததேன்? குழந்தைகள் உண்டா?

முனி: ஐயா, கேள்வி போதும்! என் மனச்சாட்சி என்னை அறுக்கிறது. சித்தம் சித்திரவதை செய்கிறது. நான் ஒரு பாவி! குடிகாரப் பித்தன். என் தந்தை ஒரு வீடும் நல்ல நிலமும் வைத்துப் போனார். நானும் ஜவானுகிச் சம்பாதித்து என் மனைவி மக்களை முகம் கோணாமல் வைத்திருந்தேன். செல்வரிடம் இருக்கு மட்டும் அவர் குடித்த மிச்சத்தைக் குடித்தேன். திருடியும் குடித்தேன். குடி வெறியில் ஒரு நாள் எஜமானியின் நகைப் பெட்டியைத் திறந்தேன். பிடிபட்டேன். என்னை அவர் சிறைக்கு அனுப்பவில்லை. வீட்டுக்கு அனுப்பி விட்டார். வேலை போனது. ஜவான் 'டான் ஜுவான்' ஆனேன். நிலம், வீடு எல்லாவற்றையும் விற்றுக் குடித்தேன். என் இரண்டு பிள்ளைகளை அடித்தேன். அவர்கள் எப்படியோ ஓர் அநாதை இல்லத்தில் சேர்ந்து படித்தனர். பிறகு திருச்சியில் ஒருவர் கான்ஸ்டேபிள், ஒருவர் வக்கீல் குமாஸ்தாவாகி வயிறு வளர்த்தனர். இந்தப் பக்கம் வருவதில்லை. நான் வீட்டைப் பொட்டலாக்கிப் பாத்திரம் பண்டமெல்லாம் அடகு வைத்துக் குடித்து வெறி பிடித்து அலைகிறேன். எனது தர்மபத்தினி மஞ்சளும் குங்குமமுமாக இன்னும் புன்னகையோடு பொறுமை காட்டுகிறாள். இன்று அவள் உறங்கும்போது நீக்குச்சியால் தாலிக் கயிற்றைப் பொசுக்கித் தாலிப் பொட்டை எடுத்து வந்தேனையா.... ஐயோ, நான் பாவி! நான் பாவி, பழிகாரன், குடிகேடன். இப்படியே ஆற்றில் விழுந்து சாவேன். ஆனால் எனக்கு நீச்சத் தெரியும். எனக்கு விடிவே கிடையாதா? கதியே கிடையாதா?

நான்: முனியப்பா, உன் மனச்சாட்சியே உன்னைக் குத்துகிறது அல்லவா? நீ செய்த பாதகத்தால் நீ பத்தினி கழுத்திலிருந்த மாங்கல்யத்தைத் தொட்டதால் — பார் — தங்கம் வெள்ளியானது.

முனி: ஐயையோ! ஐயையோ! என்ன செய்வேன்?

நான்: இந்தா, இதை அப்படியே உன் மனைவியிடம் கொண்டு தா. நான் மாலை ஐந்து மணிக்கு அங்கே வருவேன். அப்போது நீ குளித்துச் சுத்தமாக விளக்கேற்றிக் கடவுள் படத்தின் முன்... மனைவியுடன் இருக்க வேண்டும்.

முனி: அதற்குள் இறந்து போவேனே....ஐயா, இளநீர் குடித்ததும் சிறிது வெறி தணிந்தது. மாலையில் வெறி தலைக்கேறுமே? இரண்டு ரூபாய் தாருமே....

நான்: குடிப்பதற்கு நான் ஒன்று கொண்டு வருகிறேன், பாரும். நீ ஒழுங்காக நடந்தால் தாலி மீண்டும் பொன்னாகும்.



''கோர்ட் பொம்மையைத் திருடிய குற்றத்திற்காக உனக்கு நவ - ராத்திரி ஜெயில் தண்டனை விதிக்கிறேன்.''

* * *

மாலை ஐந்தரை மணி. நான் ஒரு போத்தலில் ஒரு பானம் தயாரித்து முனியப்பா வீட்டுக்குச் சென்றேன். ஒரு மூலையில் உம்மாச்சி விளக்கு புகைந்தது. மனைவி பட்டினி; முனியப்பா ஓலைப் பாயில் படுத்துப் புலம்புகிறான். அவனால் எழுந்திருக்க முடியவில்லை. நீட்டிப் படுத்திருந்தான். அவனை எழுப்பிச் சுவரில் சாய்ந்து அமரச் செய்தேன். அவன் அழுதான், தொழுதான்.... ''ஒரு அவுன்ஸாவது.... தாராரரா....''

நான்: அம்மா, நீராகாரம் இருக்கிறதா?

அம்மா: நீர் மட்டும் உள்ளது; சோறில்லை. புளித்த நீரையே இன்று ஒரு மிளகாய் கடித்துக் கொண்டு உண்டோம்.

நான்: இரண்டு தம்ளரில் புளித்த நீராகாரம் கொண்டு வாருங்கள். இதோ



நகைச்சுவை எழுத்தாளர் கோமதி ஸ்வாமிநாதனின் குமாரி சௌ. மீனாட்சிக்கும், ராஜாமடம் அருணாசல சாஸ்திரிகள் குமாரர் ரெஜிஸ்ட்ரி ஆர். ஏ. வீராகவாமி (வில்லியம்ஸ்றாக் நிறுவனம், சென்னை) அவர்களுக்கும் 23-8-71ல் சென்னையில் நடந்த திருமணத்திற்குப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நகரப் பிரமுகர்களும் நண்பர்களும் உறவினர்களும் திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

வாழ்க மணமக்கள்

இஞ்சி நயம் — ஜீரகம் இரண்டையும் அதில் நசுக்கிப் போட்டுச் சிறிது உப்புப் போடுங்கள்.

அம்மாள் நான் சொன்னதெல்லாம் செய்து தந்தாள். என் போத்தலில் மோர் இருந்தது. அதில் கருவேப்பிலையைக் கசக்கிப் போட்டு எலுமிச்சம் பழம் பிழிந்து உப்புப் போட்டிருந்தேன். நீராகாரத்தையும் கருவேப்பிலை மோரையும் சேர்த்துக் கலக்கினேன். ''முனியப்பா, இதைக் குடி!'' என்று ஒரு டம்ளர் தந்தேன். மடக்கு மடக்கென்று குடித்து ஏப்பம் விட்டு, ''அப்பாடா'' என்று வயிற்றைத் தடவினான். இன்னொரு தம்ளர் தந்தேன். குடித்தான். ''அம்மாடி.... !'' ஏப்பம் வந்தது. எழுந்து நின்றான். என்னை வணங்கினான். பிறகு பேசினோம்.

முனி: நான் ஜவான். பகைவருடன் போர் புரிவேன். ஆனால் இந்த மனப் பகைவனை வெல்ல முடியவில்லையே. நாக்கு கேட்கவில்லை; வயிறு இன்னும் குடி என்கிறது. பழக்கம் கொடிது.

நான்: முனியப்பா! நாம் காந்தி காலத்தில் இருக்கிறோம். மகான் வழி காட்டுகிறார். அவர் கள்ளைக் குடிக்காதே என்கிறார். குடியினால் உன் குடியே கெட்டது. உன் பத்தினி கண் கலங்கி நிற்கிறாள். இருந்ததெல்லாம் புட்டியால் இழந்தாய். முதலில் சாராய வெறியை ஒழி. அதற்கு மருந்து இன்று தந்தேன். நன்றாகக் கவனி; அம்மா நீயும் கேள்.

(1) சோற்றைக் கஞ்சி வடிக்காமல் பொங்க வைக்க வேண்டும். பொங்கும் போது தவிடு ஒரு பிடி போட வேண்டும். உண்ட பிறகு ஒரு தூய பானையில் நல்ல தண்ணீர் பாதி நிரப்பி, அதில் சோற்றைப் போட்டு வைக்க வேண்டும். அது மறு நாள் புளிக்கத் தொடங்கும். சோற்றைக் கை போட்டுக் கலக்காமல் அகப்பையால் எடுக்க வேண்டும். நான்கு நாளில் நல்ல புளிப்பு பெறும். அதற்கு ''காடி'' என்பர். அந்தக் காடியில் ஓமமும் ஜீரகமும் பொடித்துப் போட வேண்டும்... இது ஒரு தம்ளர், இன்னொரு தம்ளரில் மோர்; அதில் கருவேப்பிலையைக் கசக்கிப் போட்டு நான்கு சொட்டு எலுமிச்சம்பழ ரசம் பிழிந்து, உப்புப் போட வேண்டும். இரண்டு தம்ளர்களையும் ஒன்றாகக் கலக்கிக் கள் — நினைவு வரும் போது, மாலையில் குடிக்க வேண்டும். குடித்த பிறகு மனத்தை நல்ல விஷயங்களில் செலுத்தவேண்டும். சிறிது நேரம் நாம சங்கீர்த்தனம் செய்க; திருக்குறள், திருவாசகம், பெரிய புராணம், பாரதம் முதலிய நூல்களைப் படிக்கலாம். உங்களுக்குப் படிக்கத் தெரியுமே... கோவிலுக்குச் சென்று வரலாம். ஜபமாலையில் 'ஓம், சிவம், ஓம் சிவம், ஹரி ஓம், ஹரி ஓம்' என்று ஜபம் செய்யுங்கள். மகான்கள் வந்தால் தரிசித்து வணங்குங்கள். அவர்கள் சொல்வதைக் கேட்டுப் பயன்பெறலாம் — இவ்வாறு மனத்தை நல்வழியிலே பழக்கிச் சுவையேறினால் தீய நினைவுகள்வாரா.

இருவரும் மகிழ்வுடன் இவ்வாறு செய்யத் தொடங்கினர். ''வெள்ளித் தாலி தங்கமாகாதா?'' — முனியப்பாவின் கவலை இது. நான்கு நாட்கள் நீ ஒழுங்காக நடந்ததும் தங்கமாகும் என்று சென்றேன்; வந்தேன்.

அத்தரும் வெற்றிலைச் சாறும் போட்டுத் தேய்த்து ரசத்தை முறித்தேன். தாலி தங்கமாகப் பளபளத்தது. ஒரு மஞ்சள் கயிற்றில் கோத்துப் பத்தினி கழுத்தில் முனியப்பா கட்டினான். அவனுக்குக் காந்தி வரலாறு ஒன்று தந்தேன். காந்தி படமும் தந்தேன்.... முனியப்பா காந்தி தொண்டனாகி, ஊர் ஊராக மதுவிலக்குப் பிரசாரம் செய்து வெற்றி முரசு கொட்டுகிறான். ''கள்ளுச் சனி'' என்ற நாடகமும் அந்தக் காலம் நடத்தினோம்.

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே! இது கற்பனையில்லை; இது நடந்த கதை... எல்லோரும் கேட்டு மகிழ்ந்தனர். காந்தித் தொண்டன் மதுவிலக்குப் பணியே வாழ்வாகி காந்தியத்துக்கே பலிதமானான்.

தமிழகத்தின் தவப் பயனான ராஜாஜியின் ஓயா உழைப்பால் மதுவரக்கன் ஒழிந்தான். மறுபடியும் அவன் மயில்ராவணன் போலக் கிளம்புகிறான்.... மக்கள் மன உறுதியாலே தான் அரக்கன் கொட்டம் அடங்க வேண்டும். மேற்சொன்னபடி நீராகார மோர் பருகிப் பருகி, போதை தரும் கள் வலையில் படாமல் மக்கள் விழிப்புடனே நடக்க வேண்டும். பகுத்தறிவாலே நல்ல பண்பாட்டை வளர்க்க வேண்டும். அப்போது குடியரக்கனுக்கு வெடி வைத்து விடலாம். நச்சுக் குடியால் நாடு கடுகாடானது. ஆடல் பாடல் அரங்கு எங்கும் கள்ளுச் சனியனைக் கண்டனம் செய்ய வேண்டும். மக்கள் மனம் வைத்தால் மது அரக்கன் மண்ணைக் கவ்வி மறைவான்.


காந்தியை நினையுங்கள். நல்ல காலம் வரும்.

டிரான்சிஸ்டர் போன்!


டிரான்சிஸ்டர் ரேடியோவிலேயே, ஆபத்துக்குக் குரல் கொடுக்கவோ அல்லது உளவுச் செய்திகளை அறிவிக்கவோ வசதியாக ஒரு சிறிய ''போன்'' பொருத்தி, புதிய சாதனம் ஒன்றைப் பிரிட்டனில் அறிமுகப்படுத்தி யிருக்கிறார்கள்.

பாட்டரியால் இயக்கக் கூடிய இந்த டிரான்சிஸ்டர் போன் கருவியின் மூலம் காவல் துறையினரில் சில முக்கிய பிரிவினருக்கு மட்டுமே தகவல் தரமுடியும். ஆபத்து நெருங்கும்போது உடனே தெரிவித்து உடனே உதவி கோரலாம். அல்லது துப்பறியும் சிக்கல்கள் தங்கள் பாதையில் கிடைக்கும் நடவடிக்கைத் தன்மை நிலவரத்துக்கு உடனுக்குடன் தெரிவிக்கலாம். எண்களைச் சுழற்ற வேண்டியதில்லை. எடுத்ததும் பேசலாம். மறுமுனையில் ஆள் இல்லை என்றாலும் செய்தி பதிவாகி விடும்.

பி. ஐ. எஸ்.




விழா ஸீஸன் ஸ்பெஷல்
இலவசம்!
ஒவ்வொரு உஷா தையல் மிஷினுடன்
ஜான்ஸன் எலெக்ட்ரிக் அயர்ன்
2.72 கி. (6 lbs)
தமிழ்நாட்டில், அதிகாரம் பெற்று உஷா விற்பனை செய்யும் எல்லா இடங்களிலும் ரொக்கத்திற்கும் மாதத்தவணை முறையிலும் கிடைக்கிறது.
முந்துங்கள்! இந்த இலவச அளிப்பு கையிருப்பு உள்ளவரையில் தான். இந்த அரிய வாய்ப்பைத் தவற விடாதீர்கள்!
சிறந்ததை வாங்குங்கள் உஷா எல்லாவற்றிலும் சிறந்தது



ஒரு கூடை புகழ்


பதின்மூன்று என்றும் பலருக்குத் துரதிருஷ்டம் என்ற நம்பிக்கை. ஆனால் இலங்கையிலிருந்து சென்னை எழும்பூர் ஸ்டேடியத்தில் கூடைப் பந்தாட்டம் ஆட வந்த மேற்கத்திய மாகாண கோஷ்டியின் காப்டன் லோர்னாவின் எண் பதின்மூன்று. ஆனால் துரதிர்ஷ்டம் இலங்கை கோஷ்டியை அண்டவில்லை. எதிர்த்த கோஷ்டியைத்தான் பிடித்தது ! இலங்கை கோஷ்டிப் பெண்களிடம் இணைந்து ஆடும் திறமையும் பந்தைக் குறி தப்பாமல் வளையத்துக்குள் போடும் சாமர்த்தியமும் அபாரமாக இருந்தன. இலங்கைப் பெண்கள் கோஷ்டியில் ஓர் அதிசயம் ! அம்மாவும் பெண்ணும் கூடைப் பந்துப் போட்டியில் சேர்ந்து ஆடுகிறார்கள். காப்டன் லோர்னாவும் மகள் மாலினியும் ஆடும்போது ''அம்மா! பாஸ்கெட் போடு !'' என்று ரசிகர்கள் அலறும்போது, காப்டன் லோர்னா ஆடி ஓடி 'பாஸ்கெட்' போடும் அழகை அத்தனை ரசிகர்களும் ஆரவாரத்தோடு வரவேற்கிறார்கள். ஏன், குள்ளமான உருவம் படைத்த நிகல் டி சில்வா அத்தனை எதிர்த்தரப்பு ஆட்டக்காரிகளையும் அயர வைத்துத் தந்திரமாக வளையத்துக்குள் போட்டதை மெச்சாதவர்கள் கிடையாது. பெண்மணிகளுக்கான தலைசிறந்த ஆட்டக்காரி கோப்பை நிகல் டி சில்வாவுக்கே கிடைத்தது. இலங்கை கூடைப் பந்தாட்ட கோஷ்டிக்கு நம் பாராட்டுதல்களையும் கூடை கூடையாக அனுப்பி வைக்கிறோம்.

இரண்டாவது அகில இந்திய கூடைப் பந்தாட்டப் போட்டியில் கேரள ஏ. ஜி. குழுவினர் ராஜலக்ஷ்மி விளையாட்டுக் கழகத்தோடு ஆடுகையில் தோற்றுப் போனாலும், எல்லாக் கோஷ்டியினருக்கும் பலமான எதிர்ப்பைக் கொடுத்து ரசிகர்களின் அனுதாபத்தைப் பெற்றார்கள். இறுதி ஆட்டத்தில் கோயமுத்தூர் ராஜலக்ஷ்மி விளையாட்டுக் கழகத்தினரும், பெரம்பூர் இணைப்புப் பெட்டி ஆட்டக்காரர்களும் வந்து உக்ரமாக சர்தார் மோகன்சிங் கோப்பைக்குப் போராடினார்கள்.

பெரம்பூர் இணைப்புப் பெட்டி ஆட்டக்காரர்களிலே முனிசாமி, மாத்யூ சத்யபாபு போன்ற 'ஆல்ஸ்டார்'கள் இருந்தும் ராஜலக்ஷ்மி விளையாட்டுக் கழகத்திலுள்ள இணைப்பு ஆட்டம் வெற்றியை அவர்கள் பக்கம் திருப்பி விட்டது. கோயமுத்தூர் ராஜலக்ஷ்மி குழுவிலே காப்டன் ராமதாஸ், நவகோடி, ராமமூர்த்தி அசகாய சூரர்கள். பெரம்பூர் இணைப்புப் பெட்டி கோஷ்டியை இணைந்தாடவிடாமல் 'டிபென்ஸ்' சங்கிலியை உடைத்து முன்னேறினார்கள். 70–65 என்ற எண்ணிக்கையில் கடைசியில் கோயமுத்தூர் ராஜலக்ஷ்மி கூடைப் பந்தாட்டக் கழகத்தினர் வெற்றித் தேவதையை – இரண்டாவது தடவையும் சர்தார் மோகன் சிங் கோப்பையை – பெற்றார்கள். ராஜலக்ஷ்மி விளையாட்டுக் கழக ராமமூர்த்தியின் தலைசிறந்த ஆட்டத்துக்கு ஒரு விசேஷக் கோப்பையும் கிடைத்தது.

எழும்பூர் நகர சபை ஸ்டேடியம் ஐந்து நாட்கள் கூடைப் பந்தாட்ட 'ஸ்டார்'களால் ஒளிவிளக்கில் மின்னி ரசிகர்களை மெய்மறக்க வைத்தது.

— குண்டுமணி





★ சமீபத்தில் நான் கோவையிலிருந்து சென்னைக்குப் போன போது நடந்த ஒரு சம்பவம் என்னைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது! அன்று 'நீலகிரி எக்ஸ்பிரஸி'ல் நல்ல கூட்டம். வண்டி இரவில் சேலத்தில் வந்து நின்றதும் ஒரு பெரிய போலீஸ் கோஷ்டி ஒரு கம்பார்ட்மெண்டுக்குள் ஏறி அங்கு ஏற்கனவே இருந்த பிரயாணிகளை எழுந்து போகும்படி விரட்டியது. "நாங்கள் முன்பே இதில் பிரயாணம் செய்து கொண்டு வருகிறோம்; நாங்கள் இனியும் நீண்ட தூரம் போக வேண்டும்" என்று பிரயாணிகள் எவ்வளவு சொல்லியும் போலீஸ் கோஷ்டி கேட்கவில்லை. "நாங்கள் முதன் மந்திரியுடன் பந்தோபஸ்துக்காகச் சேலம் வந்தவர்கள். முதன் மந்திரி அடுத்த பெட்டியில் இருக்கிறார். நாங்கள் இதில்தான் இருப்போம். நீங்கள் எல்லோரும் இறங்கிக் கொள்ள வேண்டும்" என்று அதிகாரத் தோரணையில் விரட்ட, பெட்டியில் இருந்தவர்களும் பயந்து போய் இறங்கி அந்த இரவில் இடம் தேடிப் பிளாட்பாரத்தில் அலைந்தது பார்க்கப் பரிதாபமாக இருந்தது. "நாங்கள் சாமானியர்கள்" என்று பேசி வரும் திரு கருணாநிதியின் ஆட்சியில்தான் இந்தப் போலீஸ் கெடுபிடி நடந்திருக்கிறது. பொதுமக்களுக்கு உதவி செய்வதற்குப் பதில் உபத்திரவம் செய்வதற்குத்தான் போலீஸ் பந்தோபஸ்து என்று பெயரா? இதுதான் நல்லாட்சியின் லட்சணமா?

பூனாங்கினர்
10-9-71 வி. கமலம்

★ இக்குறியிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

நெல்லை மாவட்டத்தில் சில ரயில்வே ஸ்டேஷன்களில், ஸ்டேஷன் அதிகாரிகள், பயணம் முடித்து திரும்பும் பிரயாணிகளிடம் டிக்கட்டுகளைக் கேட்டு வாங்குவதில்லை. மேலும் பிரயாணிகளை அவர் தம் விருப்பம்போல், எப்பாதையில் வேண்டுமானாலும் செல்ல வாய்ப்பு அளித்து வருகின்றனர். ரயில்வே போர்ட்டரின் உதவி கொண்டாவது டிக்கட்டுக்களை வாங்கக் கூடாதா?



அதிகாரிகள் டிக்கட் கேட்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில், பல பயணிகள் குறிப்பிட்ட சில ஸ்டேஷன்களுக்கு டிக்கட் எடுக்காமலே பயணம் செய்யலாம் என்று எண்ணி, அவ்வாறே செய்து வருகின்றனர்.

அதிகாரிகள் யாரும் வாங்காததால் தண்டவாளத்தில் பயணிகள் அவ்வப்போது எறிந்து விட்டுப் போகும் டிக்கட்டுக்களைப் பொறுக்கி இத்துடன் அனுப்பியுள்ளேன். ஸ்டேஷன் அதிகாரிகள் பொறுப்புடன் நடந்து கொள்வார்களா?

நெல்லை – 1
13-9-71 வைனதேய ஆத்ரேயன்

(சுமார் அறுபதுக்கும் அதிகமான ரயில்வே டிக்கட்டுகளைத் திரு வைனதேய ஆத்ரேயன் அனுப்பி வைத்திருக்கிறார். - ஆசிரியர்)

சென்ற 23-5-71 'கல்கி'யில் வெளியான ஸ்ரீமதி கமலவேணி அவர்களின் மனக் குறை 'ஆயிரத்தில் ஒன்றாக' இருக்கலாம். வெளிநாட்டினரின் வியாபார ஸ்தாபனத்தைவிட இந்தியர் ஒன்றும் அப்படி நம்பிக்கை, நாணயம், நேர்மை, வாடிக்கையாளரின் சேவை இவைகளில் பிற்போக்கானவர்கள் அல்ல.


நான் 1965 பிப்ரவரியில் சென்னை, சைனா பஜார் நிறுவனம் ஒன்றில் "ஹெலஸ்–ஸாங்" என்ற அலாரம் கடிகாரம் ஒன்றை முப்பது ரூபாய் கொடுத்து வாங்கினேன். சுமார் எட்டு மாதங்கள் சென்றபின்னர் அதைத் தயாரித்த நிறுவனத்துக்குப் பின்வருமாறு நான் ஒரு கடிதம் எழுத நேர்ந்தது: "தங்கள் கடிகாரம் வாங்கியது முதலே பத்து சுற்றுக்கள் சாவி வாங்குவதற்குப் பதிலாக ஆறு சுற்றுக்களே வாங்கி வருகிறது. அதனால், ஒவ்வொரு பன்னிரண்டு மணி நேரம் ஓடியதுமே நின்று போகிறது. அதைத் தங்களுக்கு அனுப்பி வைத்தால் அதற்குப் புதியதாக ஒரு மெயின் ஸ்பிரிங் போட்டுத் தர இயலுமா? அதற்காகும் செலவுகளை நான் அனுப்பி வைக்கிறேன்."



அந்த நிறுவனத்தின் உதவி விற்பனை இன்ஜினியரின் பதில் என்னைத் திக்குமுக்காடச் செய்தது. அவரது பதில்: "தினம் ஆயிரக்கணக்கான கடிகாரங்களைத் திறம்படப் பரிசீலனை செய்த பிறகே விற்பனைக்கு அனுப்பி வைக்கிறோம். எங்களையும் மீறி, அறியாமல், கவனக் குறைவால் ஏதேனும் தவறு ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. தங்களிடம் உள்ள கடிகாரத்தை நாங்கள் பரிசீலித்து அதன் தரக் குறைவைக் கண்டுபிடித்தால், அதே தவறு மீண்டும் மற்ற வாடிக்கையாளருக்கும் ஏற்படாமல் தவிர்க்க எங்களால் முடியுமல்லவா? ஆதலால், நீங்கள் என்றைக்கு அனுப்பி வைத்தாலும் அதற்கு மாற்றாக ஒரு புதிய கடிகாரத்தை உடன் உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்." அவர்களிடமிருந்து 1966 ஜனவரியில் கிடைத்த புதிய கடிகாரம் இன்று வரை யாதொரு தொந்தரவும் இல்லாமல் இயங்கிச் சரியான நேரத்தைக் காட்டி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மயிலம், 10-9-71 எஸ். இராமமூர்த்தி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics
GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

